ஞானமும், வெற்றியும்

சகோ. Dr. ஆனந்தஸ்திரா

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஞானமும் வெற்றியும்

ஆசிரியர்

சகோ. Dr. ஆனந்தஸ்திரா

முதல் பதிப்பு	:	1988
இரண்டாம் பதிப்பு	:	1989
பிரதிகள்	:	1000
மூன்றாம் பதிப்பு	:	1991
பிரதிகள்	:	3000
நான்காம் பதிப்பு	:	1995
பிரதிகள்	:	5000
ஐந்தாம் பதிப்பு	:	2007
பிரதிகள்	:	3000

கிடைக்குமிடம்:

அன்பரின் ஊழியம்,
40, S.P.K. தெரு,
உறையூர், **திருச்சி-3.**

அன்பரின் ஊழிய ஏனைய புத்தக வெளியீடுகள்

சகோ. டாக்டர். ஆனந்தஸ்திரா

1. தெய்வன்பின் வெள்ளமே (சகோதரரின் சாட்சி) (தமிழ், ஆங்கிலம், மலையாளம்)
2. கடன் தீர்க்கும் இயேசு
3. இயேசு தரும் எல்லையில்லா சமாதானம் (தமிழ், ஆங்கிலம்)
4. ஞானமும், வெற்றியும் (தமிழ், ஆங்கிலம்)
5. துயர் துடைத்து வாழ்வில் உயர்த்தும் இயேசு

சகோதரி. மார்கிரேட்ஸ்திரா

1. கண்ணீரின் பாதையில் வெற்றி (தமிழ், ஆங்கிலம்)
2. பெண்ணே, நீ ஏன் கலங்குகிறாய்?

'அன்பின் ஊழியம்' என்ற மாதாந்திரப் பத்திரிகையையும் (தமிழ்), மற்றும் **"MINISTRY OF JESUS"** என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் வாசித்து பயன் பெறுங்கள்.

வருட சந்தா ரூ. 100/-

நூலைப் பற்றி

இந்நூலாசிரியர் சகோ. Dr.ஆனந்தஸ்திராவை தேவன் சிறு வயதிலேயே அளவில்லாத ஞானத்தால் நிரப்பியிருந்தார். அவர் தன் பள்ளி நாட்களில் எப்போதும் வகுப்பில் முதல் மாணவனாகவே திகழ்ந்தார். ஆயினும் தாய், தகப்பனை இழந்ததினிமித்தமும், வறுமையினிமித்தமும் அவரால் உயர்ந்த படிப்பு படிக்க முடியாமற் போய்விட்டது. மேலும் கொடிய ஆஸ்துமா, சிறுநீரகக் கோளாறு ஆகிய வியாதிகளும் அவரை மிகவும் வேதனைப்படுத்தியது. அவர் பல்வேறு சூழ்நிலைகளினிமித்தம், முறையே தன் கல்லூரி, தொழிற்கல்வியை முடித்து விட்டு தன் இளம் வயதிலேயே வேலைக்குச் சேர்ந்தார். அவருடைய 29-ம் வயதில் இயேசு அவருக்குக் காட்சியளித்து அவரை முற்றிலும் குணமாக்கினார். இயேசு கிறிஸ்து அவரைப் பரிசுத்த ஆவியால் நிறைத்து ஞானவரங்களையும், தீர்க்கதரிசன வரத்தையும் கொடுத்து வல்லமையாய் பயன்படுத்தி வருகிறார். மேலும் இயேசு சகோதரனைத் தம்முடைய ஞானத்தினால் நிறைத்ததினிமித்தம் அவர் ஆசியா கண்டத்திலேயே தன் தொழிலில் முதலாவதாகத் திகழும்படி அனுக்ரகம் செய்தார். அவர் ஆசிய அளவில் அவருடைய தொழில் சம்பந்தமாக நடைபெற்ற போட்டிகளில் மூன்று முறை முதலாவதாக வெற்றி பெறும்படி இயேசு தாமே கிருபை செய்தார்.

சகோ. Dr.ஆனந்தஸ்திரா படிக்கிற மாணவர்கள் அனைவரும் படிப்பிலும், அதன்பின் தொழிலிலும் சிறந்து

விளங்க வேண்டுமென்று விரும்புகிறார். ஆகவே தேவ ஆவியானவரின் வழி நடத்துதலின்படி உபவாசத்துடனும், மிகுந்த ஜெபத்துடனும் ஞானம் எங்கிருந்து கிடைக்கும்? இதை எப்படி விருத்தியாக்கலாம் என்று மிகவும் தெளிவாக எழுதியுள்ளார். நர்சரி படிக்கும் மழலைச் செல்வங்கள் முதல் மருத்துவம், இன்ஜினியரிங் படிக்கும் மாணவர்கள் வரை அனைவருக்கும் உபயோகமாக இருக்கும்படி இந்தப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தில் முதல் பதிப்பைப் படித்து கடைசி மாணவராயிருந்து முதல் மாணவராக மாறியவர்கள் பலர். இந்நூலைப் படிக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் இயேசு தாமே சாலமோன் ராஜாவுக்கு அருளியது போல அளவு கடந்த, கடற்கரை மணலத்தனையான ஞானத்தைத் தந்து வாழ்வில் உயர்த்துவாராக! ஆமென்.

அணிந்துரை

Rev. Vidvan **D.G. Thangaraj** B.A., B.T.,
Bishops' Chaplain,
Bishop's House, P.B 31
(Phone: 26102)
8, Raquet Court Lane
Cantonment,
Tiruchirapalli - 620 001.

அன்புச் சகோதரன் Dr. ஆனந்தஸ்திரா அவர்கள் எழுதியுள்ள நூலை நான் கூர்ந்து படித்தேன்; படிக்கப்படிக்க ஆர்வத்தை ஊட்டியது. மனித சமுதாயம் உள்ளங்களை கோணலான வழிகளில் மாற்றிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், பலதிறப்பட்ட பருவ நிலைகளிலும் துறைகளிலுமுள்ள சிறியோர் பெரியோர் அனைவரும் தவறாது படித்து பயன்பெற வேண்டிய நூல்!

"ஞானத்தைச் சம்பாதிக்க வேண்டும் - அதை எவ்வாறு பெறுவது? ஞானத்தின் உறைவிடமான - ஞானக்கருவூலமான ஆண்டவரை அண்டியிருந்து அவரை தியானிப்பதால் ஞானத்தைப் பெறலாம்." இன்றைய உலகிற்கு மிகத் தேவையான அறிவுரை இது. இறைவனைத் தியானித்து அவரை அண்டியிருந்ததின் நிமித்தம் சாலமோன் மன்னன் சிறந்ததோர் ஞானியானான். ஐன்ஸ்டின் என்பவர் பெரிய கணித மேதையாய்த் திகழ்ந்தார் என்பது. தேவனை அண்டியிருப்பதினால் நமக்கு ஞானம் கிடைக்கின்றது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டுகள்.

நூலில் உள்ள மழலைச் செல்வம், இளந்தளிர்கள், மலரும் மொட்டுகள், மலரும் பூக்கள் நாட்டின் கிரீடங்கள் முதலிய தலைப்புகளின் கீழ், குழவிக் கல்வி முதல்

முதுகலை வரை பயிலும் மக்களுக்குப் பயன்படும் பல அரிய கருத்துக்கள் அடங்கியுள்ளன. பணிபுரிகின்றவர்களுக்கும் அறவுரைகளும், அறிவுரைகளும் நிறைந்து கிடக்கின்றன. ஆங்காங்கே பொருத்தமான எடுத்துக் காட்டுகள், உண்மை நிகழ்ச்சிகள் முதலியவை சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை வலியுறுத்தி நிற்கின்றன. எல்லா நிலையினருக்கும் பொருத்தமான பற்பல ஜெபங்கள் உண்டு. அவற்றை ஜெபித்து தியானித்தால் நல்ல பயன் கிடைக்கும்.

நல்ல நடை - அனைவரும் புரிந்து கொள்ளும் எளிய நடை, இந்த அரிய நூலை எழுதியுள்ள அன்புச் சகோதரன் Dr. ஆனந்தஸ்திரா அவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இது போன்ற இன்னும் பல நூல்களை அவர் எழுதி வெளியிட்டு மக்களின் மனம், தேகம், ஆத்தும வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று ஆசிக்கிறேன், வாழ்த்துகிறேன்.

ஆண்டவர் அவரையும், அவருடைய குடும்பத்தையும், அவரது திருப்பணியையும் ஆசீர்வதிப்பாராக!

என்னுரை

"ஞானமும் முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக் கொள்; அதை விடாதே; அது உன்னைத் தற்காக்கும். அதின்மேல் பிரியமாயிரு. அது உன்னைக் காத்துக்கொள்ளும்; நீ அதை மேன்மைப்படுத்து; அது உன்னை மேன்மைப்படுத்தும்; நீ அதை தழுவிக் கொண்டால் அது உன்னைக் கனம் பண்ணும்; அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக் கொடுக்கும்; அது மகிமையான கிரீடத்தை உனக்குச் சூட்டும்; ஞானத்தைச் சம்பாதிக்கிற மனுஷனும், புத்தியைக் கண்டடைகிற மனுஷனும் பாக்கியசாலிகள்; ஏனெனில் முத்துக்களைப் பார்க்கிலும் அது விலையேறப்பெற்றது; பசும் பொன்னால் வரும் ஆதாயத்தைக் காட்டிலும் ஞானம் உத்தமமானது! (அதிகமும், அளவு கடந்ததுமாயிருக்கிறது) ஞானத்தின் வலது கையில் தீர்க்காயுசும், அதன் இடதுகையில் செல்வமும், கனமும் உள்ளது; ஞானத்தின் வழிகள் இன்பமான வழிகள்; ஞானத்தின் பாதைகளெல்லாம் சமாதானம்: விண்ணகத்தையும், மண்ணகத்தையும் தேவன் ஞானத்தினால் அஸ்திபாரப்படுத்தி, புத்தியினால் ஸ்தாபித்தார்; என் மகனே / மகளே, உன் மனம் ஞானத்தைக் கவனித்து புத்திக்குச் செவி சாய்ப்பதாக; அப்பொழுது நீ விவேகத்தைப் பேணிக் கொள்வாய்; உன் உதடுகள் அறிவைக் காத்துக் கொள்ளும்" என்று உலகிலேயே தன் காலத்தில் முதலிடமாய் புகழ்பெற்று சிறந்து விளங்கிய சாலமோன் ஞானி கூறினார்.

ஆம், எனக்குப் பிரியமான சகோதர, சகோதரிகளே! உலகில் இருக்கிற எந்த தாயும், தகப்பனும் தன் மகன்

அல்லது தன் மகள் அறிவில் சிறந்து விளங்க வேண்டும் என ஆவலோடு விரும்புகிறார்கள். உலகத்தில் உள்ள ஒவ்வொரு பெற்றோரின் வாஞ்சையும் அதுவேயாகும். அப்படியிருக்க மனுக்குலத்திற்கு எல்லாம் தாயும் தந்தையுமாய் இருக்கின்ற அன்பின் ரூபி இயேசு தம் பிள்ளைகளாகிய நாம் கல்வியிலும், அறிவிலும், புத்தியிலும், வெவ்வேறு துறைகளிலும் ஞானமுடன் சிறந்து விளங்க வேண்டுமென்று விரும்புவது இயல்புதானே. ஆம் மெய்யாகவே அவர் தாம் படைத்த மனுமக்களை மிகவும் சிநேகிக்கிறவராயிருக்கிறார். (சங். 149:4; உபா 33:3) மனுமக்களாகிய நாம் பல்வேறு காரணங்களினால் (வறுமை, மனநோய், நிலையற்ற புத்தி, ஞாபக மறதி, உபகரணங்களும் ஏதுக்களும் இல்லாமை, தீயசக்திகள்) படிக்க இயலாது தவிக்கின்ற போது அவர் நம்மைப் பார்த்து கண்ணீர் வடிக்கிறார். தாயைக் காட்டிலும் அன்புடைய அவர் (சங். 27:10; ஏசாயா 49:15) கண்ணீரை சிந்துகின்ற தம் மக்களைக் கைவிடுவதில்லை. தம் இணையற்ற மனதுருக்கத்தினால் அவர்களை அணைத்து ஞானத்தைப் போதித்து, வெவ்வேறு விதங்களில் முன்னேற்றுவிக்கின்றார். அவ்வழிகளையும், அவருடைய ஆலோசனைகளையும், தேவனுடைய ஒப்பற்ற ஞானத்தை நாம் பெறுவதற்கு ஏறெடுக்க வேண்டிய விண்ணப்பங்களையும் இப்புத்தகத்தில் தேவ ஆலோசனையின்படி வெளியிட்டுள்ளேன்.

இந்நூலைப் படித்து அதற்கேற்ப நடந்து அவ்விண்ணப்பங்களை ஏறெடுக்கின்ற ஒவ்வொருவரும் எப்பேர்ப்பட்ட இக்கட்டான நிலையில் இருந்தாலும் அவர்கள் தம் தம் துறையில் ஞானத்தினால் வெற்றியும், பேரும் புகழும் பெற்று சிறப்புடன் விளங்குவார்கள் என சர்வ

வல்லமையுள்ள ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசிக்கின்றேன். அப்படியே உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் ஆவதாக. ஆமென். உங்களுக்கு இந்நூலை படித்து இயேசுவால் நடைபெறும் அற்புதங்களையும், அதிசயங்களையும் நாங்களும் உங்களுடன் மகிழ்ந்து இயேசுவைப் போற்ற எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். இந்நூலை மற்றவர்களுக்கும் படிக்கக் கொடுங்கள்.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரன்,
சகோ. Dr.ஆனந்தஸ்திரா.

கர்த்தர் அருளும் ஞானம்

கர்த்தராகிய தேவன் உனக்கு கல்விமானின் நாவைத் தந்தருள்வாராக.' ஏசாயா 50:4

பரிசுத்தரின் அறிவே அறிவு [நீதிமொழிகள் 9:10]

சமீபத்தில் இந்தியாவிலுள்ள ஒரு மிகப்பெரிய தொழிற்சாலையில் இருந்த ஒரு மிக முக்கியமான இயந்திரம் பழுதாகி விட்டது. உடனே அந்த தொழிற்சாலையின் அதிபர் அநேக நிபுணர்களை அழைத்து அந்த இயந்திரம் ஏன் செயல்படவில்லையென்று ஆராயும் படியும், அதை பழுது பார்க்கும் படியும் சொன்னார். அதனால் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பொறியியல் நிபுணர்களும், ஆராய்ச்சியாளர்களும் வந்து மிகுந்த திறமையுடனும், ஞானத்துடனும் அவ்வியந்திரத்தை செயலாற்ற வைக்க முயன்றும் ஒரு பயனுமில்லாமல் போயிற்று. பல மாதங்கள் கடந்தும் அந்த இயந்திரம் செயல்பட்டபாடில்லை. முடிவில் அந்த தொழிலதிபர் மிகச் சோர்வடைந்து விட்டார். இந்த இயந்திரம் செயலாற்றாததால் பல நாட்களாக தொழிற்சாலை ஓடவில்லை. இதனால் அநேக தொழிலாளிகளும் வேலையற்றுத் தவித்துக் கொண்டிருந்ததை எண்ணி அவர் மிகவும் மனம் கலங்கினார். 'யாரை அழைத்து இந்த இயந்திரத்தைப் பழுது பார்த்து செயலாற்ற வைப்பது?' என அவர் சிந்தித்துக் கொண்டிருந்த போது அவருடைய வீட்டிலிருந்த ஒரு வேலைக்கார சிறுவன் 'அந்த இயந்திரத்தை எங்கு வாங்கினீர்கள்?' என்று கேட்டான். உடனே அந்த தொழிலதிபர் சிறுவனை ஒரு வினாடி கூர்ந்து நோக்கினார். பிறகு 'அதெல்லாம் உனக்கு எதற்கு?' என்று கேட்டார். சிறுவனோ, 'ஐயா, யாரிடம் இதை

வாங்கினீர்களோ, அவரை அழைத்தால் அவர் இதை ஒரு வினாடியில் சரி செய்து விடுவாரல்லவா?' எனத் தாழ்மையுடன் கூறினான். அந்த சிறுவன் கூறிய யோசனை தொழிலதிபரின் மனதைத் தொட்டது. உடனே அவர் எல்லா பைல்களையும் எடுத்துப் பார்த்து, அந்த இயந்திரம் மேலை நாடுகள் ஒன்றில் வாங்கப்பட்டது என்று கண்டுபிடித்து, அந்த நிறுவனத்தாருடன் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டார். அடுத்த நாள் அந்த இயந்திரத்தை உண்டாக்கிய நிபுணர் விமானம் மூலம் இந்தியாவிற்கு வந்தார். அவர் 'நாளை காலை அந்த இயந்திரத்தைப் பார்வையிடுவேன்' என்று சொன்னார். இது வரை இயந்திரத்தைச் சரி செய்ய முயன்றும் தோல்வியடைந்த நிபுணர்கள் எல்லோரும் அடுத்த நாள் காலை என்ன நடக்கும் என்பதைக் காண ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார்கள். அடுத்த நாள் காலை அந்த புது நிபுணர் தொழிற்சாலைக்கு வந்து அந்த மிகப்பெரிய இயந்திரம் பழுதாய் கிடப்பதைக் கண்டு மனம் வருந்தினார். அவர் அந்த தொழிற்சாலையின் அதிபரைப் பார்த்து 'நண்பரே, இதை நீங்கள் முன்பே எனக்குத் தெரிவித்திருந்தால் நான்முன்பே இந்த இயந்திரத்தைச் சரி செய்திருப்பேனே!' என்று சொல்லி சுத்தியலை எடுத்து அந்த இயந்திரத்தின் ஒரு பகுதியை இரண்டு தட்டு தட்டினார். அவ்வளவு தான் உடனே அந்த இயந்திரம் செயலாற்றத் தொடங்கி விட்டது. இது உண்மையாகவே நடந்த ஒரு சம்பவம்.

ஆம் எனக்கன்பானவர்களே! இது போலத் தான் மனிதர்களாகிய நமக்கிருப்பது மிகக் குறுகிய ஞானம் தான். ஆனால் இந்த உலகத்தையும், நம்மையும், அண்டசராசரங்களையும், அதிலுள்ள யாவற்றையும்,

படைத்த தேவன் எவ்வளவு அதிக ஞானமுள்ளவராய் இருப்பார் என்பதை மேலேயுள்ள சம்பவத்தின் மூலம் உணர முடிகிறது அல்லவா? திருமறை அவரைப் பற்றி 'தேவனுக்கு விரோதமான ஞானம் இல்லை. அவருடைய ஞானத்தை யாராலும் அளவிட முடியாது. அவர் தமது மிகுந்த ஞானத்தினாலேயே வானத்து நட்சத்திரங்களையும், பூமியையும், அதிலுள்ள எல்லாவற்றையும் படைத்தார் என்று கூறுகிறது (ரோமர் 11:33, ஏசாயா 40:13-14; எரேமியா 10:7,12; யோபு 12:12,13; 11:7,8; சங். 147:5 நீதிமொழிகள் 3:19,20; 8:22-30) மேலும் கர்த்தரே ஞானம், நம்மை உருவாக்கிய தேவனே ஞானத்தின் ஊற்றுக்கண் என்று திருமறை கூறுகிறது. ஆம் பிரியமானவர்களே, சின்னஞ்சிறு பூச்சிகளைப் போல இருக்கிற நாம் உன்னதமான ஞானத்தைப் பெறுவதற்கு ஒரே வழி நம்மைப்படைத்த தேவாதி தேவனை தியானிப்பது தான் அவருடைய சமூகத்தில் காத்திருந்து 'உம்முடைய ஞானத்தை எனக்குப் போதித்தருளும்' என்று சொல்வது தான்.

ஒரு குறிப்பிட்ட நகரத்தில் ஒரு புகழ் பெற்ற ஞானி இருந்தார். அவருக்கு அநேக சீடர்கள் இருந்தனர். சீடர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு விதங்களில் பயன்பட்டு வந்தனர். ஆனால் ஒரு சீடனுக்கு அந்த ஞானி சொல்வது ஒன்று கூட புரியாமலே இருந்ததாம். ஒரு நாள் அவன் மிகவும் குழம்பிய நிலையில் தன் குருவைப் பார்த்து, 'உம்முடைய ஞானம் எனக்கு வருவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டானாம். அதற்கு குரு சீடனைப் பார்த்து, 'சீடனே, நீ காலையில் எழும்பினது முதல் தூங்கப் போவது வரைக்கும் என்னை நன்கு உற்றுப்பார். நான் செய்யும் காரியங்களையெல்லாம் நன்கு கவனித்துப் பார்,

அப்பொழுது நீ மற்ற சீடர்களைப் பார்க்கிலும் உன் குருவைப் போல மேதையாகி விடலாம் எனக் கூறினாராம். இந்த வார்த்தைகள் அந்த அறிவற்ற சீடனின் உள்ளத்தில் பதிந்தது. எனவே அவன் தினமும் காலை எழும்பினது முதல் தன் குருவின் செயல்களையும், அவர் எந்த சமயத்தில் எப்படி பேசுகிறார் என்பதையும், கவனித்து வந்தானாம். அந்த மேதை சாகும் தருவாய் வந்தது. எனவே அவர் தனக்குப் பின் தன் கொள்கைகளைப் பரப்புவதற்குத் தகுந்த சீடனைத் தேர்ந்தெடுக்கும் போட்டி ஒன்றை நடத்தினார். எல்லா சீடர்களும் தங்களுக்குத் தான் குருவின் பதவி கிடைக்கும் என்று எண்ணினர். ஆனால் இந்த அறிவற்ற சீடனைக் குறித்து யாருமே கவலைப்படவில்லை. எனினும் போட்டியின் போது, அவன் தான் குரு கேட்ட எல்லா கேள்விகளுக்கும் குருவைப்போலவே பதில் சொன்னானாம். எனவே அவனையே குரு தனக்கடுத்த மேதையாகத் தேர்ந்தெடுத்தாராம்.

ஆம் எனக்கன்பானவர்களே! தாவீது என்னும் இடைப்பையன் பரிசுத்தரைப் பற்றி, தன்னை உண்டாக்கிய ஆண்டவரைப் பற்றி 24 மணி நேரமும் தியானம் செய்தானாம். (சங்கீதம் 119:97) நாள் முழுவதும் அதைத் தியானித்தானாம். எனவே சங்கீதம் 19:7-ன்படி, ஆடுகளை மேய்த்த, ஞானமற்ற பேதையான எந்தக் கல்வியும் இல்லாத அவனுக்கு, அதிக ஞானம் கிடைத்தது. அவன் எங்கெங்கு சென்றானோ, அங்கெல்லாம் ராஜாவின் அனைத்து உத்தியோகஸ்தர்களைப் பார்க்கிலும் சிறந்து விளங்கினானாம். தன் சத்துருக்களெல்லாரிலும் அதிக ஞானம் படைத்தவனாய் இருந்தானாம். தனக்கு அரசியலைப் போதித்தவர்களெல்லாரைப் பார்க்கிலும்

ஞானமுள்ளவனாய் விளங்கினானாம். (சங்கீதம் 119:98-100; 1சாமுவேல் 18:14,30) ஆம். பரிசுத்தரின் அறிவே, நம்மை உண்டாக்கிய தேவனைக் குறித்து அறிய முற்படுவதே. ஞானத்தின் ஆரம்பம். எனவே நாம் காலை தோறும் எழுந்ததும், நம்மை உண்டாக்கிய கர்த்தருக்கு முன் தலை தாழ்த்தி, பணிந்து, அவரை ஆராதிப்போம். நாம் அப்படி ஆராதனை செய்யும் போது, ஞானத்தின் ஊற்றினிடத்திலிருந்து வரும் ஞானத்தின் ஆறுகள் நம் தலையின் மேல் புரளுவதைக் காணலாம். ஏன்? தேவ குமாரனாகிய இயேசுவும் கூட (லூக்கா 2:46,47; யோவான் 7:15) தேவனுடைய வார்த்தைகளில் சிறந்து விளங்கினார். அவருக்கு 'வார்த்தை' அல்லது 'தேவனுடைய அருள் வார்த்தை' என்னும் மற்றொரு பெயரும் வழங்கப்பட்டது. (யோவான் 1:1; 1யோவான் 1:1,2) அதினிமித்தம் அவர் எல்லாரிலும் அதிகமாய் ஞானத்தில் வளர்ந்தார். அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் என்றும் திருமறை அவரைக் குறித்துச் சொல்லுகிறது. ஆம், கர்த்தரைப் புகலிடமாக கொண்டவர்கள் கர்த்தருக்கு பயப்படுபவர்கள் ஞானத்தில் சிறந்து விளங்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை (லூக்கா 2:52).

ஐன்ஸ்டின் என்ற ஒரு கணித மேதையிடம் அவர் காலத்தில் இருந்த மற்ற கணித மேதைகளெல்லாம் ஒன்று கூடி, 'ஐயா உங்களுடைய கணக்குகளும், சூத்திரங்களும் கிட்டத்திட்ட உலகிலேயே 7 பேருக்குத் தான் தெரியும் என்று கூறுகின்றனரே! எப்படி இந்த அறிவு உங்களுக்கு கிடைத்தது?' என்று கேட்டனராம். உடனே அவர் சிரித்துக் கொண்டே, இன்று மாலை எங்கள் வீட்டிற்கு வாருங்கள். அப்பொழுது எனக்கு எங்கிருந்து இந்த ஞானம் கிடைத்தது

என்பதை அறிந்து கொள்வீர்கள்! என்று சொன்னாராம். இவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் அன்று மாலை ஐன்ஸ்டின் வீட்டிற்கு சென்றார்களாம். அங்கு அவர் தன்னைப் படைத்த கர்த்தரைத் துதித்து, வயலின் என்ற இசைக் கருவியை மீட்டி, பாடி, திருமறையின் வாக்கியங்களை படித்துக் கொண்டிருந்தாராம். உடனே அவர்கள் இதற்கும் நீங்கள் எழுதுகிற கணக்கிற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டார்களாம். அவர் நான் ஒவ்வொரு கணக்கின் மேலும், கீழும் திருமறையின் வார்த்தைகளைக் குறிப்பிடுகிறன். பின் நான் குறிப்பிட்ட அந்தக் கணக்கை எழுதும்போது எனக்குள் இறைவனின் ஞானமே புகுந்து விடுகிறது. அந்த ஞானம் தான் நான் இன்று உலகில் சிறந்து விளங்குவதற்கு காரணமாக இருக்கிறது. நீங்களும் அப்படியே உங்களைப் படைத்த எல்லாம் வல்ல இயேசுவை தேவாதி தேவனை, கர்த்தாதி கர்த்தரை தினமும் காலையிலும், மாலையிலும் ஆராதியுங்கள். அவரைப் பற்றிய புத்தகங்களைப் படியுங்கள். அப்பொழுது உங்களுக்கும் இந்த ஞானம் வரும் என்று சொன்னாராம். ஆம் எனக்கன்பானவர்களே நீங்களும் இவ்விதமாக பரிசுத்தரைக் குறித்து அறியுங்கள்.

சமீபத்தில் எனக்குத் தெரிந்த ஒரு வக்கீல் நண்பர் தன்னோடு சட்டக்கல்லூரியில் படித்த ஒரு மாணவ நண்பரைக் குறித்து என்னிடம் சொன்னார். ஐயா என் அறையில், என்னைப் போன்ற ஒரு சட்டக்கல்லூரி மாணவர் இருந்தார். அவர் என்னைப் போல பாடங்களில் எந்த குறிப்பும் எடுப்பதில்லை. ஆனால் கல்லூரியில் ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதைக் கவனமாய் கேட்பார். ஏதோ புத்தக சாலைக்குச் சென்று புத்தகங்களைப் புரட்டுகிறார். அவ்வளவுதான். நானோ, மிகவும் பிரயாசப்பட்டு இரவும்,

பகலும் படித்துக் கொண்டிருந்தேன். எனவே, இவரைக் குறித்து நான் என் மனதில் அற்பமாய் நினைத்ததுடன், என் நண்பர்களுடன் சேர்ந்து அவரைக் கிண்டலும் செய்தேன். ஆனால், அவரிடமிருந்த ஒரு காரியத்தைக் கவனித்தேன். அவர் காலையும், மாலையும் தன் கையில் வேதாகமத்தை எடுத்து மணிக்கணக்காய் படித்துக் கொண்டிருப்பார். தேவன் தனக்குக் கொடுத்திருக்கிற ஞானத்திற்காய் அவரைத் துதிப்பார். நான், இவர் வகுப்பில் கடைசி மாணவனாய் இருக்கிறாரே. தேவன் இவருக்கு கொடுத்த அற்ப ஞானத்திற்காய் தேவனை துதிக்கிறாரோ!' என்று நினைப்பேன். பின் கல்லூரி இறுதிப் பரீட்சைகள் முடிந்து பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. எல்லோரும் 'யார் முதல் மதிப்பெண்கள் பெற்றிருப்பார்!' என்று ஆவலுடன் பார்த்தோம். ஆனால் என்ன ஆச்சரியம். எல்லோரும் முட்டாள் என்று சொன்ன என் அறை தோழன் தான் முதல் மாணவனாக Outstanding மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்றார் என்று கூறினார். ஆம், பிரியமானவர்களே! அப்படியே நீங்களும் வேதத்திற்கும், தேவனுடைய காரியங்களுக்கும் முதலிடம் கொடுங்கள். அப்பொழுது தேவன் உங்களையும் அபரிமிதமாய் ஆசீர்வதிப்பார். நான் என் சிறுவயதிலிருந்தே எந்த முக்கியமான பரீட்சையாக இருந்தாலும் வழக்கம் போல் ஆலயத்திற்கு செல்வதிலும், வேதம் வாசிப்பதிலும், ஓய்வு நாளில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதிலும் தவறினதேயில்லை. இதைக் கண்ட ஆண்டவர் எனக்குத் தவறாமல் முதல் மதிப்பெண்களே கொடுத்தார். உங்களுக்கும் அப்படியே ஆவதாக.

2. ஆண்டவருக்கு பயப்படுவதே ஞானம் தீமையை விட்டு விலகுவதே புத்தி. யோபு 28:28; சங்கீதம் 111:10; நீதிமொழிகள் 1:7; 9:10,

எனக்கன்பானவர்களே! நாம் பரிசுத்தரைப் பற்றி அதாவது நம்மைப் படைத்த ஆண்டவரைக் குறித்து அறிவதோடு மாத்திரம் நின்று விடக்கூடாது. கர்த்தருக்கு முன்பாக பயந்து நடக்க வேண்டும். கர்த்தருக்குப் பயந்து நடப்பதென்றால் என்ன? ஓர் அதிகாரிக்கு முன்பாக கீழேயிருக்கிற தொழிலாளி பயந்து நடுங்குவது போல் அல்ல. கர்த்தருக்குப் பயப்படுவது என்றால் தீமையை வெறுப்பது அல்லது பொல்லாப்பை விட்டு விலகுவது என்று (யோபு 1:1,8: 2 3, நீதிமொழிகள் 8:13) அர்த்தமாகும். தீமையைச் செய்வதற்கு அநேகரைப் பின் தொடராமலிருப்பதே நமக்குள் ஞானம் வந்ததற்கு அடையாளம். எனக்கன்பானவர்களே! உலகில் நாம் வாழும் நாட்களிலெல்லாம் மற்றவர்கள் நம்மைக் காண்பார்கள் என்பதல்ல. அநேக சமயங்களில் மற்றவர்கள் நம்மைக் காணக்கூடாத நேரங்களும் உண்டு. அப்பொழுது நாம் உலகின் மாயைகளில், தீமைகளில் போய்விடாதபடிக்கு, நம்மைப் படைத்த ஆண்டவர் நியாயாதிபதியாய் நம்மோடு இருக்கிறார் என்ற உணர்வே ஞானத்தின் பிறப்பிடத்திற்கு அறிகுறியாகும்.

தானியேல் என்னும் அடிமை தம்மை அடிமைப்படுத்தின நாட்டில் ஒரு கடினமான வேலையில் அமர்ந்தான். அவன் ஒரு கடினமான படிப்பை படிக்க வேண்டியதாயிருந்தது. அவனுக்கு அந்த இடம் புதிதாக இருந்தாலும் தனக்குக் கிடைத்த புதிதான ராஜகோலாகலங்களில், உலகின் மாயைகளில் தன்னை ஈடுபடுத்தி தனக்குள் இருந்த திவ்யமான ஞானத்தை இழந்துவிடக்கூடாது என்று தீர்மானித்தான். 'உலகின் மாயைகளில் ஈடுபட மாட்டேன் என்று உறுதி பூண்டான்.' (தானியேல் 1:8,20) ஆகவே அவன் உலகின் மாயைகளில்

ஈடுபட்ட தன்னோடு படித்த, எல்லா மாணவர்களைப் பார்க்கிலும், தேசத்தில் இருந்த மற்ற ஞானிகளைப் பார்க்கிலும், புத்திக்கும் ஞானத்திற்கும் அடுத்த எந்த விஷயங்களிலும் ராஜாவின் முன்னிலையில் பத்து மடங்கு தேர்ச்சி பெற்றவனாக இருந்ததை நாம் காண்கிறோமல்லவா? ஆம் என் அன்பு மாணவ மாணவிகளே! நீங்களும் கூட இளமையில் கர்த்தருக்குப் பயந்து, பெற்றோர்களுக்குக் கீழ்படிந்து நடக்கிறீர்கள். அப்பொழுது உங்கள் குறுகிய ஞானத்தைப் பயன்படுத்தி விடாமுயற்சியுடன் முதலிடம் பெறுகிறீர்கள் அல்லவா? ஆனால் நீங்கள் மேல்படிப்பிற்கு வரும்போது உலகின் ஆசாபாசங்கள் உங்களை மேற்கொள்ளும் போது சிறுவயதிலிருந்த ஞானம் உங்களுக்கு இல்லாமற் போகிறது. அநேக பெற்றோர்கள் இன்று என்னை பார்த்துக் கண்ணீர் வடிக்கிறார்கள். சில நாட்களுக்கு முன் கூட ஒரு தாய் என்னைப் பார்த்து கண்ணீருடன் சகோதரனே, நான் ஒரு உயர்நிலைப்பள்ளி ஆசிரியையாக வேலை செய்கிறேன். என் கணவரும் ஆசிரியராக வேலை பார்க்கிறார். எங்கள் மூத்த மகன் எட்டாம் வகுப்பு வரை நன்றாக படித்தான். ஆனால் அவன் 9-ம் வகுப்பில் கெட்ட மாணவர்களோடு சேர்ந்து உலகின் ஆசாபாசங்களில் ஈடுபட ஆரம்பித்தான். இப்பொழுது பத்தாம் வகுப்பு தேர்வு எழுத முடியாமல் கடைசி தஹய்ந்-ல் இருக்கிறான் என்று கண்ணீர் வடித்தார்கள். நாம் தீமையில் ஈடுபட, ஈடுபட அது நம் உடலைக் கெடுக்கும், அல்லது மற்ற தீமையான காரியங்களில் ஈடுபட, ஈடுபட, நம் படிப்பில், தொழிலில் ஞானம் குறைவுபட்டு விடுகிறது. அவற்றில் நம் பெலனைச் செலவழிக்க முற்படும்போது மனதிலுள்ள ஞானம் குறைகிறது. எனக்கன்பானவர்களே! நீங்கள் எங்கு

சென்றாலும் உங்களைப் படைத்த தேவன் உங்களோடு வருகிறார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நாம் நம் பெற்றோருக்கு முன் பாவம் செய்ய பயப்படுவது போல நம்மைப் படைத்த தந்தையும் தாயுமாகிய தேவனுக்கு முன் பாவமும், பொல்லாப்பும் செய்ய பயப்படுவோம் (செய்யவும் மாட்டோம்). அது உங்களுக்கு ஞானத்தின் ஆரம்பமென்று ஞானியாகிய சாலமோன் கூறுகிறான். இவ்விதமாய் கர்த்தருக்குப் பயப்படுதலை நம் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு அருளிச் செய்து தம்மைப் பற்றிய அறிவை உங்களுக்கு புகட்டுவாராக!

கடைசியாக நாம் நம்மைப் பெற்ற தாய் தந்தையிடம் நம் தேவைகளுக்காகக் கேட்பது போல ஞானத்தின் உறைவிடமாகிய தேவனிடம் தினமும் ஞானத்திற்காக கேட்க வேண்டும். ஏசாயா என்ற தீர்க்கதரிசியும் அவ்விதமாக காலைதோறும் தேவனிடத்தில் கேட்டானென்று வேத வசனத்தின் மூலம் அறிந்து கொள்கிறோமல்லவா? (ஏசாயா 50 : 4) 'கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்றும் (மத். 7 : 7) 'உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்' என்றும் (யாக்கோபு 1 : 5) வேதம் கூறுகிறது. ஞானத்திற்கு அதிபதியான கர்த்தரிடத்தில் நாம் தினமும் கேட்க வேண்டும். நாம் ஞானத்தைப் பலரிடத்தில் கேட்கிறோம். நல்லது தான். ஆனால் நாம் அவர்களிடத்தில் கேட்பதற்கு முன்னால் ஞானிகளையெல்லாம் படைத்த எல்லோரையும் விட அதிக ஞானவானாகிய தேவனிடத்தில் கேட்க வேண்டும்.

சாலமோன் என்ற சிறு பிள்ளையாண்டான் தன் தகப்பன் வைத்துப் போன மாபெரும் ராஜ்யத்திற்கு ராஜாவாக நியமிக்கப்பட்டான். சிறுவனாயிருக்கும் போதே அவனுக்குள் தெய்வபயம் புகுத்தப்பட்டது. அவன் ராஜாவான போது அவனுக்கு ஏராளமான சத்துருக்கள் இருந்தனர். அதே சமயம் அவனைப் பார்க்கிலும் பெரிய பெரிய முதியவர்களெல்லாம் இருந்தனர். இதைப் பார்த்து அவன் மனதில் பயம் கொண்டான். எண்ணிக்கைக்கடங்காத திரளான ஜனங்கள் தேசத்தில் அவன் ஆளுகைக்குள் இருந்தனர். எனவே அவன் மிகவும் திகில் கொண்டான். அவனுடைய இருதய வியாகுலங்களைக் கண்ட தேவன் அவனுக்குத் தரிசனமானார். கர்த்தாவே நீர் என்னை இந்த ஏராளமான திரளான ஜனங்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தினீர். இவர்களுடைய ஞானம் என் அறிவுக்கடங்காதது. இவர்களுடைய புத்தியும் என் குறுகிய புத்திக்கு எட்டாதது. எண்ணிக்கைக்கு அடங்காமல் இருக்கிறார்கள். நான் இவர்களை எப்படி நியாயம் விசாரிப்பேன்? எனக்கு ஞானத்தை தாரும் என்று கெஞ்சினான். அவன் ஐசுவரியத்தையோ, மற்றவற்றையோ கேட்கவில்லை. ஞானத்தையே கேட்டான். ஆகவே கர்த்தரும் அவன் மீது இரக்கப்பட்டு அளவு கடந்த ஞானத்தை அவனுக்குக் கொடுத்தார். பூமியில் அவனைப் போன்ற ஞானவான்கள் யாரும் இல்லை. அவன் காலத்தில் வாழ்ந்த மற்ற அரசர்களைக் காட்டிலும், அவன் ஞானத்திலும், ஐசுவரியத்திலும், கனத்திலும் சிறந்து விளங்கினான். பூமியிலுள்ள சகல ஜனங்களும் அவன் முகதரிசனத்தைத் தேடி ஓடினார்கள். (1 இராஜாக்கள் 10:23,24; 3:5-12) என வேதம் கூறுகிறது. எனவே சாலொமோனைப் போல நீங்களும் கூட ஞானத்தின் ஊற்றாகிய இயேசுவை நோக்கி

ஜெபிக்கும் போது அவர் கட்டாயம் உங்களுக்கு சம்பூரண ஞானத்தை தருவார். இந்தப் புத்தகத்தை படிக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கல்விமானின் நாவைத் தந்தருள்வாராக.

ஞானத்தைக் காக்கும் இயேசு

சில மாதங்களுக்கு முன் மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவனை என்னிடம் ஜெபத்திற்காக கொண்டு வந்தார்கள். மாணவனின் உறவினர்கள் என்னிடம் ஐயா, இந்த மாணவன் தன் பள்ளிப் படிப்பிலே அந்த மாவட்டத்திலே முதல் மாணவனாகத் தேறினான். எந்த சிபாரிசும் இன்றி மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கப் பெற்றான். அங்கு முதல் இரண்டு ஆண்டுகள் நன்கு படித்து கல்லூரியிலேயே பெயரும் புகழும் பெற்றான். ஆனால் பின்பு நண்பர்களுடன் சேர்ந்து கொடிய போதை பொருளுக்கு அடிமையாக ஆரம்பித்தான். அது அவன் கல்லீரலையும், மூளையையும் பாதித்தது. இப்போது கல்லூரியில் சொல்லித்தரும் பாடங்களைத் தன் மனதில் வைத்துக் கொள்ளும் சக்தியில்லாமல் போய்விட்டது. நாங்கள் இவனை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டோம். மீண்டும் இவனால் படிக்க முடியுமா? இந்தக் கொடிய போதைப் பொருளுக்கு மீண்டும் அடிமையாகாமல் தப்புவிக்கப்படுவானா? எனக் கண்ணீருடன் கேட்டார்கள். ஆம் எனக்கன்பானவர்களே! நாம் கல்லூரிப் படிப்புக்கு செல்லும்போது மெதுவாக உலக ஆசாபாசங்கள் நம்மை மேற்கொள்ள ஆரம்பிக்கும் போது நமக்கு இளவயதிலிருந்த ஞானம் குறைந்து விடுகிறது. உயரமான ஸ்தலத்தில் நடந்து கொண்டிருந்த நம் கால்கள் மெதுவாக பாதாளத்தை நோக்குகின்ற, தம்மைக் கேவலப்படுத்துகிற கேடான வழிகளுக்கு நம்மை நடத்துகிறதையும் நாம் காண்கிறோம். இதினிமித்தம், நாம் எந்த இடத்தில் ஒரு சமயத்தில் புகழப்பட்டோமோ, அதே இடத்தில் எல்லோராலும்

இகழப்படுகிற நிலைக்கு வருகிறோம். இப்படிப்பட்ட ஞானக்குறைவு இன்று அநேக கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வருகிறதைக் காண்கிறோம். இதிலிருந்து நாம் தப்புவித்துக் கொள்ள வழியுண்டு. (யோ. 14:6) அவர் தேவனால் நமக்கு ஞானமும் ஆனார் என்றும், நமக்கு முன்னோடியாய் நடந்தார் என்றும் வேதம் சொல்லுகிறது. (1 கொரி.1:31 ஏசாயா 52:13) எனவே நீங்கள் அந்த அருள்நாதர் இயேசு கிறிஸ்துவையே நோக்கிப் பாருங்கள். லூக்கா 19:10ன்படி இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார். உலக ஆசாபாசங்கள், குடும்ப சூழ்நிலைகள், கவலைகள், வறுமைகள் போன்றவைகளினால் உங்கள் சிறு வயதில் ஞானம் குன்றிப் போகும்போது, நமக்காக சிலுவையில் அறையுண்ட இயேசுகிறிஸ்துவை நீங்கள் பற்றிப் பிடிப்பீர்களென்றால் (கிறிஸ்துவின் சிலுவையின் இரத்தம் என்னும் தெய்வீக ஞானத்தை நீங்கள் பற்றி பிடிப்பீர்கள் என்றால்) உங்கள் பாவத்தில் இருந்து உங்களுக்கு விடுதலை கிடைப்பதோடு கூட இணையற்ற தெய்வீக ஞானத்தை மீண்டும் பெற்று சிறப்புற்று விளங்குவீர்கள் (1 கொரி. 1:24, 2:6,7; நீதி. 15:24; 14:16; 19:8; 24:5)

பாவத்தினால் நீங்கள் இழந்த ஞானத்தை இயேசு மீண்டும் தந்து, உங்கள் பாவங்களை மன்னித்து, சிலுவையின் இரத்தத்தால் உங்களைக் கழுவி ஞானவான்களாக மாற்றுவார்.

சமீபத்தில் ஒரு கல்லூரி மாணவனை என்னிடம் ஜெபத்திற்காக அழைத்து வந்தார்கள். அவன் தன் பள்ளி கல்வியை நன்றாகப் படித்தான். ஆனால் அவன் கல்லூரிக்கு வந்ததும், கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து ஆபாசப்

புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டான். படிப்படியாக அவனுக்கிருந்த ஞானமும், ஞாபக சக்தியும் குறைந்து, அவன் ஒரு பைத்தியமாகவே மாறி விட்டான். அவனுடைய மனநோயை போக்க அவனுக்கு கொடுக்கப்பட்ட மருந்துகளும் பயனளிக்கமால் அவன் மரண தருவாய்க்கு வந்து விட்டான். எனவே அவனுடைய பெற்றோர்கள் அவனைக் கண்ணீருடன் என்னிடம் அழைத்து வந்தார்கள். நான் அவனுக்கு இயேசு கிறிஸ்துவின் சிலுவை அன்பைக் குறித்து சொல்லி ஜெபித்தேன். ஆண்டவர் இயேசுகிறிஸ்துவும் அவனை கைவிடாமல், மனதுருகி தம் இரத்தத்தால் அவனுடைய பாவங்களைக் கழுவி, அவனுடைய மனநிலையை மாற்றி அவன் இழந்த ஞானத்தைத் தந்து அவன் நன்கு படிக்க அனுக்ரகம் செய்தார். எனக்கன்பானவர்களே! இவ்விதமாய் உலகின் ஆசாபாசங்களால் நீங்களும் கூட ஒருவேளை உங்கள் மேல்படிப்பில் ஞானத்தை இழந்திருக்கலாம். ஆனால் மனம் கலங்காதீர்கள். கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அந்த இரத்தம் உங்களை விடுதலையாக்கும்.

இரண்டாவதாக பிறவியிலேயே நம்மிடம் காணப்படும் வியாதிகளினால் நாம் ஞானத்தில் குறைவுபடுகிறோம். கொடிய ஆஸ்துமா, சிறுநீரகக் கோளாறு, சளித் தொந்தரவு போன்ற வியாதிகளினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற குழந்தைகள் மெதுவாய் பள்ளியில் ஞானத்தை இழந்து விடுகின்றனர். ஆனாலும் உங்களுக்கு ஒரு நற்செய்தி, நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் பிடிப்பீர்களானால் அவர் உங்கள் இளவயதின் வியாதிகளைச் சுகமாக்குகிறார்.

நானும் என் இளவயதில் ஆஸ்துமாவினால் கஷ்டப்பட்டேன். நான் என் தாயையும் தந்தையையும் இழந்ததோடு, இந்த வியாதியின் கொடுமையினாலும் ஏன் வேதனைப்பட வேண்டும் என்று எண்ணி அடிக்கடி மனம் நொந்து போனேன். இந்த வியாதியின் காரணமாக நான் ஒரு ஆண்டில் குறைந்தது இரண்டு மாதங்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவது வழக்கம். ஆனாலும் என் நிலையைக் கண்டு பள்ளி அதிகாரிகள் என்னை இறுதித் தேர்வு எழுத அனுமதித்தனர். நான் அப்பொழுதெல்லாம், 'இயேசுவே உம் இரத்தத்தினால் என்னை சுகமாக்கும். நான் உபயோகிக்கிற பயங்கரமான மருந்துகளால் என் மூளை பாதிக்கப்படாதபடி செய்து, நான் நல்ல முறையில் வெற்றி பெற கிருபை செய்யும்' என்று கண்ணீருடன் ஜெபித்தேன். அருள்நாதர் இயேசு கிறிஸ்துவும் என்மேல் மனதுருகி நான் ஒவ்வொரு முறையும் முதல் மாணவனாக வெற்றி பெறக் கிருபை செய்தார். இப்படியிருக்கையில் நான் பழைய மெட்ரிகுலேசன் படிக்கின்ற போது கொடிய ஆஸ்துமா என்னைப் பாதித்ததால், நான் கடைசி 2 மாதங்கள் பள்ளிக்குப் போக முடியாமல் படுத்த படுக்கையில் இருந்தேன். ஆனாலும் நான் இறுதித் தேர்வை எழுத வேண்டுமென்று மிகவும் துடித்தேன். அதிகாரிகளும் என்மீது இரக்கப்பட்டு தேர்வு எழுத அனுமதி கொடுத்தனர். எனவே நான் 3 மைல்களுக்கு அப்பாலிருந்த அரசினர் பள்ளிக்கு காரில் கொண்டு செல்லப்பட்டு தேர்வு எழுதினேன். நான் தேர்வு எழுதுவதற்கு முன் இயேசுகிறிஸ்துவின் கல்வாரிப் பாடுகளை நினைவு கூர்ந்து அவருடைய சிலுவையைத் தஞ்சமாகக் கொண்டு கண்ணீருடன் ஜெபித்தேன். அருள்நாதர் அந்த முறையும் எனக்கு இரங்கி நான் மறந்த பாடங்களையெல்லாம் நினைவுபடுத்தி நான் முதல்

மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெறக் கிருபை செய்தார். இவ்விதமே உங்களுக்கும் செய்வார். மனம் கலங்காதிருங்கள். நோயுற்ற உங்கள் மூளைப்பகுதியில் அல்லது உங்கள் இருதயத்தில் அல்லது உங்கள் கால்களில், உங்கள் கைகளை வைத்து இயேசுவின் இரத்தத்தை ஆதாரமாகக் கொண்டு ஜெபித்து, பள்ளிக்குச் செல்லுங்கள். உங்கள் பிறவியிலிருந்து வந்த வியாதிகள் உங்கள் ஞானத்தைக் குறைக்காமல் இயேசுவின் இரத்தத்தால் உங்களுக்கு ஜெயம் கிடைக்கும் என்பது நிச்சயம். அப்படியே ஆவதாக.

கடைசியாக படிக்கின்ற வேளையில் குடும்பம், கவலைகள், மனதின் சோர்வுகள், சடுதியில் வந்த ஆபத்துக்கள், இருதயத்தை விட்டு நீங்காத துயரங்கள் போன்றவை நம் படிப்பைத் தாக்குகிறது. இவ்வேளையிலும் கூட எல்லோரிலும் மேலான ஞானவானாகிய தேவகுமாரன் இயேசு உங்களருகில் வந்து தம்முடைய ஞானத்தையே உங்களுக்குக் கொடுத்து, உங்களை அரவணைத்து வெற்றி பெறச் செய்வார்.

சில வருடங்களுக்கு முன் ஒரு தாய் தன் மகனை ஜெபத்திற்காக என்னிடம் அழைத்து வந்தார்கள். அவர்கள் கண்ணீருடன் என்னிடம் ‘சகோதரனே! நன்கு படித்துக் கொண்டிருந்த என் மகன் திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக நான்கு வருடமாக பரீட்சை எழுதாமல் மனம் கலங்கிய நிலையில் இருக்கிறான் இவனுக்காக ஜெபியுங்கள்’ என்று மனவேதனையுடன் சொன்னார்கள். உடனே, நான் கனிவோடு அந்தப் பையனை நோக்கி ‘மகனே உனக்கு என்ன நடந்தது?’ என்று கேட்டேன். உடனே அவன் கண்ணீருடன், ‘நான் உயிருக்குயிராய் நேசித்து வந்த என்

அன்பு தந்தை திடீரென்று இருதய நோயினால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டார். அவருடைய நினைவுகள் எனக்கு அடிக்கடி வருகின்றது. என் தந்தையைப் போல் இனி யார் என்னிடம் உண்மையான அன்பு காட்டுவார்? என நினைக்கும் போது எனக்கு வாழ்க்கையே வெறுத்து, தற்கொலை செய்து கொள்ளலாமென்று நினைவு வருகிறது. என்னால் பரீட்சை எழுத முடியவில்லை' என்று கதறினான். நான் அவனுக்கு இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் அன்பைக் குறித்து சொல்லி, 'அவரே உனக்குத் தந்தையாயிருந்து, உன்னை ஆதரித்து, ஆசீர்வதித்து, அன்பு காட்டுவார். நீ இழந்து போன ஞானத்தை உனக்குத் தருவார்' என்று கூறி, ஜெபித்து அனுப்பினேன். அவன் மிகுந்த மனமகிழ்ச்சி அடைந்தான். நான்கு வருடங்களாக பல முயற்சிகள் செய்து பயனில்லாமல், பரீட்சை எழுத முடியாமல் தவித்த அவன் நல்ல முறையில் பரீட்சை எழுதி வெற்றி பெற இயேசுகிறிஸ்து அனுக்ரகம் செய்தார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் பத்தாவது படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவியை நெய்வேலியிலிருந்து என்னிடம் ஜெபத்திற்கு அழைத்து வந்தார்கள். அவளுடைய பெற்றோர்கள் என்னிடம் கண்ணீருடன் 'ஐயா எப்பொழுதும் முதல் மாணவியாக இருக்கும் இவள் திடீரென்று 2-வது ஸ்தானத்திற்கு வந்ததால் அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் அழுது அழுது இருதயம் பலவீனமாகி, வைத்தியர்கள் அவள் மரணத்திற்கு நெருங்கி விட்டாள் எனக் கூறும் அளவிற்கு இந்நிலைக்கு வந்து விட்டாள்' என்று கதறினார்கள். உடனே நான் என் மகளுக்கு இப்படி நிலை ஏற்பட்டால் என் மனம் எப்படியாய்த் துடிக்கும் என்று நினைத்து மிகக் கண்ணீருடன் ஞானத்தின் கர்த்தாவாகிய

இயேசுவை நோக்கி ஜெபித்தேன். அருள்நாதர் மனதுருகி எனக்கு காட்சியளித்தார். அந்தப் பெண்ணுக்கும் அவர் காட்சியளித்து 'மகளே மனம் கலங்காதே. நீ வெட்கப்பட்ட அதே இடத்தில் உன்னை மறுபடியும் உயர்த்தி வைப்பேன்' என்று கூறினார். உடனே அவள் திடன் கொண்டாள். அவளுடைய இருதய நோய் அகன்றது. அவள் பரீட்சைக்குச் சென்று நல்ல முறையில் எழுதி முதல் மாணவியாக வெற்றி பெற்று இன்று நல்ல நிலையில் இருக்கிறாள். உங்களுக்கும் இயேசு அப்படியே செய்வார். நீங்கள் தோல்விகளையே கண்டு மனம் சோராமல் நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனாகிய இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள். (1 கொரி. 15:57) உங்கள் பரீட்சை விடைத்தாள்களை நன்கு எழுதியும் நல்ல தேர்வு முடிவுகள் உங்களுக்கு வராமலிருக்கும்போது மனம் சோர்ந்து போகிறீர்கள் அல்லவா? பாடங்களை மிகக் கஷ்டப்பட்டு படித்த நீங்கள் பரீட்சை எழுதும் முன் உங்கள் விடைத்தாள்களின் மீது உங்கள் கைகளை வைத்து இயேசுவை நோக்கி ஜெபியுங்கள். அப்பொழுது இயேசு எப்படி ஞானத்திலும், மனுஷர் தயவிலும் விருத்தியடைந்தாரோ (லூக்கா 2:52) அப்படியே உங்களுக்கும் ஞானத்தைக் கொடுப்பதோடு மாத்திரமல்லாமல் திருத்துபவர்களின் கண்களிலும், உபகரணங்களின் வழியிலும் உங்களுக்குத் தயவைத் தருவார். பூமியும் அதன் குடிகளும் கர்த்தருடைய தன்றோ? சங். 24 : 1. நீங்கள் உங்கள் சுயபுத்தியின் மேல் சாயாமல் கர்த்தரிடம் மட்டும் நம்பிக்கை யாயிருங்கள். (நீதி. 3:5)

சில மாதங்களுக்கு முன் கல்லூரியில் முதல் மதிப்பெண்கள் பெற்றுக் கொண்டிருந்த ஒரு மாணவிக்கு தோல்வி என்று தேர்வு முடிவுகள் வந்துவிட்டது. எனவே

அவள் மிகவும் மனம் உடைந்து தற்கொலை செய்து கொள்வதற்கு முயற்சித்தாள். அப்பொழுது ஒரு 'நண்பர் அவளைத் தடுத்து என்னிடம் ஜெபத்திற்கு அனுப்பி வைத்தார். அவள் என்னிடம் 'ஐயா நான் தேர்வில் தோல்வியுடன் வீட்டிற்குச் சென்றால் என் பெற்றோர் என்னைக் கொன்று விடுவார்கள். நான் சாவதைத் தவிர வேறு வழியில்லை' என்று கதறினாள். நான் அவளுக்காகக் கண்ணீருடன் ஜெபித்த போது இயேசு கிறிஸ்து 'மகளே நீ மனம் கலங்காதே நீ வீட்டிற்குப் போவதற்குள் இயேசுவாகிய நான் அதிகாரிகளின் மனதில் கிரியை செய்து நான் உனக்கு நியாயமான முடிவுகளைத் தருவேன்' என்று சொன்னார். அப்படியே அவள் வீட்டில் நுழைந்தவுடன் பல்கலைக்கழக உயர் அதிகாரியிடமிருந்து அவளுக்குத் தந்திவந்திருந்தது. அதில் உங்களைத் தவறாக தோல்வி அடைந்தவர்களின் பட்டியலில் போட்டதற்காக வருந்துகிறோம். தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் 88 மதிப்பெண்களும் யுனிவர்ஸிட்டி ரேங்கும் பெற்றிருக்கிறீர்கள் என்று இருந்தது. கிறிஸ்துவை அறியாத முஸ்லீம் பெண்ணாகிய அவளுக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

ஆம் எனக்கன்பானவர்களே நாம் நம் சுயபுத்தியின் மேல் சாயாமல் ஞானத்தின் அதிபதியாகிய இயேசுகிறிஸ்துவை மட்டும் நோக்கிப் பார்க்கும்போது, அவரை நம்பும்போது நமக்கும் மனுஷர்கள் மத்தியிலும், உபகரணங்களின் மத்தியிலும் தயவு கிடைக்கச் செய்து நம்மை உயர்த்துகிறார். உங்கள் ஒவ்வொருவரையும் அப்படியே ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

ஆவியானவர் தரும் ஞானவரம்

ஞானத்தையும், உணர்வையும் அருளும் ஆவியும் ஆலோசனையையும், பெலனையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் இயேசுவின் மேல் தங்கியிருப்பார்.

(ஏசாயா 11:2)

தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து இந்த உலகில் வாழும் போது ஓர் எளிய வாழ்க்கையை மேற்கொண்டார் (லூக்கா 2:7; மத் 8:20) அவர் ஓர் ஏழை தச்சனுடைய குமாரனாகப் பிறந்து வளர்ந்தார் (மாற்கு 6:3) அக்காலத்தில் அந்நாட்டு முறைமையின்படி தேவ வார்த்தைகளை ஆலயத்தில் போய் கற்றுத் தேர்ந்தார். அப்பொழுதே அவருக்கு சிறந்த ஞானம் உண்டாயிருந்ததென்று வேதம் அவரைக் குறித்து கூறுகிறது (லூக்கா 2:46,47). ஆனால் இந்த ஞானத்தைக் கொண்டு அவரால் தன் தகப்பனாருக்கு தச்சு வேலையில் உதவி செய்ய முடிந்ததேயன்றி உலகம் போற்றும் தேவகுமாரனாக திகழ இயலவில்லை. தமது முப்பதாம் வயதில் இயேசு கிறிஸ்து வல்லமையாக ஊழியம் செய்யும்படி, ஒரு விசேஷித்த ஆவியின் வரத்தினால், அதாவது ஞானத்தையும், உணர்வையும், ஆலோசனையையும், பெலனையும் அருளும் தூய ஆவியினால் தேவன் தம் குமாரனாகிய அவரை அளவில்லாமல் நிரப்பினார். (ஏசாயா 11 : 2, யோவான் 3 : 34, லூக்கா 4 : 1, 14 (a)) இந்த தூய ஆவியானவர் மூலம் மனிதர் யாருக்கும் கிடைக்காத விசேஷித்த ஞானத்தை இயேசுகிறிஸ்து பெற்றார். அவருடைய ஞானமானது செயல்முறையில் பயன்படும் ஞானமாக இருந்தது.

இயேசுகிறிஸ்து தூய ஆவியானவரால் நிரப்பப்பட்டபின் எந்த வைத்தியராலும் குணமாக்க முடியாத திமிர்வாதம், மரணம், குஷ்டம் போன்றவற்றைக் குணமாக்கினார். ஐந்து அப்பத்தையும், இரண்டு மீன்களையும் ஐயாயிரம் பேர் சாப்பிடும் அளவுக்கு விருத்தியாக்கினார். கடல் தண்ணீரின் மீது நடந்தார். குருடருடைய கண்களைத் திறந்தார். இன்னும் எத்தனை எத்தனையோ உலகின் விஞ்ஞானத்திற்கு எட்டாத அறிவின் வல்லமையுள்ள செயல்களைச் செய்து தாமே மெய்யான தேவகுமாரன் என்று நிரூபித்தார். இயேசு கிறிஸ்து எந்த மனிதனையும் மரணத்தில் இருந்து தப்புவிக்க முடியாத ஞானத்தைப் பெற்றிராமல், பிதாவின் ஞானத்தின் ஆவியை, பெலனின் ஆவியை உயிரைக் கொடுக்கக்கூடிய ஆவியை நிரம்பப் பெற்றிருந்தபடியால் அவர் சிலுவையில் அறைப்பட்டு மரித்த பின்னும் மூன்றாம் நாள் உயிரோடெழுந்து பரலோகத்தில் எல்லாம் வல்ல பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து, இன்றும் தம்மைத் தேடும் மக்களுக்கு உயிருள்ளவராய் காட்சியளிக்கிறார். (யோவான் 10:18; 1பேதுரு 3:18; எபேசி 1:20-22; உபாக் 4:29; எரே. 29:13) எனக்கன்பானவர்களே, இப்படிப்பட்ட ஞானத்திற்காய் நாமும் ஒவ்வொரு நாளும் பிதாவை நோக்கிக் கேட்க வேண்டும்.

ஒருவன் ஞானத்தில் குறைவுள்ள வனாயிருந்தால் ஞானத்தை அனைவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிற பிதாவினிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவர் அவனுக்கு அதிக ஞானத்தைக் கொடுப்பார் என்று வேதம் சொல்கிறது. (யாக். 1:5) நசரேயனாகிய இயேசு தச்சனாக இருந்தாலும் அவர் மூலமாய் பலத்த செய்கைகள் நடைபெறும்படி அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த தெய்வீக ஞானத்தைக் குறித்து அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

(மாற்கு 6:2,3) இயேசுகிறிஸ்து தான் இந்த உலகத்தை விட்டுப் போகுமுன் தம் சீடர்களைப் பார்த்து நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன் நான் மரித்து உயிரோடெழுந்து பிதாவினிடத்தில் சென்றாலும் கூட அதிகமாகக் கற்றுத்தேர்ந்திராத உங்களைத் தனியே விட்டு விடாமல் பிதாவினிடத்திலிருந்து என் அதே ஞானத்தையும், உணர்வையும் பெலனையும் அருளுகின்ற ஆவியை உங்களுக்கு அனுப்புவேன் என்று வாக்குப்பண்ணினார். (யோவான் 14:18) சீடர்களும் அதற்காய் அழுது ஜெபித்தபோது அவர்களுக்கும் அந்த ஞானத்தின் ஆவியைத் தந்தார். அப்போ 2:1-4,33) ஆகவே இயேசு கிறிஸ்து விட்டுச் சென்ற அவருடைய சீடர்கள் அதிகமாய் கற்றிராவிட்டாலும் தெய்வீக ஞானம் அவர்கள் மேல் இறங்கியது. அவர்கள் மூலமாகவும், பிறந்தது முதல் சப்பாணியாய் இருந்த மனிதன் எழுப்பப்பட்டதையும், மரித்தோர் உயிர் பெற்றதையும், திமிர்வாதக்காரர் குணமானதையும், படுக்கையில் இருந்த மக்கள் சீடர்களுடைய நிழல் பட்டதும் சுகமானதையும் காண்கிறோம். (அப்போ. 3:1-9; 5:15,16; 9:33-42) ஆகவே அக்காலத்தில் இருந்த கல்விமான்கள் அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதமையுள்ளவர் களென்றும் அறிந்தபடியினால் அவர்களைக் குறித்து ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள். (அப்போ. 4:13)

எனக்கன்பானவர்களே, ஞானிகள் சொல்வது போல 'கற்றது கையளவு - கல்லாதது கடலளவு' என பல சமயங்களில் நாம் உணர்கிறோம். நாம் இப்பொழுது கற்கும் காரியங்கள், உலகில் ஞானம் நாளுக்கு நாள் விருத்தியடைவதால் இன்னும் சில வருடங்களில்

பழையதாய் போவதை நாம் பார்க்கிறோம். பழைய விஞ்ஞானிகளின் கருத்தை புதிய விஞ்ஞானிகள் மறுக்கின்றனர். நம் பிள்ளைகள் படிக்கும் பாடங்களின் அளவும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. நாம் உலகில் ஒவ்வொரு நாளும் தோன்றுகின்ற ஞானத்தைக் கற்போமானால் அதற்கு நம் காலங்கள் முழுவதும் போதாது. ஆகிலும் தேவனாகிய கர்த்தர் ஞானத்தினால் பூமியையும், வானத்தையும் படைத்தார் என்று நாம் திருமறையில் காண்கிறோம். மேலும், மனுக்குலம் பல நூற்றாண்டுகளாய் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிற பூமியிலும, வானத்திலும் உள்ள எல்லாவற்றையும் அவர் ஆறே நாட்களில் படைத்தார் என்பதையும் நாம் வேதத்தின் மூலம் அறிகிறோம். (நீதிமொழிகள் 3:19,20; யோபு 38:36; ஆதியாகமம் 1:1-31). ஆம் அவருடைய அளவு கடந்த, மனிதத்தன்மைக்கு அப்பாற்பட்ட ஞானம் நம்மை இன்றும் விஞ்ஞானத் துறையில் விருத்தியடையச் செய்கிறது. அப்படியிருக்க நாம் நம்முடைய ஞானத்தில் குறைவுயுள்ளவர் களென்பதை தேவனிடம் ஒத்துக் கொண்டு எல்லாம் வல்ல தேவனை நோக்கி உம் தெய்வீக ஞானத்தின் ஆவியை எனக்குத் தாரும் என கேட்கும் போது அவர் தம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆவியானவரை நமக்குத் தந்து, நம்மை விசேஷித்த ஞானத்தினால் நிரப்புகிறார். (யோபு 38:36; 1 கொரிந்தியர் 12:8) ஆம், மாம்சமான யாவர் மேலும் இவ்வித ஞானத்தின் ஆவியை ஊற்ற தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (யோவேல் 2:28-30, எண்ணாகமம் 11:29) நாம் இந்த தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளும்போது உலக ஞானத்தைக் காட்டிலும் விசேஷித்த ஞானவரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

அதிகமாய் படிக்க, வசதியில்லாத ஒரு பெண்மணியை தேவன், வல்லமையாகப் பயன்படுத்தினார். ஒரு சமயம் அவர்கள் ஊழியத்தினிமித்தம் வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டியதாயிருந்தது. ஆனால் சிறிதும் ஆங்கிலம் படித்திராத அவர்கள் திகைத்தார்கள். வானத்தையும், பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள இறைவனிடம் தன்னையும் ஞானத்தின் ஆவியால் நிறைக்கும்படி கண்ணீருடன் ஜெபித்தார்கள். அதைக்கேட்டு தேவனும் அவர்களை ஞானத்தின் ஆவியால் நிறைத்தார். பின் அவர்கள் மிக சரளமாக ஆங்கிலத்தில் தேவசெய்தி கொடுத்தார்கள். அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த கல்விமான்கள் அவர்களிடம் 'நீங்கள் இவ்வளவு அழகாய் ஆங்கிலம் பேசுகிறீர்களே நீங்கள் எந்த உலகப்புகழ்பெற்ற கல்லூரியில் படித்தீர்கள்?' என்று கேட்டார்கள். உடனே அவர்கள் சட்டென 'எல்லா ஞானிகளுக்கும் மேற்பட்ட ஞானத்தின் ஊற்றாகிய தேவனிடமிருந்து நான் இந்த ஞானத்தைப் பெற்றேன்' என்று சொன்னார்கள்.

ஆம், நாம் உலகில் எவ்வளவு தான் கற்றுத் தேர்ந்தாலும் அந்த ஞானம் நம் வாழ்விற்குப் போதாது. யோசேப்பு, மோசே, தானியேல் என்னும் பக்தர்களை தேவன் தன் அபரிமிதமான ஞானத்தினால் நிரப்பியிருந்தார் என திருமறையில் காண்கிறோம் (ஆதியாகமம் 41:38, 39; தானியேல் 1:17; 2:21) யோசேப்பும், தாவீதும் சாதாரண மனிதர்கள் அதிகமாய் கற்க வசதியில்லாதவர்கள். ஆனால் தூய ஆவியானவர் அவர்களுக்குள் இருந்தபடியால் அவர்கள் மிகுந்த ஞானவான்களாய் திகழ்ந்து தேசத்திலேயே உயர்வான நிலையை அடைந்தார்கள். ராஜநிலையை அடைந்தார்கள் என நாம் பார்க்கிறோம். அதே சமயம் தானியேலும், மோசேயும் அதிகமாய் சகலகலையும் கற்றத்

தேர்ந்தாலும் தங்களை அடிமைப்படுத்திய அரசர்களிடம் அந்த ஞானத்தினால் வாழ முடியாது என்று கண்ட அவர்கள் ஞானத்தின் ஆவியைக் கேட்டார்கள். தேவனும் அவர்களை ஞானத்தின் ஆவியால் நிரப்பி வல்லமையாகப் பயன்படுத்தினார்.

நான் ஒரு சகோதரனை அறிவேன். அவர் சிறுவயது முதல் ஞானமுள்ளவராக இருந்தபோதிலும் அவரை மேற்படிப்பு படிக்க வைக்க ஆள் இல்லாததாலும், வசதி இல்லாததாலும் அவரால் படிக்கமுடியாமல் போயிற்று. இதை நினைத்து அவர் ஒவ்வொரு நாள் காலையிலும் இயேசுகிறிஸ்துவிடம், 'ஞானத்தின் ஆவியால் என்னை நிரப்பும்' என்று கண்ணீரோடு பிரார்த்திருப்பார். இயேசு அந்த ஜெபத்தைக் கேட்டு அவரை ஞானத்தின் ஆவியால் நிரப்பி, அவரைவிட அதிகம் படித்தவர்களைக் காட்டிலும் அவருடைய தொழில் இந்தியாவிலேயே முதலிடம் பெறும்படி கிருபை செய்தார். ஒரு சமயம் ஞானவான்கள் எல்லாம் போட்டியிடும் தேர்வ ஒன்றில் இவர் பங்கு பெற்றார். அநேகர் இவரை எள்ளி நகையாடினர். இவரும் கண்ணீருடன் இயேசுவிடம் ஜெபித்துக் கொண்டே அந்த தேர்வில் பங்கு பெற்றார். திடீரென அவர் பயன்படுத்த வேண்டிய மருந்துகள் ஏற்கனவே expiry date ஆகிவிட்டதைக் கண்ணுற்று என்ன செய்வது என அறியாமல் கலங்கினார். அச்சமயத்தில் தூய ஆவியானவர் அவரிடம் 'மகனே' நீ உன் எல்லா வேலைகளையும் உண்மையோடு செய்வதை நான் நன்கு அறிவேன். நீ கலங்காதே இந்த பரீட்சையின் விடை இது என்று கூறினார். அதன் வாயிலாக படித்த மேதைகளைக் காட்டிலும் அவரே சரியான விடை கொடுத்தாக புகழப்பட்டார். ஆம் பிரியமானவர்களே உலகிலே எல்லா ஞானத்தைக் காட்டிலும் நம் தொழிலில், நம் கல்வியில் இயேசுவின்

ஞானம் விளங்கும் போது அவர் மகத்தான காரியங்களைச் செய்து நம்மை உயர்த்துவார்.

ஒரு சமயம் இராணுவம் ஒன்று ஜப்பான் நாட்டிற்குள் புகுந்ததாம். அந்த இராணுவ அதிகாரிக்கு எதிராக எதிராளிகள் தொடர்ந்து சுட்டார்களாம். ஆனால் அவரை அந்த குண்டுகள் ஒன்றுமே செய்ய வில்லையாம். அவர் தன் படையுடன் தொடர்ந்து முன்னேறி வந்து கொண்டேயிருந்தாராம். எதிராளிகள் தங்கள் உச்சக்கட்ட ஞானத்தைப் பயன்படுத்தி செய்த மிகச்சிறந்த குண்டுகளும் அவருக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாததை கண்டு வியந்தனர். இறுதியில் அவர்கள் அவரிடம் சரண் அடைந்து, 'குண்டுகள் உம்மைத் துளைக்காதவாறு என்ன வைத்திருக்கிறீர்?' என்று கேட்டார்களாம். அவர் உடனே பைக்குள் இருந்த திருமறையை எடுத்துக் காண்பித்து, இந்த வேதவசனங்கள் ஆவியானவரின் வல்லமையால் எனக்குள் ஞானமாக அமைகிறது, ஆகவே 'உங்கள் ஞானத்தினால் செய்த எல்லா வெடிகுண்டுகளைப் பார்க்கிலும் என்னைக் காப்பாற்றுகிற இயேசுவின் ஞானம் பெரிதாயிருக்கிறது' என அவர்கள் வியப்படையும்படி கூறினாராம். ஆம், இதை வாசிக்கும் அருமையான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்து இந்த ஆவியின் வரத்தை உங்களுக்கும் தர வல்லவராயிருக்கிறார்.

தொழிற்கல்வி படித்துக்கொண்டிருந்த மாணவன் ஒருவன் அதைப் படித்து முடிக்க இயலாமல் பாதியிலேயே படிப்பை விட்டு பத்து வருடங்கள் வீட்டிலிருந்தான். இனி படிக்கவே முடியாது என்று கூட எண்ணினான். பத்து வருடங்களுக்குப் பின் தேர்வு எழுதுவதற்கு முன் ஞானத்தின் ஆவியைப் பெற ஒரு தேவ ஊழியரிடம் சென்று ஜெபித்துக் கொண்டான். ஆண்டவர் இயேசுகிறிஸ்து அவன்மேல்

மனதுருகி அவனைத் தம் ஞானத்தின் ஆவியால் நிரப்பி அவன் முதல் மாணவனாய் வெற்றிபெற அனுக்ரகம் செய்தார். ஆராய்ச்சி நிலையமொன்றில் வேலை செய்த ஒருவர் மேலும் ஆய்வு செய்ய முடியாதபடி பல நோய்களினால் அவதிப்பட்டாராம். அவரைவிட அதிகம் படித்தவர்களெல்லாம் அவரை வீழ்த்த முயற்சி செய்தனராம். இவரோ ஞானத்தின் பொக்கிஷமாகிய இயேசுகிறிஸ்துவிடம் தம் இயலாமைகளைச் சொல்லி கதறி அழுது, ஜெபித்தாராம். தூய ஆவியானவர் யாரும் கண்டுபிடிக்காத ஏழு காரியங்களை அவருக்கு சொல்லிக் கொடுத்து அவர் அத்தகைய ஆராய்ச்சியில் இந்தியாவிலேயே முதலிடம் பெறும்படி கிருபை செய்தாராம். ஆம் பிரியமானவர்களே, ஒரு மனிதன் தன் சுய ஞானத்தில் மாத்திரம் நம்பிக்கை வைப்பானால் அவனால் பலசமயங்களில் முன்னேற முடிவதில்லை. ஆனால் அவனுடைய சுயஞானத்தோடு தேவ ஆவியானவர் தரும் ஞானம் கலக்கும்போது அவன் விசேஷித்த ஞானத்தைப் பெறுவதை நாம் காண்கிறோம். அப்போது நாம் உலக மக்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் நன்மையான காரியங்களைச் செய்ய முடிகிறது.

சிலசமயங்களில் உலக ஞானம் மனிதனை அழிவுக்கு நேராக நடத்துகிறது. மனித ஞானத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட நியூக்ளியர் குண்டுகள் உலகையே அழிக்கிறதற்கு பயன்படுவதாக நாம் பார்க்கிறோம். ஆனால் தெய்வீக ஞானத்தின் ஆவியோ மரித்தவர்களை உயிர்பெறச் செய்கிறது. வியாதியஸ்தர்களைக் குணமாக்குகிறது. சமாதானத்தைத் தருகிறது. இன்றும் நம் ஞானம் உலகிற்கு சமாதானத்தைக் கொண்டுவரும் அன்பின் வழிகளில் பயன்பட வேண்டுமென்று நாம் விரும்புகிறோமல்லவா? ஒரு மனிதன் பரிசுத்த ஆவியால் நிறையும்போதுதான் அந்த

ஞானம் அவனை சமாதான வழிகளில் நடத்தி உலகின் மக்களுக்கு ஆச்சரியமான காரியங்களைச் செய்கிறது. மேலும் நாம் தேவ ஞானத்தைப் பெறும் போது அநேக கல்விமான்களைக் காட்டிலும் அதிகமாக திருமறையின் ஆழங்களையும் அறிந்து கொள்ள முடியும். நம் வார்த்தைகள் சாதாரண வார்த்தைகளாக இருந்தாலும் தூய ஆவியானவர் மூலம் இலட்சக்கணக்கான மக்களுக்கு அன்பின் பலத்த செய்கைகளைக் கொண்டுவர முடியும். எனவே படிக்கின்ற மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் அந்த ஞானத்தின் ஆவியானவரின் அபிஷேகம் வேண்டுமென்று ஜெபிக்கும் போது அவர் கட்டாயம் உங்களைத் தம் ஆவியால் நிரப்புவார். அப்போது நீங்கள் உங்களோடு படிக்கும் மற்றவர்களைக் காட்டிலும் ஞானத்திலும் அறிவிலும் சாமர்த்தியத்திலும் சிறந்து விளங்குவீர்கள். அப்படியே ஆவதாக ஆமென்.

மழலைச் செல்வங்கள்

**கர்த்தராகிய ஆண்டவரே, நான் பேச அறியேன்;
சிறு பிள்ளையாயிருக்கிறேன், எனக்கு
ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்.
(எரேமியா 1:6, 1 இராஜாக்கள் 3:9)**

சின்னஞ்சிறு தம்பி தங்கைகளே! அன்னை மடியில் துள்ளி விளையாடும் செல்வங்களே நீங்களும் கூட இயேசப்பாவிடமிருந்து ஞானத்தைப் பெற முடியும். காலையில் அம்மா உங்களை எழுப்பியவுடன், உங்கள் பெற்றோருடன் குடும்ப ஜெபத்தில் பங்கு கொள்ளுங்கள். பின்னர் உங்கள் முழங்கால்களை மடக்கி, ஆண்டவர் இயேசுவிடம் பின்வருமாறு கூறுங்கள்.

அன்புள்ள இயேசு ஸ்வாமி! நீங்களும் கூட இவ்வுலகில் சின்னஞ்சிறு பிள்ளையாண்டானாக மரியாள் வீட்டில் வளரும்போது ஞானத்திலும், அறிவிலும், அதிகமதிகமாய் வளர்ந்து பெருகினீர்கள் என்று வேதத்திலிருந்து வளர்ந்து பெருகினீர்கள் என்று வேதத்திலிருந்து அம்மா, அப்பா எனக்கு படித்துக் காண்பித்தார்கள். அன்பே! உம் வார்த்தைகள் என் சின்ன மனதில் பதியும்படி அருள்தாரும். பள்ளிக்குச் செல்ல எனக்கு அதிக பயமாய் இருக்கின்றது. ஆகிலும் சிறந்த ஞானியாகிய நீங்கள் சின்ன குழந்தையாகிய என்கூட வந்து, டீச்சரிடம் நான் ஒழுங்காய் இருக்கவும், அழாமலிருக்கவும், அவர்கள் கற்றுக் கொடுப்பதைக் கவனமாய்க் கேட்டு என் சின்ன மூளையில் நன்கு பதித்து, கஷ்டப்பட்டு படிக்கவும், படித் முடித்தவுடன் பத்திரமாய் வீடுவந்து சேரவும் அருள்தாரும். வீட்டிற்கு வந்ததும், என் ஓய்வுநேரங்கள் போக மிஞ்சிய

நேரங்களில் புத்தகங்களை எடுத்து படிக்கவும், வீட்டுப் பாடங்கள் செய்யவும் அருள்புரியும் இளவயதிலேயே என் சின்ன மூளைக்கு நல்ல ஞாபகசக்தியும், சின்ன வாய்க்கு நன்றாய் வாய் திறந்து பேசும் பெலத்தையும், என் சின்னஞ்சிறு கைகளுக்கு நன்றாக எழுதக்கூடிய சக்தியையும் கொடுத்தருளும். அப்பா, அம்மாவை நான் மிகவும் நேசிக்கிறேன். ஆகவே அவர்கள் என் படிப்பைக் குறித்து ஒருபோதும் கண்ணீர் வடிக்காத படிக்கு என்னை அறிவுள்ளவனாய்! அறிவுள்ளவளாய் மாற்றும். நான் எழுதுகின்ற அல்லது எழுதப் போகின்ற (கால், அரை, முழு) பரீட்சையில் (L.K.G. முதல் 5-வது வகுப்பு வரை) முதல் மாணவனாக முதல் மாணவியாக அல்லது நல்ல மார்க்குகளுடன் வெற்றி பெற அருள்புரியும். நோய்கள், பெலவீனங்கள் அல்லது தீயசக்திகள் என்னைத் தாக்காதவாறு, கிருபை செய்யும். நான் பள்ளிக்குப் போகும் போதும், வரும் போதும் என்னைக் காத்தருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

ஓர் குறிப்பிட்ட தேவ பக்தியுள்ள குடும்பத்தை அறிவேன். அவர்களுக்கு ஜேன் என்ற பெண் குழந்தை ஒன்று இருந்தது. சின்னஞ்சிறு வயதிலிருந்தே, அதன் தாய் அதனைச் சீரும் சிறப்புமாய் வளர்த்து வந்தார்கள். அந்த தாய் ஒவ்வொரு நாளும் குழந்தை ஜேன் பள்ளிக்குச் செல்வதற்கு முன்னால் அவளை ஆயத்தமாக்கி அவளைப் பள்ளிக்கு ஏற்றிச் செல்லும் ரிக்ஷா வருவதற்கு சில நிமிஷங்களுக்கு முன்னால், தன் சின்ன குழந்தையை மடியில் வைத்து, முழங்கால் படியிடச் செய்து, இயேசுவிடம் பிரார்த்தித்து அனுப்புவார்களாம். பள்ளி முடிந்து குழந்தை வீட்டிற்கு வரும்போது, அவள் பள்ளி சீருடைகளைக் கழற்றி, தாகத்தைத் தீர்க்க ஏதாகிலும் கொடுத்து விட்டு திருமறையை

எடுத்து அதிலுள்ள கதைகளை அரை மணி நேரம் சொல்லிக்கொடுத்து, ஒரு மணி நேரம் இளைப்பாறச் செய்து பின்பு வீட்டுப் பாடங்களை தன் அருகே நிறுத்திச் சொல்லிக் கொடுப்பார்களாம். அவள் தூங்கு முன்னர் நெற்றியில் சிலுவைப் போட்டுத் தன் அருகே படுக்க வைத்து தூங்கச் செய்வார்களாம். நாட்கள் கடந்தன. இயேசப்பாவும் இதை நன்கு கவனித்துக் கொண்டே வந்தார். அளவு கடந்த தம் ஞானத்தை, குழந்தை ஜேனுக்குக் கொடுத்தார். அதன் பயனாக அவள் L.K.G. முதல் 5வது வகுப்பு வரைக்கும் முதல் மாணவியாகவே திகழ்ந்தாள். உங்களுக்கும் இயேசு அப்படியேச் செய்வார். ஒரு வேளை சின்ன தம்பி தங்காய் நீ உன் பெற்றோரை இழந்து அல்லது பெற்றோரை விட்டு தூரமாயிருக்கலாம். அல்லது சிறு வயதிலிருந்து நோயின் காரணமாக அல்லது பிறப்பிலிருந்து கண், கை, வாய், கால்கள் சரிவர இயங்காமல் இருக்கலாம். அதைக் குறித்துக் கலங்காதே. தினமும் இயேசப்பாவிடம் அவர் உதவிக்காய் கேள். அப்பொழுது அவர் உனக்கு உதவி செய்வார். ஓர் ஏழைச் சிறுவன் சிறு வயதிலேயே அனாதை குழந்தையானானாம். உலகில் அவனுக்கு ஆறுதல் கூற யாருமே இல்லையாம். அடிக்கடி தன் தாய் தகப்பனை நினைத்து அவன் அழுவானாம். அவன் இப்படி அழுவதை பார்த்து, அவனை அன்புடன் வளர்த்த பாட்டி நாடோறும் அவனுக்காய், இயேசுவின் அணைக்கும் கரம் அவன் மீது இருக்க வேண்டும் என்று ஜெபிப்பார்களாம். இறைவனும் அந்தப் பாட்டியின் பிரார்த்தனையைக் கேட்டு சிறுவனின் அங்கலாய்ப்பைக் கண்டு, இயற்கைகளை (மரம், செடி, கொடிகள் பறவைகள், மண், கடல், நட்சத்திரங்கள்) ஆராயும் திறமையையும் விஞ்ஞான அறிவையும் கொடுத்தார். முடிவில் அந்த ஏழைச் சிறுவன் மேலே எறியும் பந்து கீழே வருவதற்கு பூமியின் ஈர்ப்பு அல்லது இழுக்கும் விசையே

காரணம் என்றும் கண்டுபிடித்து மாபெரும் விஞ்ஞானியானான். அந்த ஏழை அனாதைச் சிறுவன் பெயர் தான் சர். ஐசக் நியூட்டன், இதுபோலவே ஏழைச் சிறுவர்களாகிய உங்களுக்கும் இயேசு ஆண்டவர் செய்வார். இந்த புத்தகத்தை நீ வாசிக்கும் போதே இயேசப்பா உனக்குக் காட்சியளித்து உன் நோய்களைச் சுகமாக்கி நன்கு படித்து முதல் மாணவ மாணவிகளாய்த் திகழ அருள் புரிவார். உங்கள் மாமாவாகிய எனக்கும் எழுதி அனுப்புங்கள். உங்கள் கடிதத்தைக் கண்டு உங்களுக்காகக் கண்ணீருடன் ஜெபிக்க மாமாவாகிய நான் எப்போதும் காத்திருப்பேன். "Congratulations in the name of Jesus" அல்லேலூயா!

ஞானத்தையும், உணர்வையும் அருளும் ஆவியும் ஆலோசனையையும், பெலனையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் இயேசுவின் மேல் தங்கியிருப்பார்.

(ஏசாயா 11:2)

இளந்தளிர்கள்

(6 முதல் 9 வகுப்பு வரை)

இயேசுவிற்கு பன்னிரெண்டு வயதானபோது... அவர் பேசக் கேட்ட யாவரும் அவர் புத்தியையும் அவர் சொன்ன யாவற்றையும் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். (லூக்கா 2-42, 47)

பொதுவாக இந்த வயதில் பெற்றோர்கள் படிக்கின்ற சிறுவர் சிறுமிகளுக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்து. அவர்கள் விருப்பம்போல். அவர்களை விடுவதினால். பள்ளிக்கூடப் பாடங்களில் அவர்கள் அதிகமாய் கவனம் செலுத்துவதில்லை. விளையாட்டிலும். நூதனமான காரியங்களில் ஈடுபடுவதிலும் அநேக சிறுவர் சிறுமியர் இளவயதில் தாங்கள் ஞானத்தை இழந்து விடுகின்றனர். இந்நிலையில் அவர்களை ஒருமுகப்படுத்தி. அவர்களுக்கு ஞானத்தைப் புகட்ட வேண்டுவது தாய் தந்தையர்களின் மீது விழுந்த கடமை ஆகும். இக்காலத்தில் அநேக வீடுகளில் பெற்றோர்கள் இந்த நல்ல காரியத்தையே செய்வதை நாம் பார்க்கிறோம். ஆகவே என் பிள்ளைகளே! நீங்கள் உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கின்ற தகப்பன். தாய் மற்றும் ஏனைய சிறப்புப் பயிற்சி கொடுப்பவர்களின் போதகத்தைக்கேட்டு புத்தியை அடையும்படி கவனியுங்கள். அவர்கள் உங்களுக்கு விளக்குகின்ற நற்போதகத்தையும். உபதேசத்தையும் மறவாதிருங்கள். தகப்பனும். தாயும் ஞானத்திற்கு அடுத்த காரியங்களில் உங்களிடத்தில் கண்டிப்பாய் இருக்கின்ற போது. அவர்கள் மீது வெறுப்பு அல்லது மனக்கசப்பு அடையாதிருங்கள். தாங்கள் இஷ்டம் போல ஊர்சுற்றி. அலைந்து திரியும் பிள்ளைகளைப்போல. எங்களாலும் இஷ்டம் போல் இருக்கமுடியவில்லையே என

நினைத்து சோர்ந்து விடாதீர்கள். இளவயதில் தேவன் நமக்குக் கொடுத்து ஞானத்தை ஒருமுகப்படுத்தி, உற்சாகப்படுத்தி, எழுப்புவது நம் பெற்றோரின் கடமையாகும். நீங்கள் உங்கள் தகப்பனுக்கு பிரியமான குமாரனும், உங்கள் தாய்க்கு மிகவும் அருமையான குமாரத்தியுமானவர்கள் அல்லது பிள்ளையுமானவர்கள் உங்களை அவர்கள் அதிகமாய்ச் சிநேகிக்கின்றபடியினால், நீங்கள் நற்சீர் பொருந்திய பிள்ளைகளாய் மாறும்படிக்கு, ஆகாயத்துப் பறவைகளைப் போலப் பறக்கின்ற உங்கள் மனதின் எண்ணங்களைக் கட்டுப்படுத்த முயன்று ஒருமுகப்படுத்துகின்றனர். (நீதிமொழிகள் 4:7-13; 13:24).

எஸ்தர் எண்ணும் மாபெரும் ராணியும், (127 நாடுகளுக்கு அரசி) தன் இளவயதில் தன்னை வளர்த்த சித்தப்பாவின் அறிவுரைகளைக்கேட்டு, அதை தன் மனதில் பதித்து, வளர்ந்தபடியினால் முடிவில் மாபெரும் நாட்டிற்கு அரசியாக மாறியதை நாம் காண்கிறோம். (எஸ்தர் 2:20). "தீமோத்தேயு", என்னும் மாபெரும் பேராயரும், தன் இளவயதில் தன்னுடைய தாயும், பாட்டி (ஐனிக்கேயாளும், லோவிசாளும்) தனக்குக் கற்பித்த நல் ஆலோசனைகளிலும், ஞான உபதேசங்களிலும் நிலை பெற்றிருந்தபடியினால், மாபெரும் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு முதல் பேராயராக, அறிவுள்ளவராக, கற்றுத் தேறினவராக மாறினதை நாம் காண்கிறோம். (2 தீமோத்தேயு 1:5). தேவ குமாரனாகிய இயேசு இளவயதிலேயே தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, வாழ்ந்தபடியால், ஞானத்தில் அதிகமாய் வளர்ந்து, தன் காலத்தில் இருந்த போதகர்கள் எல்லாரிலும் அதிக ஞானமுள்ளவராய் விளங்கினதை நாம் காண்கிறோம். இயேசுகிறிஸ்து உலக ஞானத்தில் மட்டுமல்லாது, தேவனுக்கடுத்த காரியங்களிலும் தேர்ச்சி பெற்று

வாழ்ந்தபடியினால், அவரால் இந்நிலைக்கு வர முடிந்தது. (லூக்கா 2:40, 47, 52).

என் அன்பு சிறுவர் சிறுமியரே! நீங்களும் கூட மகிழ்ச்சியுடன் பள்ளிக்குச் சென்று, விளையாட்டு நேரத்தில் நன்கு ஓடி, ஆடி விளையாடி வீட்டிலும் சந்தோஷமாக இருங்கள். ஆனால் இரண்டு காரியங்களை மாத்திரம் மறவாமல் இருங்கள். முதலாவது தேவனுடைய காரியத்திற்கு (ஆலயத்திற்கு போவது, பாட்டு பாடுவது, பெற்றோருடன் நற்செய்திக் கூட்டத்திற்குச் செல்வது, ஓய்வு நாள் பாடசாலை செல்லுவது, வேத வசனங்களை மனப்பாடம் செய்வது) முதலிடம் கொடுங்கள். இரண்டாவது படிக்கின்ற வேளையில் முழுகவனம் செலுத்துங்கள். அப்பொழுது நீங்கள் படிப்பிலும், வேதத்திற்கடுத்த காரியங்களிலும் முதலிடம் பெற்று, முதல் மாணவ மாணவிகளாய் விளங்குவது திண்ணம்.

நானும்கூட என் இளவயதில் நன்றாக விளையாடுவேன். அகில இந்திய வேதாகமப் போட்டியில் எப்பொழுதும் முதல் மாணவனாகவே திகழ்வேன். பள்ளியிலும் ஓய்வு நேரங்களிலும் என்னால் முடிந்த அளவு கொஞ்சநேரம் கவனமாய் படிப்பேன். ஆகவே படிப்பிலும் முதலிடம் வகிக்க இயேசு கிருபை செய்தார். ஒரு சமயம் ஒரு நாட்டில், மிகவும் புகழ் பெற்ற விஞ்ஞானி ஒருவருக்கு சிறப்பான விருது ஒன்றை வழங்க அந்நாட்டுத் தலைவர்கள் விருப்பம் கொண்டனர். அதனால் நாடெங்கும் மகத்தான ஒரு பெருவிழா ஏற்பாடு செய்தனர். அந்நாட்டுத் தலைவர்கள் உட்காரும் இடத்திற்கு மத்தியில், மூன்று நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மத்தியில் இந்த விஞ்ஞானிக்கு ஒரு இருக்கை வைக்கப்பட்டிருந்தது. இந்த மூன்று

நாற்காலிகளிலும் அம்மேதை விரும்பும் மக்களை அதில் உட்கார வைக்க அந்நாட்டு தலைவர்கள் அனுமதி அளித்தனர். அநேக மக்கள் அந்த விஞ்ஞானியோடு அந்நாற்காலியில் உட்கார தங்கள் ஆசையைத் தெரிவித்தனர். அம்மேதையிடம் கெஞ்சிக் கேட்டனர். ஆனால் அம்மேதையோ, ஒன்றில் தனது வயதான தாயாரையும், ஒன்றில் தனது வயதான போதகரையும், மற்றொன்றில் தனது இளவயதில் சொல்லிக் கொடுத்த வயதான உபாத்தியாயரையும் உட்கார வைத்து அகமகிழ்ந்தார். பரிசு அளிக்கும் விழாவில் அம்மேதை பேசிய போது, இவர்களே என் வாழ்வின் உயர்ந்த நிலைக்கு காரணம் என்று மகிழ்ச்சியுடன் கூறி முதலாவதாக அவர்களை அதிகம் கௌரவப்படுத்தினாராம். ஆம், எனக்கன்பான சிறுவர் சிறுமியர்களே! இளவயதில் உங்களை ஞானவழியில் நடத்துபவர்களுக்கு அடங்கி இருங்கள். அவர்களைக் கனம் பண்ணுங்கள். பிரார்த்திப்போமா!

ஜெபம்

அன்புள்ள இயேசு ஸ்வாமி! நான் ஒரு சின்னஞ்சிறு சிறுவன், சிறுமி, இன்றைக்கு நான் பள்ளியிலும், வீட்டிலும் படிக்கும்போது, எனக்கு நல்ல ஞானத்தை தாரும். என் சின்னஞ்சிறு மனதை, சிதற விடாமல் படிக்கும் நேரத்தில் படிப்பிலும், விளையாட்டு நேரத்தில் விளையாட்டிலும், தூங்கும் நேரத்தில் தூக்கத்திலும், ஆராதனை வேளையில் ஆராதனையிலும், வேதம் படிக்கும் நேரத்தில் வேதத்திலும் கவனம் செலுத்த அருள் தாரும். வீட்டிலும், பள்ளியிலும் நல்ல பெயர் எடுத்து, ஒவ்வொரு தேர்விலும் நல்ல மதிப்பெண்கள் எடுக்கவும் அருள் செய்யும். நான் உமக்கும்,

என் தாய், தகப்பனுக்கும், எனக்குச் சொல்லிக் கொடுக்கின்ற அல்லது என்னை, உமது ஞானத்தில் வளர்க்கின்ற பெரியோர்களுக்கும் செல்லப்பிள்ளை அல்லவா! என்னை மறவாதிரும். உமது கரத்தில் வளருகின்ற சின்னஞ்சிறு காட்டுப்புறாவாகிய என்னை, ஞானத்தைக் குறைக்கும் தீமைகளினின்று காத்துக்கொள்ளும். நல்ல ஞாபக சக்தியை எனக்குத் தாரும். துரிதமாய் புரிந்து கொள்ளும் மனதையும், பிழையின்றி எழுதுகின்ற கரங்களையும் எனக்குத் தாரும். நோய் நொடிகள் இன்றி, என் போக்கிலும், என் வரத்திலும், என்னைக் காத்துக் கொள்ளும். கொஞ்ச ஞானமுள்ள எனக்கு பெரிய வெற்றியைக் கட்டளையிட்டருளும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

ஜெபத்திற்கு ஆதாரமான வசனங்கள்

யாக்கோபு 1:5; பிரசங்கி 9:10; நீதிமொழிகள் 15:20; 4:3;, ஏசாயா 49:15;, உபா 28:8, சங்கீதம் 121:7, 8; சங்கீதம் 74:9.

குறிப்பு

ஆறாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகள் பள்ளிக்குச் செல்லும் முன்னும், படுக்கைக்குச் செல்லும் முன்னும் இப்பகுதியை படித்து ஜெபிப்பீர்களென்றால், இயேசு உங்களுக்கு பெரிய வெற்றியை அருளிச் செய்வார்!

மலரும் மொட்டுகள்

(10 முதல் 12 வகுப்பு வரை)

இந்த நாலு வாலிபருக்கும் தேவனாகிய கர்த்தர் சகல எழுத்திலும், ஞானத்திலும், அறிவையும், சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலிடத்தில் வெளிச்சமும், புத்தியும், விசேஷித்த ஞானமும் காணப்பட்டது. தானியேல் 1:17; 5:14.

எனக்கன்பான வாலிபச் செல்வங்களே! பொதுவாக உங்கள் வாழ்வின் இவ்வாண்டுகளில் உங்களுக்குள்ளிருந்தும், வெளியிலிருந்தும் உங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிகின்ற ஞானத்தைக் கெடுக்கின்ற அநேக தீமையான சக்திகள் எழுகின்றன (கதைப் புத்தகங்கள், சினிமா, டெலிவிஷன் போன்ற பொழுது போக்குகள், மனதில் உண்டாகும் வெவ்வேறு எழுச்சியின் காரணமாக எழுகின்ற தீய செயல்கள், கெட்ட நண்பர்கள், விளையாட்டுப்போல் பழகி பாம்பின் விஷமாய் மாறுகின்ற பழக்கவழக்கங்கள், பயங்கர மனச்சோர்வுகள், அசதி, சோம்பல்) இவைகளினின்று நசரேயனாகிய இயேசு உங்களைக் காக்க வல்லவராயிருக்கிறார். வழுவாதபடி உங்களைக் காக்கவும், சோதனைகளினின்று முற்று முடிய உங்களை இரட்சிக்கவும் அவர் வல்லவர். நீங்கள் ஒருவேளை இத்தீமையான காரியங்களில் விழுந்திருப்பீர்களானால் இதைப் படிக்கின்ற போதே இயேசுகிறிஸ்து உங்களுக்குக் காட்சியளித்து, மாசற்ற தமது தூய இரத்தத்தினாலும், இணையற்ற தமது தூய ஆவியின் வல்லமையினாலும் உங்களை விடுவிப்பாராக!

நான் கூறும் சில அறிவுரைகளை நீங்கள் மனதில் வைத்து அதன்படி நடக்க பிரயாசப்படுங்கள்.

1. கிறிஸ்துவையும், உங்கள் பெற்றோரையும் தவிர உங்கள் மனதில் வேறு யாரையும் மிக நெருக்கமாக வைத்துக் கொள்ளாதீர்கள்.

2. காலத்தை வீணாக்காதீர்கள்.

3. உங்களுடைய பாடப்பழுவை நினைத்து பயப்படாதிருங்கள்.

4. அன்றன்றுள்ள பாடங்களை அன்றே படித்து விடுங்கள். வீட்டில் படிக்கும்படி கொடுக்கப்பட்ட பாடங்கள் எவ்வளவு இருந்தாலும் அவையெல்லா வற்றையும் முடித்துவிட்டு, திருமறையில் குறைந்தது ஐந்து அதிகாரங்கள் படிக்க முயற்சி செய்யுங்கள்.

5. உங்கள் மீது அக்கறை கொண்டு பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை கனம் பண்ணுங்கள். அவர்களுடைய மனதைப் புண் படுத்தாமலும், பள்ளிக்கும், அதன் பெயருக்கும் தீங்கிழைக்காமலும் இருங்கள்.

6. விடுமுறை நாட்களில், வெளியே எங்கும் போகாமல், படித்த பாடங்களை மீண்டும் படித்து, ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

7. இரவில் குறைந்தது 6 மணி நேரமாவது நன்கு தூங்குங்கள்.

8. புரியாத பாடங்களைத் திரும்ப, திரும்ப எழுதிப் பார்ப்பீர்களானால் அது உங்களை அறியாமலே உங்கள்

மனதில் நன்கு பதிந்துவிடும்.

9. பெற்றோரை கனம் பண்ணுங்கள்.

10. சிலசமயங்களில் ஆரம்பங்களில் வரும் தோல்விகளின் நிமித்தம் மனம் சோர்ந்து போகாதீர்கள்.

11. எக்காரணத்தை முன்னிட்டும் பரீட்சை நேரத்தில் படித்துவிடலாம் என்ற தைரியத்துடன் இருக்காதீர்கள்.

12. உங்களுக்கிருக்கும் சொற்ப ஞானத்துடன் அதிகமாய் முயற்சி செய்யுங்கள். ஒரு பாடம் மனதில் பதியவில்லையென்றால் பாடப்புத்தகத்தை வைத்துவிட்டு, கர்த்தருடைய வேதத்தை நன்கு படித்துவிட்டு பின்பு பாடங்களைப் படியுங்கள் அப்பொழுது பாடங்கள் எளிதாகப் புரியும்.

13. சிலசமயங்களில் தேர்வுக்கு முன் வெளியாகின்ற வினாத்தாள்களை நம்பிப் படிப்பதையும், குறுக்கு வழிகளில் நல் மதிப்பெண்கள் பெற முயற்சிப்பதையும் அறவே விட்டுவிடுங்கள்.

14. தேர்வு சமயங்களில் உங்களுக்குத் தெரிந்த கேள்விகளுக்கு முதலாவது பதில் எழுதுங்கள்.

15. கடைசியாக, உங்கள் சுயபுத்தியின் மேற்சாயாமல் முழு இருதயத்துடன் கர்த்தரை நம்புங்கள். அவரே உங்களுடைய காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்!

நான் ஒரு சகோதரியை அறிவேன். அவள் சிறுவயதில் இங்கே கிறிஸ்துவை குறித்து அறியாதிருங்கள். அந்த பிராயத்தில் அவள் படிப்பிலும் குறைந்த நிலையிலேயே

இருந்தாள். ஆனால் அவள் பள்ளி இறுதி ஆண்டுகளில் இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டாள். ஆனால் அவள் இயேசு கிறிஸ்துவை தன் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டதினிமித்தம் பள்ளியிலும் வெளியிலும் அநேகர் அவளைப் பரிகசித்தனர். பெற்றோரும்கூட அவளை ஞானத்திற்கடுத்த காரியங்ளில் ஊக்குவிக்கவில்லை. ஆனாலும் அவள் அன்றன்றுள்ள பாடங்களை அன்றே படித்து முடிப்பாள். அவள் தன் தோழிகளுடன் பேசுவதிலும், மற்ற பொழுது போக்கான காரியங்களிலும் நேரத்தைச் செலவழிக்காமல் வாஞ்சையுடன் வேதத்தைப் படிப்பதிலும், ஜெபத்திலுமே தன் நேரத்தைச் செலவிட்டாள். அப்படியாய் அவள் வேதத்தைப் படிக்க, படிக்க இயேசு கிறிஸ்து அவளுக்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுத்து அநேகர் அவளுடைய ஞானத்தைக் குறித்து ஆச்சரியப்படும் அளவுக்கு அவளை வகுப்பிலேயே முதல் மாணவியாக திகழச் செய்தார்.

மற்றொரு சகோதரன் கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து படிப்பில் கவனம் செலுத்தாமல் பரீட்சையில் 10 முறைகள் தோல்வியடைந்து விட்டான். பெற்றோர் கண்ணீருடன் அந்த மாணவனை என்னிடம் ஜெபிப்பதற்காக கொண்டு வந்தார்கள். நான் அவனுக்காக ஜெபித்து விட்டு 'மகனே அதிகமாக திருமறையைப் படித்து, ஜெபித்து, உன் பாடங்களைப்படி' என்று அவனிடம் சொல்லி அனுப்பினேன். அவனும் தேவகிருபையால் மனம் திருந்தி அதிகமாக தேவனைத்தேடி 11வது முறை எழுதிய தேர்வில் அற்புதமாக அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்றான்.

ஆம் நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்கேற்ற வழிகளில் நடக்கும்போது அவர் உங்களுடைய தோல்வியையும் வெற்றியாக மாற்றுவார்.

இழுப்பு வியாதியினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு +2 மாணவனை நான் அறிவேன். அவன் தன் பலவீனங்களின் மத்தியிலும் தேவராஜ்யத்துக்கடுத்த காரியங்களை முதலாவதாகத் தேடினான். கிறிஸ்தவ நற்செய்தி கூட்டங்களில் தாழ்மையோடு உதவி செய்வான். இயேசு கிறிஸ்து அவனுடைய வாஞ்சையைக் கண்டு மனதுருகி அவன் 1046/1200 மதிப்பெண்கள் பெறக் கிருபை செய்தார். அதேபோல நீங்களும் உங்கள் பெலவீனங்களின் மத்தியிலும் தேவராஜ்யத்துக்கடுத்த காரியங்களைத் தேடுங்கள். அப்பொழுது இயேசுகிறிஸ்து உங்களுக்கும் பெரிய காரியங்களைச் செய்வார்.

இன்னொரு சகோதரி தன் சுயஞானத்தின் மேல் நம்பிக்கை வைக்காமல் இயேசுகிறிஸ்துவின் மேல் மட்டும் நம்பிக்கை வைத்து, உலகமாயையிலிருந்து தன்னைத் தப்புவித்துக் கொண்டு இளம்பிராயத்திலிருந்தே பெற்றோருக்கும், தேவனுக்கும் கீழ்படிந்து வாழ்ந்தாள். பரீட்சை எழுதுவதற்கு முன் எனக்கு கடிதம் எழுதியிருந்தாள். தேவன் அவள் விசுவாசத்தைக் கனம்பண்ணி, 10-ஆம் வகுப்பில் அவள் 467/500 மதிப்பெண்கள் பெற்று பள்ளியிலேயே முதல் மாணவியாக வெற்றி பெறக் கிருபை செய்தார். ஆண்டவர் இயேசுகிறிஸ்து உங்களுக்கும் அப்படியே செய்வார்.

நீங்கள் ஒருவேளை இந்த உண்மைகளை அறியாமல் உலகின் மாயைகளில் ஈடுபட்டு ஞானத்தில்

குறைந்து காணப்படலாம். ஆனால் இப்பொழுதே நீங்கள் உங்களுக்காகக் கல்வாரியில் தன் கடைசி சொட்டு இரத்தத்தையும் சிந்திய அருள்நாதர் இயேசு கிறிஸ்துவை நோக்கிப்பாருங்கள். அவர் தம்முடைய இரத்தத்தினால் உங்களைக் கழுவி சுத்திகரித்து. உங்களுக்கு அபரிமிதமான ஞானத்தை தருவார் (1யோவான் 1:7.9 நீதிமொழிகள் 2:6) திடன் கொள்ளுங்கள். எனக்கன்பான மாணவச் செல்வங்களே! நீங்கள் பள்ளிக்கு செல்லும் முன்னும் படுக்கைக்குச் செல்லும் முன்னும் பின்வரும் பிரார்த்தனையை தேவ சமூகத்தை நோக்கி ஏறெடுங்கள். தேவன் கட்டாயம் உங்களுக்கு வெற்றியைக் கட்டளையிடுவார்.

ஜெபம்

அன்புள்ள தேவனே, என் வாழ்வைத் தீர்மானிக்கின்ற இந்த அதிமுக்கியமான கல்வி ஆண்டுகளை வெற்றியுடன் கடக்கவும் நான் படிப்பதற்கு குறிக்கப்பட்டுள்ள ஏராளமான பாடங்களை சரிவர படித்து முடிக்கவும் எனக்கு பெலனுமில்லை; திராணியுமில்லை. போதிய ஞானமும் இல்லை. நான் என் அறிவின்மேல் நம்பிக்கை வைக்காமல் முழு இருதயத்துடனும், உத்தம குணத்துடனும் எனக்கு ஜெயம் கொடுக்கிற ஞானமுள்ள இயேசுவாகிய உம்மையே நம்பியிருக்கிறேன். எனக்கு தயவாய் உம்முடைய அளவு கடந்த ஞானத்தையும், புத்தியையும், நன்றாய் படிக்க வேண்டுமென்ற விருப்பத்தையும் உண்மையான முயற்சியையும். செய்கைகயையும் தாரும். நான் எவற்றைப் படிக்க வேண்டுமென்றும், எங்கு தவறுகிறேனென்றும் எனக்கு சொல்லித் தாரும். கடந்த காலத்தில் நான் செய்த தவறுகளையெல்லாம் மன்னித்து உம் இரத்தத்தின் மூலம்

கழுவி சுத்திகரியும். நெருக்கமான (இக்கட்டான) பாதைகளிலிருந்து என்னை விலக்கி, விசாலமான ஞானப்பாதைகளில் ஒளியாய் விளங்க அருள் செய்யும். சோர்வுகளும், துணிகரமான பாவங்களும் என்னை ஆட்கொள்ளாதபடி காரும். உம் குமாரனாகிய இயேசு என்னும் நாமத்தினிமித்தம் பெலவீனனாகிய எனக்கு அருள் செய்யும். திடீரென்று வருகின்ற திகில்கள், ஆபத்துகளினின்று என்னைக் காரும். என் கால்கள் வெற்றிப்பாதையில், உயர்ந்த ஸ்தலங்களில் நடக்கும்படி அருள் செய்யும். நான் வேண்டிக் கொள்ளுவதற்கும் அதிகமாய் எனக்குச் செய்யும். உம் நாமத்தை மகிமைப்படுத்தும்படி என் பள்ளிக்கும், பெற்றோருக்கும், ஏனைய பெரியோருக்கும், நற்பெயரைக் கொண்டுவர அருள் செய்யும். நீர் தரும் வெற்றிக்காய் ஆவலுடன் காத்திருக்கிறேன். என் நம்பிக்கை வீண்போகாதபடி அருள் செய்யும். படிப்பை முடித்தவுடன் தகுதியான உயர்கல்வி கற்க, எனக்கு அவற்றில் இடம் கிடைக்க அருள் செய்யும். நீர் அப்படிச் செய்யப் போவதற்காய் நன்றி, அல்லேலூயா. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே. ஆமென்.

இந்த ஜெபத்திற்கு ஆதாரமான வேதப்பகுதிகள்

(2 நாளாகமம் 20:12; 14:11; 1கொரிந்தியர் 4:10; நீதிமொழிகள் 3:5; சங்கீதம் 18:25; 1கொரிந்தியர் 15:57; ஏசாயா 52:13; ரோமர் 11:33 பிலிப்பியர் 2:13; தானியேல் 5:14; சங்கீதம் 119:34; 27:13; 19:13; நீதிமொழிகள் 3:25, 26; சங்கீதம் 18:50; எபேசியர் 3:20; ஏசாயா 49:23 நீதிமொழிகள் 23:18)

மலரும் பூக்கள்

(கல்லூரி படிப்பு)

மோசே, எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும், செய்கையிலும் வல்லவனானான். அப்போஸ்தலர் 7:22

என் அன்பு மாணவச் செல்வங்களே! பொதுவாக இக்காலத்தில் கல்லூரி வாழ்க்கை என்பது, சுதந்திரமான சந்தோஷமான வாழ்க்கை என்று கூறலாம். நம்மை படிக்க வைக்கும் பெற்றோர், நம் படிப்பின் செலவிற்காக, அன்றாடம் எத்தனை கஷ்டப்பட்டாலும் அவற்றையெல்லாம் கூட மறந்துவிடும் அளவிற்கு சில சமயங்களில் கல்லூரி வாழ்க்கை அமைந்து விடுகின்றது. ஆம், மோசே என்னும் அடிமையின் புத்திரனும் கூட, எகிப்து நாட்டின் கலாசாலைகளில் படிக்கின்ற போது, தன் ஜனங்களின் கஷ்டத்தையே அறவே மறந்து விடுமளவிற்கு அவன் படித்த அந்நாட்டு கலைகள் அமைந்து இருந்தன. ஆகிலும் அவனுடைய தாழ்மையும், சாந்தமும், உண்மையும், அவனுடைய கல்லூரி வாழ்க்கையையும், பிற்கால வாழ்க்கையையும் உயர்த்திற்று. (எபிரெயர் 3:2 Compare With லூக்கா 16:11; எண்ணாகமம் 12:7)

ஆம்! எனக்கன்பானவர்களே! கல்லூரி வாழ்க்கையில் உங்களுக்கு சிறந்த ஞானமும், விவேகமும் வேண்டுமென்றால், உங்களுக்கு இருக்கின்ற ஞானத்தோடே சந்தோஷத்தையும் (தாழ்மையையும்) கூட்டிக் கொள்ளுங்கள். வைராக்கியமும், விரோதமும், கலகமும், லௌகீக சம்பந்தமும், ஜென்ம சுபாவமும், மாமிச இச்சைகளை நிறைவேற்றுதலும், அசுத்தங்களும் கலந்த

ஞானமானது அல்லது அறிவானது உண்மையாகவே தேவாதி தேவன் தரும் ஞானம் அல்ல. இவைகளின் முடிவோ, சரீரம் உருவழிவதும், சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்சம் குறைய எல்லாத் தீமைக்கும் உள்ளாவதும், முடிவில் பெருமையையும் அழிவையும் தேடித் தருபவைகளும் ஆகும். மேன்மைக்கு முன்னானது தாழ்மை. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை (யாக்கோபு 3:13-16; நீதிமொழிகள் 5:11-14; தானியேல் 4:30-33; நீதிமொழிகள் 16:18; 15:33) தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் (லூக்கா 18:14). எனக்கன்பானவர்களே! மோசே அக்காலத்தில் கலாசாலைகளின் சகல படிப்புகளிலும், வாக்கிலும், செய்கையிலும் வல்லவனாய் விளங்கினாலும்கூட கர்த்தருக்கு முன்பாக தன்னை மிகவும் தாழ்த்தினான். தான் எவ்வளவு தான் உயர்ந்த கல்வி கற்றிருந்தாலும் கர்த்தருக்கு முன்பாக, தினமும் தனது சிறுமையையும், இயலாமையையும் சொல்லி, அவர் உதவியை நாடுவதில் எவ்வளவேனும் தயங்கவில்லை. (யாத்திராகமம் 4:10-12, 33:13) எனக்கன்பானவர்களே! கல்லூரி படிப்பைப் படிக்கும் நீங்களும் கூட, சிறு வயதிலிருந்து இந்த உயர்படிப்பு படிக்கின்ற நாள் வரைக்கும் உங்களுக்கு வெற்றியைத் தந்த தேவனை மறவாமல் ஒவ்வொரு நாளும் அவருக்கு நன்றி செலுத்தி, கூடுதலான ஞானத்திற்காக கேளுங்கள். (உபாகமம் 8:12-16; ஏசாயா 17:10; கொலோசெயர் 3:15)

இளவயதில் தேவன் தந்த தாலந்துகளை, (ஞானவரங்களை) உலக மாயைகளில் ஈடுபடுவதினால் இழந்து விடாமல் அவைகளை பல்வேறு வகையில்

விருத்தியாக்க முயற்சி செய்யுங்கள். கல்வியினால் உங்களுக்கு கிடைக்கின்ற ஞானத்தை, எந்தெந்த வகைகளில் பயன்படுத்த முடியுமோ, அவ்வகைகளிலெல்லாம் பயன்படுத்தி விருத்தியடையச் செய்யுங்கள். அப்பொழுது இயேசு உங்களுக்கு கூடுதலான ஞானவரங்களைக் கொடுத்து உங்களை ஆசீர்வதிப்பார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது உலக ஞானம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும். (மத்தேயு 6:33) பேதைகளை ஞானிகளாக்குகிற கர்த்தருடைய வேதத்தில், இரவும் பகலும் நாள் முழுவதும் தியானமாயிருங்கள். அப்பொழுது உங்களுடன் இருக்கிறவர்களைக் காட்டிலும், உங்களைவிட முதியோரைக் காட்டிலும் நீங்கள் அதிக ஞானவான்களாய் மாறிவிடுவீர்கள். சங்கீதம் 19:7, 119:97-100). புறாக்களைப் போலக் கபடற்றவர்களும் சர்ப்பங்களைப் போல ஞானிகளுமாக இருங்கள். (மத்தேயு 10:16) தீமை செய்கிற அநேகரைப் பின்பற்றாதிருங்கள். (யாத்திராகமம் 23 2) ஞானிகளோடே சஞ்சரித்து, ஞானமடையுங்கள். (நீதிமொழிகள் 13:20; 4:10) துன்மார்க்கருடைய வழியில் பிரவேசியாமலும், தீயோருடைய வழியில் நில்லாமலும் ஞானமாய் நடந்து கொள்ளுங்கள். உங்கள் இருதயத்தை புத்திமதிக்கும், உங்கள் செவிகளை அறிவின் வார்த்தைகளுக்கும் சாய்ப்பீர்களாக. தேவன் உங்களுக்குக் கொடுத்த சொற்ப ஞானத்தை, விருத்தியடையச் செய்து உலகிற்கே ஓர் வெளிச்சமாக மாறத்தக்கதாக, உங்கள் கண்களிலும், சரீரத்திலும் உள்ள இருளை நீக்கிப் போடுங்கள். (நீதிமொழிகள் 6:23, லூக்கா 11:34-36) பரிசுத்த ஆவியானவரிடம், ஞானத்திற்காய் தினமும் போராடி

ஜெபியுங்கள். (1கொரிந்தியர் 12:8, மத்தேயு 7:7) இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர் வார்த்தைகளிலிருந்து வரும் ஞானத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். உங்கள் பெற்றோருக்கு கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். தீமை செய்ய அறிவற்ற குழந்தைகளாகவும், நன்மை செய்ய வல்லுனர்களாகவும் இருங்கள். (எபேசியர்6:1)

நசரேயனாகிய இயேசு தாமே உங்கள் தனிமை உணர்வை நீக்கி (விடுதியில் படித்தால்), நற்சீர் அடையும்படி செய்து உங்களுக்கு வெற்றியைக் கட்டளையிடுவாராக! இன்றும் அநேக கல்லூரி மாணவ, மாணவியர் வெவ்வேறு இச்சை ரோகங்களால் (sexual immorality) தங்களைக் கெடுத்துக் கொள்வதையும், ஞானத்தை இழப்பதையும் காண்கிறோம். அநேகர் போதைப் பொருட்களுக்கும் அடிமையாகின்றனர். அவர்கள் இத்தகைய அடிமைத் தனத்திலிருந்து தங்கள் சுய ஞானத்தால், சுய முயற்சியினால் விடுபட முடியுமென்று நினைக்கிறார்களேயன்றி, வானத்தையும், பூமியையும் படைத்த கர்த்தரின் ஒத்தாசையை தேட மனமில்லாமலிருக்கிறார்கள். எனக்கன்பானவர்களே, இதை வாசிக்கின்ற ஒவ்வொருவரையும் இப்படிப்பட்ட காரியங்களிலிருந்து இயேசு தமது மனதுருக்கத்தினால் இப்போதே தப்புவிப்பாராக. ஆமென்!

நீங்கள் இந்த வாலிப வயதில் உங்களைத் தாழ்த்தி, உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு படியையும் இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புக் கொடுத்து, உலக மாயைகளிலிருந்து விலகி இயேசுவுக்காக வாழும் போது அவர் உங்களை அபரிமிதமாக ஆசீர்வதித்து, மற்றவர்களைக் காட்டிலும்

உங்களுக்கு ஞானத்துக்கும், புத்திக்கும் அடுத்த எல்லாக காரியங்களிலும் பத்து மடங்கு சாமர்த்தியத்தைத் தருவார். (தானியேல் 1:20) அருள்நாதர் இயேசுகிறிஸ்து உங்கள் மேல் பிரியமாயிருக்கிறார். அவர் உங்களைக் குறித்து எல்லா ஜனங்களுக்குள்ளும் மகிமையான காரியங்கள் வசனிக்கப்படும்படிச் செய்வார். (சங்கீதம் 87:2,3) சந்தோஷமாயிருங்கள். எப்போதும் புத்தகம் என்று இராமல் ஒவ்வொரு நாளும் சற்று ஓய்வும், வெவ்வேறு தேக அப்பியாசங்களும் எடுத்துக் கொள்ளுங்கள்.

நான் ஒரு சகோதரியை அறிவேன். அவள் தன் கல்லூரி நாட்களில் எப்படி உலக மாயைகளுக்கு தன்னை விலக்கிக் காத்துக் கொள்வது? என்று திகிலுடன் இயேசு கிறிஸ்துவிடம் கண்ணீருடன் ஜெபித்தாள். அவளுடைய கண்ணீரைக் கண்டு அருள்நாதர் இயேசுகிறிஸ்து மனதுருகி அவளை வழுவாதபடி காத்து, மாசின்றி வாழக் கிருபை செய்தார். அவள் தன் ஞானத்தில் குறைவுள்ளவள் என்று தேவ சமூகத்தில் அறிக்கையிட்டு, தன் கல்லூரி நாட்களில் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடி, தன்னால் இயன்றவரை மாயையான காரியங்களிலிருந்து விலகியிருந்தாள். தேவனுக்குப் பயந்து, வகுப்பில் ஆசிரியைகள் சொல்லிக் கொடுப்பதை உன்னிப்பாக கவனித்து வந்தாள். சமயம் கிடைக்கும் போதெல்லாம் அவள் மிகவும் விரும்பி வேதத்தைப் படித்து வந்தாள். அதன் பயனாக ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் அவளுடன் இருந்து தம் விலையேறப் பெற்ற ஞானத்தினால் அவளை நிறைத்து ஆசீர்வதித்தார். அவள் மிக அமைதியாக இருந்தாலும் அவள் கையிட்டுச் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் ஆசீர்வாதம் இருந்ததைக் கண்டு அவளுடைய

வகுப்பு மாணவிகளும், ஆசிரியைகளும் கூட ஆச்சரியப்பட்டனர். தேவன் கிருபையாய் அவள் முதல் மதிப்பெண்கள் பெற்று கல்லூரியிலிருந்து வெளிவரச் செய்தார். ஆம் எனக்கு பிரியமான மாணவச் செல்வங்களே, உங்களுக்கும் கூட இப்படிப்பட்ட மேன்மையான காரியங்களைச் செய்ய இயேசுகிறிஸ்து வல்லமையுள்ளவராய் இருக்கிறார். சந்தோஷமாயிருங்கள். தினமும் நீங்கள் கல்லூரிக்குப் போகுமுன் கீழேயுள்ள பிரார்த்தனையை இயேசு கிறிஸ்துவை நோக்கி ஏறெடுங்கள். அவர் கட்டாயம் உங்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்து உங்களைப் பூமியின் உயர் தலங்களில் நிறுத்துவார். (சங்கீதம் 18:33)

ஜெபம்

சகல ஞானத்திற்கும், அறிவிற்கும் உறைவிடமாகிய இயேசுவே! என்னை இம்மட்டும் உம் கண்ணின் மணியைப் போல பாதுகாத்து இந்த உயர்படிப்பு படிக்க எனக்கு நீர் கிருபை செய்ததற்காக நான் உம்மைத் துதிக்கிறேன். உமக்கு முன்பாக நான் மண்ணென்றும், என்னுடைய ஞானமெல்லாம் குப்பையென்றும் எண்ணுகிறேன். இப்போதும் நீர் என்னில் உமக்குப் பயப்படும் பயத்தையும் தீமையை விட்டு விலகும் மனதையும் உண்டாக்கும். இது வரையிலும் நான் செய்த எல்லாத் தவறுகளையும் நீர் தயவாக மன்னித்து, உம்முடைய திரு இரத்தத்தால் என்னைக் கழுவி பரிசுத்தமாக்கி, உம் மெய்ஞானத்தை எனக்குத்தந்து என் படிப்பை ஆசீர்வதியும். இந்தக் கல்லூரி வாழ்க்கையின் போது நான் உலக மாயைகளில் சிக்கிவிடாதபடி காத்து, என்னை மாசில்லாமல் நிலை நிறுத்தும். என் போக்கிலும்,

வரத்திலும் என்னோடிருந்து காத்துக் கொள்ளும். நான் கையிட்டுச் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் ஆசீர்வாதத்தைத் தாரும். மேலும் பேதையாகிய என்னை உம் வேத வசனங்களின் மூலம் ஞானவானாக்கி, தேர்வுகளில் உயர் மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற கிருபை செய்யும் பரீட்சை நேரங்களில் நோயும், பெலவீனமும் என்னைத் தாக்காதபடி பாதுகாத்தருளும். நான் இயேசுவின் நாமத்தினாலே வெற்றி பெறவும். இந்த வெற்றி மூலம் உம்மைப்பாடி கீர்த்தனம் பண்ணி, சபை நடுவில் உம்மைத் துதிக்கவும் அனுக்ரகம் செய்யும். நீர் அப்படி செய்யப் போவதற்காய் உம்மை துதித்து இயேசுவின் நாமத்தில் இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறேன் பிதாவே. ஆமென்!

இந்த ஜெபத்திற்கு ஆதாரமான வேத பகுதிகள்

(கொலோசெயர் 2:3 உபாகமம் 32:10 யோபு 28:28, நீதிமொழிகள் 1:7; 2:6,7; சங்கீதம் 111:10; 1யோவான் 1:7,9; சங்கீதம் 119:9; யூதா 1:24; உபாகமம் 28:8; சங்கீதம் 19:7 21:2; 2கொரிந்தியர் 2:14; சங்கீதம் 22:22)

நாட்டின் கிரீடங்கள்

(முதுநிலை பட்டதாரிகள், ஆராய்ச்சி படிப்பாளர்கள்
விஞ்ஞான மேதைகள்)

பூமியின் சகல இராஜாக்களைப் பார்க்கிலும், இராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்தவனாய் இருந்தான். சாலொமோன் இருதயத்திலே தேவனாகிய கர்த்தர் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக சகல தேசத்தாரும் அவன் முகதரிசனத்தை தேடினார்கள். ஞானமும் வல்லமையும், வானத்தையும் பூமியையும் படைத்த தேவனாகிய கர்த்தருக்கே உரியது. அவரே ஞானிகளுக்கு ஞானத்தையும் அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். அவரே ஆழமும், மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர். இருளில் இருக்கிறதை அவர் அறிவார். வெளிச்சம் அவரிடத்தில் தங்கும். அவர் நம்மை உயர்த்துகிறவராயிருக்கிறார். ஞானம் அவரிடத்தில் தங்கும் ஞானத்தையும், உணர்வையும், அருளும் ஆவி அவர்மேல் தங்கி இருக்கும். ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத் தரும். அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக் கொடுக்கும். மகிமையான கிரீடத்தை உனக்குத் தரும். ஆலோசனையும், மெய் ஞானமும் தேவனுடையது. அவரே புத்தி, அவராலே ராஜாக்கள் அரசாளுகிறார்கள். பிரபுக்கள் நீதி செலுத்துகிறார்கள். அவராலே அதிகாரிகளும், பிரபுக்களும் பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளும் ஆளுகை செய்து வருகிறார்கள். (1இராஜாக்கள் 10:23,24; தானியேல் 2-20-23, 1சாமுவேல 2:7; ஏசாயா 11:2; பிரசங்கி 7:12; நீதிமொழிகள் 4:9; நீதி 8:14-16)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, தேவன் உங்கள்

மீது தயவு கூர்ந்து இப்படிப்பட்ட உயர்ந்த கல்வியையும் அதற்கான ஞானத்தையும் அருளிச் செய்தபடியால் தினமும் அவரை நன்றியோடு ஸ்தோத்தரியுங்கள். நீங்கள் பின்வரும் பிரார்த்தனையை அனுதினமும் எல்லா ஞானிகளுக்கும் மேலான அளவு கடந்த ஞானமுள்ள தேவனை நோக்கி, முழந்தாளிட்டு ஏறெடுப்பீர்களென்றால், நாட்டிற்கும், உலகிற்கும், முடிவில் உங்களுக்கும் உங்களைச் சார்ந்தவர்களுக்கும், உங்களைப் படைத்த தேவனுக்கும் புகழையும், மேன்மையையும் கொண்டு வருவீர்கள். மகிமையான கிரீடத்தை நீங்கள் அணியும்படி இயேசு அருள் செய்வார். நாளுக்கு நாள் மென்மேலும் உங்களை உயர்த்தி, முடிவில் தலைசிறந்த மேதைகளுக்குள் நீங்களும் ஒருவராக விளங்க அருள் செய்வாராக.

பிரார்த்தனை

என் அறிவுக்கெட்டாத விண்ணகத்தை, மண்ணுலகை படைத்த ஒப்பற்ற ஞானமும், வல்லமையும் உடைய தேவாதி தேவனே, உம்மைப் புகழுகிறேன்; போற்றுகின்றேன். இந்நிலைக்கு என்னை உயர்த்தியமைக்காக உளமாற உமக்கு நன்றி கூறுகின்றேன். கஷ்டப்பட்டு, பல துன்பங்களின் மத்தியில் நான் இந்த உயர் கல்வி நிலையை அடைய வெகுவாய் பாடுபட்ட என் பெற்றோர்களுக்காக, வெவ்வேறு நிலை பேராசிரியர்களுக்காக உமக்கு நன்றி கூறுகிறேன். அன்பே நான் கற்றது, கற்பது, கைமண்ணளவு நான் கற்க வேண்டியது, கல்லாதவைகள், கடற்கரையின் மணலைப்போல ஏராளமாக இருக்கின்றது. இயேசுவாகிய உம்மை மாத்திரம் சார்ந்து, நம்பி இந்த மாபெரும் ஆராய்ச்சிக்குள் என் குறுகிய மூளையை செலுத்துகின்றேன்.

என் மனதில் இருப்பது ஆற்றங்கரையில் உள்ள சிறிய கூழாங்கல்லைப் போன்றது. எனக்கு எதிரே உள்ள போராட்டங்களோ (ஹெர்குலஸ், கோலியாத் போல) மகாபயங்கரமும் அறிவுக்கு எட்டாத விஸ்தாரமுமானது, ஆகிலும் அவை எல்லாவற்றையும், நீர் ஒருவரே படைத்து உம் திட்டப்படி ஒவ்வொருநாளும் நடத்துகிறவராமே! எனவே அந்தகரணங்களில் உமது ஞானத்தை எனக்கு தெரியப்படுத்தி என் உள்ளத்தில் புத்தியைக் கொடுத்தருளும்.

என் இருதயத்தையும், சுயபுத்தியையும் நம்பாமல் உத்தம இருதயத்துடன் என்னைத் தாழ்த்தி உம்மை மாத்திரம், நான் சார்ந்து இருக்கின்றபடியினாலும், பேதையை ஞானியாக்குகின்ற வேதத்தில் நான் வாஞ்சையாக இருக்கிறபடியினாலும் என்னை உயர்த்தும். அறிவுகொட்டாத உம் ஞானத்தை அறியத்தக்க தூய ஆவியின் ஞானவல்லமையையும், அதை பக்குவப்பட்ட செயலாற்றும் முறைக்கு கொண்டுவரும் அறிவையும் எனக்குத்தாரும். இருளில் இருப்பவற்றை (மனிதன் இதுவரைக்கும் கண்டுபிடிக்காதவற்றை) இயேசுவின் மூலம் எனக்கு வெளிப்படுத்தி கற்ற மேதைகளுக்குள் நான் சிறந்து விளங்க அருள்செய்யும். என் மனதை முழுவதும் விஞ்ஞானத்தில் ஈடுபடவிடாமல் (Concentration பண்ணவிடாமல்) அலைய வைக்கும் சிந்தனைகளை என்னை விட்டகற்றும், என் படிப்பு முடியும் வரை போதிய வசதிகளை எனக்குச் செய்து மேலதிகாரிகளின் கண்களிலும் கிருபை கிடைக்கச் செய்யும். எவ்வித நோய்களும், குடும்பத்தின் கஷ்டங்களும், வெவ்வேறு சூழ்நிலைகளும், பணப்பிரச்சனைகளும் அன்றன்று நான் சமாளிக்க வேண்டிய பாடுகளும், என் படிப்பையும், அறிவையும்

மட்டுப்படுத்தாதபடி காத்தருளும். உம் தயவினால் நாளுக்கு நாள் நான் ஞானத்தில் வளர்ந்து, சகல அறிவையும் அறிந்து கொள்ளும் அறிவுடையவனாய் மாறி தேசத்திற்கு ஞான ஒளியாகத் திகழவும், ஞானக்களஞ்சியமாக மாறவும் அனுக்கிரகம் செய்தருளும்.

நான் கற்றுத் தேர்வதற்கு ஏற்ற உபகரணங்களையும் என் மீது அன்பு செலுத்தி என்னை வழி நடத்த நல்ல மேதைகளையும் உம் நாமத்தினிமித்தம் கட்டளையிட்டருளும். எல்லா நேர்முகத் தேர்வுகளிலும் மற்றும் என்னுடைய எல்லா படைப்புகளிலும் (Thesis) அதிகாரிகளின் கண்களில் எனக்குத் தயவு கிடைக்கச் செய்து ஒருவரும் எதிர் பேசவும், எதிர் நிற்கவும் கூடாத வாக்கையும், ஞானத்தையும் இயேசுவின் முலம் எனக்குத் தாரும். என் ஆராய்ச்சிகள் என் உடன் பிறந்த நீர் படைத்து அன்பு செலுத்துகிற மனுக்குலத்திற்கு தீமையை விளைவிக்காமல் சமாதானத்தையும், ஆக்கபூர்வமான எழுச்சியையும், முன்னேற்றத்தையும், பெலனையும் கொண்டுவர அருள் செய்வீராக. நான் வெற்றிகரமாக படித்து முடித்தவுடன் தேசத்திற்கும், உலகிற்கும் நன்மை தருகின்ற உயர்ந்த வேலையில் என்னை வைத்தருளும். ஞான ராஜாவே. உம்முடைய மகிமையான ஞான கிரீடத்தை என்மீது சூட்டியருளும். நான் எப்பொழுதும் உமக்கு முன்பாக நன்றி உள்ளவனாகவும், தாழ்மையுள்ளவனாகவும் நடந்து கொள்வேன். நீர் தெரிந்து கொண்ட எனக்கு மகத்தான இரட்சிப்பை இயேசுவின் மூலம் கட்டளையிட்டருளும். நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறபடியால் எனக்கு உத்தரவு அருளிச் செய்து நான் அறியாததும, எனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களையும், மகத்தான அதிசயங்களையும்

செய்தருளும். நீர் அப்படிச் செய்யப் போகிறபடியால் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

(எரேமியா 10:6,7; ஏசாயா 40:13, 14, 26; தானியேல் 2:23; லூக்கா 1:37, 48; யோபு 38-41 அதிகாரங்கள் யோபு 38:36; சங்கீதம் 19:7; சங்கீதம் 119:99 100; 1 கொரிந்தியர் 12:8

ஏசாயா 11:2; தானியேல் 1:20; லூக்கா 2:52; 1கொரிந்தியர் 13:2; தானியேல் 5:16; லூக்கா 21:15; லூக்கா 14:11; கொலோசெயர் 2:3; சங்கீதம் 18:50; சங். 91:14,15; எரேமியா 32:27 எரேமியா 33:3)

எனக்கு மிகவும் தெரிந்த நண்பர் ஒருவர் சிறு வயதிலிருந்தே அதிக கடினமாக உழைத்து ஒரு சாதாரணமான வேலையில் அமர்ந்தார். கிடைத்த ஊதியத்தில் தன் குடும்பத்தை காப்பாற்றி நல்ல நிலமைக்கு கொண்டு வந்தார். அதோடு கூட தானும் கஷ்டப்பட்டு மேற்படிப்பு படிக்க முயற்சி செய்தார். தன்னுடைய வாழ்வின் முன்னேற்றத்திற்குரிய ஒவ்வொரு படியிலும் தன் சுயபுத்தியின் மேல் நம்பிக்கை வைக்காமல் முழு இருதயத்துடன் இயேசுவையே நம்பி செயல்பட்டு வந்தார். இந்த சகோதரர் தன்னை நடத்துகிறவர்கள், உதவி செய்கிறவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்களிடம் தாழ்மையுடனும், சமாதானத்துடனும் நடந்து கொண்டார். குடும்பத்தை முன்னேற்றுவதற்காக கடினமாக உழைத்தார். மீதியான நேரத்தை வீணாக செலவிடாமல் முழு மூச்சுடன் ஆராய்ச்சி செய்வதில் ஈடுபட்டார். தான் செய்த ஒவ்வொரு ஆராய்ச்சிகளையும் உயர் அதிகாரிகளிடம் காட்டும் முன்பு முழு இருதயத்துடன் சிறு ஜெபத்தை செய்துவிட்டுதான் காட்டுவாராம். அவர் செய்த ஜெபத்தின்

விளைவாக அவருடன் பல மேதைகள் போட்டியிட்டாலும் இவருக்கே தங்கப் பதக்கம் கிடைத்தது. அவர் ஞானத்தின் ஊற்றாகிய இயேசுவையே சார்ந்து ஜீவித்தபடியால் மென்மேலும் உயர்த்தப்பட்டார். இவருக்கு மேலிருக்கும் அதிகாரிகளும் இவரால் உயர்த்தப்பட்டார்கள். ஆம் இதை வாசித்துக் கொண்டிருக்கும் அருமையானவர்களே, நீங்களும் உங்களுடைய முன்னேற்றத்திற்குரிய ஒவ்வொரு படியிலும் ஞானத்தின் ஊற்றாம் இயேசுவையே சார்ந்து ஜீவிக்கும் போது அவர் உங்களையும் அப்படியே ஆசீர்வதித்து மேன்மையான காரியங்களைச் செய்வார்.

அன்பு மலர்களும் அன்பு கரங்களும்

மருத்துவ ஞானம்

நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவியின் விவேகத்தோடும், நிரப்பப்பட்டு, சகலவித நற்கிரியைகளுமாகி கனிகளைத் தந்து, சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும், நீடிய சாந்தமும் உண்டாவதற்கு மகிமையான அவருடைய வல்லமையின்படியே எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம். கொலோசெயர் 1:9-11.

உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே பிணியாளிகளை குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டியருளும் (அப்போஸ்தலர் 4:30) நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் (யாத்திராகமம் 15:26). அவர் தமது வசனங்களை அனுப்பி, அவர்களை குணமாக்கினார் (சங்கீதம் 107:20). அவருடைய வார்த்தைகள், அவர்களுக்கு ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம் (நீதி 4:22) இயேசுவின் தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:5) (1பேதுரு 2:24) இயேசு திரளான ஜனங்களைக் கண்டு மனதுருகி, அவர்களில் வியாதியாயிருந்தவர்களை சொஸ்தமாக்கினார் (மத்தேயு 14:14). இயேசு நம்முடைய நோய்களைச் சுமந்தார் (மத்தேயு 8:17). மருத்துவச்சிகள் அல்லது வைத்தியர்கள் தேவனுக்குப் பயந்ததினால், தேவன் அவர்களுக்கு நன்மை செய்து, அவர்கள் குடும்பங்களைத் தழைக்கும்படி செய்தார் (யாத்திராகமம் 1:20, 21). ஆசா தன்

வியாதியிலும் கர்த்தரை அல்ல. பரிகாரிகளையே தேடினான். (2நாளா 16:12). கர்த்தர் மனிதனின் வியாதியையும், அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவார் (சங்கீதம் 41:3). அவர் நமக்கு சவுக்கியமும், ஆரோக்கியமும் வரப்பண்ணி, நம்மைக் குணமாக்குவார் (எரேமியா 33:6) மக்கள் உங்களைத் தள்ளிவிட்டபடியினால், நான் உங்களுக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி உங்கள் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 30:17)

நாம் ஒளிப்பிடத்தில் உண்டாக்கப்பட்டு பூமியின் தாழ்விடங்களில் விசித்திர வினோதமாய் உருவாக்கப்பட்ட போது, நம் கருவை அவருடைய கண்கள் கண்டது. நம் எலும்புகள் அவரால் நிர்ணயிக்கப்பட்டது. (சங்கீதம் 139:15,16) அன்பே பிரதானம். நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் (யோவான் 15:12) அன்பு நீடிய சாந்தமும், தயவுமுள்ளது. அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் சகிக்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது. (1கொரிந்தியர் 13:4,7,8). இனிமேல் நீ தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசம் கூட்டிக்கொள். (1தீமோத்தேயு 5:23) பிரியமான வைத்தியனாகிய லூக்காவும், உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள் (கொலோசெயர் 4:14). அத்திப்பழத்து அடையைக் கொண்டுவந்து பிளவையின்மேல் பற்று போடுங்கள். அப்பொழுது பிழைப்பான் என்று ஏசாயா என்னும் தீர்க்கதரிசி சொல்லியிருந்தான் (ஏசாயா 38:21).

மேற்கூறிய திருமறையின் பகுதிகளிலிருந்து நம்மை

எல்லாம் படைத்த இறைமகன் இயேசுவே மாபெரும் வைத்தியர் என்றும், அவருடைய தொண்டர்களாகிய லூக்காவும், யூத மருத்துவர்களும், ஏசாயா என்னும் தீர்க்கதரிசியும் மாபெரும் வைத்தியர்களாக திகழ்ந்தார்கள் என்றும் காண்கிறோம். மருத்துவத் தொழிலும், படிப்பும் புனிதமானது. இறைமகனுக்கு அடுத்தாற்போல் மக்கள் அதிகமாய் முக்கியப்படுத்துவது மருத்துவர்களையே. ஆகவேதான் அநேகர் மருத்துவர்களைப் பார்த்து, 'நீங்கள் தான் எங்களைக் காப்பாற்றும் தெய்வம்' எனக்கூறி தலை வணங்குவதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட பொறுப்புள்ள, கௌரவமான வேலைக்காகப் படிக்கின்ற படிப்பு எவ்வளவு மேலானதாக இருக்க வேண்டும்? இந்த உயர் கல்வியைக் கற்று, ஆண்டவருக்குப் பயந்து, கிறிஸ்துவின் அளவு கடந்த பூரண அன்புடன் இத்தொழிலை நாம் செய்கின்ற போது எல்லாம் வல்ல தேவனும் நாம் மருத்துவப்படிப்பை படிக்கின்றபோதும், மருத்துவப்படிப்பை படிக்கின்றபோதும், மருத்துவத் தொழிலை செய்கின்ற போதும் நம்மையும், நம் குடும்பத்தையும் அதிகமதிகமாய் ஆசீர்வதிக்க விரும்புகிறார். கௌரவமான இப்படிப்பிற்கு போட்டிகளும், மதிப்பும் அதிகமாக உலகில் இருக்கிறது. இருந்தாலும், முதலில் தேனைப்போலத் தித்திக்கின்ற இப்படிப்பு உண்மையான பாசமும், அன்பும் இல்லாதவர்களுக்கு, ஒரு சாதாரண கடமை போலவும், வியாபாரக் கல்வி போலவும் மாறி வருகின்றதை நாம் காண்கின்ற பொழுது, கண்ணீர் வடிக்கின்றோம். புனிதமான இப்படிப்பில்தான் அநேக மாணவச் செல்வங்களும் உலகில் எல்லாத் தீய பழக்க வழக்கங்களிலும் ஈடுபட்டு தங்களையே கெடுத்துக் கொள்கின்றனர். பிசாசானவன் உச்சகட்ட வேகத்தை மனிதர் மீது காண்பித்து, மாபெரும் மனுஷ கொலைகாரனாக அன்பு

மலர்களிலும், அன்பு கரங்களிலும் மாறித் திகழ்வதைக் காண்கின்ற பொழுது, உள்ளத்தில் பசுமரத்தாணி போல் வடுக்கள் ஏற்படுகின்றன.

இப்படிப்பட்ட தீமைகள் இதனை வாசிக்கின்ற எந்த ஒரு மருத்துவ நிபுணர்களுக்கும் நேரிடா வண்ணம் இயேசு அவர்களைக் காப்பாராக! மேற்கூறிய தீமைகளினின்று இயேசு கிறிஸ்து, மருத்துவம் படிக்கின்ற உங்களைக்காத்து, தம் இணையற்ற மனதுருக்கத்தை உங்களுக்கும் தருவாராக. அவர் உங்கள் சகோதர, சகோதரிகள் மீது உண்டாகும் தமது அன்பையும் பாசத்தையும் நாளுக்கு நாள் உங்களில் அதிகரிக்கச் செய்கின்ற போது உங்கள் மருத்துவ ஞானமும் பெருகி மருத்துவத்துறையில் நீங்கள் சிறந்தவர்களாய்த் திகழ்வீர்கள். என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில் அன்பு பெருகப் பெருக ஞானமும் கூடும். ஞானம் பெருகப்பெருக தாழ்மையும் அன்பும் உருவாகும். அப்போது இயேசு தாமே இப்பணியைச் செய்கின்ற உங்களைத் தம்மைப் போல் மாற்றுவார்.

அன்னை தெரசா பிரசித்த பெற்ற பட்டம் முடித்த வைத்தியராக இல்லாவிட்டாலும், இன்று உலகிலேயே அவர்களைத் தேடித்தான் அதிகமான நோயாளிகளும் வருகிறார்கள் என ஒரு பத்திரிக்கை ஆசிரியர் தனது பத்திரிக்கையில் எழுதினார். ஆம், எனக்கன்பானவர்களே! அது 'எவ்வளவு உண்மையாயிருக்கிறது?' அவர்கள் சந்திக்கும் நோயாளிகளைப் பார்த்து "ஏன் அம்மாவிடம் நீங்கள் போகிறீர்கள்? அவர்கள் வைத்தியர் அல்லவே" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அந்த அம்மாவின் மனதில்

தோன்றுகின்ற அந்த "அன்பு" என்னும் ஒளி என் வியாதியில் பாதியைக் குணமாக்கி விடுகின்றது, என்று சொன்னார்களாம். அதன் மூலமாகத்தான் இன்று இலட்சக்கணக்கான குஷ்டரோகிகள், செவிடர்கள், பார்வை இழந்தவர்கள் அன்பென்னும் குணமாக்குகின்ற ஔஷதங்களைத் தேடி, அவர்களிடம் செல்கின்றார்கள். நசரேயனாகிய இயேசு கிறிஸ்து மாபெரும் வைத்தியராக இந்த உலகத்தில் திகழ்ந்தார். அவர் மக்களைக் குணமாக்க அவரிடத்தில் விளங்கிய ஒரே வல்லமை மனதுருக்கம் தான் (மத்தேயு 9:35,36; யோபு 36:5). நான் மருத்துவம் படிக்கும் பொழுது முதலாவது அன்பினால் நோயாளியைச் சந்திப்பது தான் மிகச்சிறந்த குணமளிக்கும் தொடுதல் என்று சொல்லிக் கொடுத்தார்கள். அது என் வாழ்க்கையை விட்டு ஒரு நாளும் மறையவில்லை. எனக்கன்பான மருத்துவம் படிக்கும் மாணவச் செல்வங்களே! நீங்கள் மேன்மையான ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். மேன்மையான படிப்பிற்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் மனதில் கிறிஸ்துவின் மனதுருக்கம் பாய்ந்து வருவதாக; 'நொந்து வரும், உடைந்து வரும், பாடுபட்டு வரும், இரத்தக்கண்ணீர் வடிக்கும் நோயாளிகளின் மீது என் அன்பை செலுத்துவேன்' என உங்கள் மனதில் நிர்ணயித்துக் கொள்ளுங்கள். அப்பொழுது மருத்துவத்தின் ஞானம் தானாகவே வரும்.

இரண்டாவதாக நாம் கற்றுத் தரவேண்டிய மற்றொரு காரியம் அயராத உழைப்பு அரசாங்க வேலை செய்பவர்களும் அல்லது மற்ற வேலைகளைச் செய்பவர்களும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வேலை செய்து விட்டு மற்ற நேரங்களில் ஓய்வெடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் இன்று உலகில் நோயில்லாத மனிதனே இல்லை

என்ற சொல்லுமளவுக்கு வியாதிகள் உலகில் பெருகிவிட்டன. எனவே நம்மைத்தேடி 24 மணி நேரமும் ஏராளமான நோயாளிகள் வருகின்றனர். ஆகவே அவர்களை நாம் கவனித்து மருத்துவம் செய்யும்படிக்கு, நாம் கற்கின்ற பாடங்களை விடாமுயற்சியுடன் நல்ல சமாரியனைப் போல (லூக்கா 10:30-37) காயமுற்ற ஒருவனுக்கு சுகமளிக்கத்தக்க பாடத்தை நாம் படிக்கிறோம் என நினைத்து முழுமுயற்சியுடன் படிப்பது நம் கடமையாகும். மருத்துவத்தில் எப்படி நமக்கு ஓய்வு இருக்காதோ அதே போல மருத்துவப்படிப்பும் நாம் ஓய்வெடுத்து விட்டுப் பின் படிக்கிற படிப்பல்ல. நாடோறும் அநேக பாட புஸ்தகங்களை நாம் படிக்க வேண்டியிருக்கிறது. அநேக செய்முறைப் பயிற்சிகளில் ஈடுபட வேண்டியிருக்கிறது. நம்முடைய சரீரம் அல்லது நம்முடைய மனம் வேறு காரியங்களில் ஈடுபடுமென்றால் இவை மிகவும் எளிதாய் சீக்கிரமாய் நம்மை சோர்வடையச் செய்கிறது. ஆகவே பந்தயப் பொருளை நாடுகிறவர்கள் பொறுமையோடு அந்த பொருளையே இலட்சியமாகக் கொண்டு ஓடுவது போல (1கொரிந்தியர் 9:24; எபி. 12:1) நீங்களும் கிறிஸ்துவின் அன்பான குணமளிக்கும் கரங்கள் என்னும் பந்தயப் பொருளை நாடித் தேடுபவர்களாக அதையே இலட்சியமாக வைத்து ஓடுங்கள். அப்பொழுது தேவன் நிச்சயமாக வெற்றியைத் தருவார். எத்தகைய குடும்ப, தனிப்பட்ட கவலைகள் உங்களை வாட்டினாலும் ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் படிக்கின்ற படிப்பு இறைவனுடைய ஒளி முகத்தையும், தேவனுடைய அன்பு கண்ணீர் முகத்தையும் உங்களில் உருவாக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்? ஆகவே இந்நாளில் கர்த்தர் என் முகத்தையே தேடுங்கள் (சங்கீதம் 27:8) என்று சொன்னாரே அதுபோல இறைமகன்

இயேசு கிறிஸ்துவினுடைய மாசற்ற, மனதுருக்கம் நிறைந்த, கண்ணீர் நிறைந்த, குணமாக்குகின்ற, ஜோதி மயமான ஒளி முகத்தை மருத்துவப் படிப்பில் நீங்கள் காணலாம். ஆண்டவர் உங்களை மிகவும் நேசித்து, தம்முடைய அளவு கடந்த ஞானத்தினால் உங்களை நிரப்புவார் (பிரசங்கி 2:26) என்பதில் ஐயமில்லை. நீங்கள் படிக்க ஆரம்பிக்கும் போதே இந்நிலைக்கு நீங்கள் மாறாதபடிக்கு வெவ்வேறு விதமான இருளின் சக்திகள், வெவ்வேறு சூழ்நிலைகள் உங்களை தாக்கினாலும் ஆண்டவரிடத்தில் ஒப்படைத்து விடுங்கள். அப்பொழுது இயேசு தாமே தம்முடைய கையில் தரப்பட்ட ஆடுகளாகிய உங்களை எல்லாத் தீமையினின்றும் விலக்கிக் காத்துக் கொள்வாராக. அடுத்தடுத்து வரும் தோல்விகளில் மனம் சோர்ந்து போகாதீர்கள். ஆண்டவரே உங்களுக்கு எல்லாமுமாய் இருப்பார். நீங்கள் படிக்க வேண்டிய கஷ்டமான பாடத்தைக் குறித்தும் மனம் கலங்காதிருங்கள். இயேசுவை நம்பிச் செல்லும் மருத்துவச் செல்வங்களாகிய உங்களை தேவன் பூமியின் உயர்விடத்தில் வைப்பார். (சங். 41:2). ஆண்டவர் உங்களை உயர்த்தி ஆசீர்வதிப்பார். பரீட்சை நேரத்தில் கலங்காதீர்கள். சிறுமைப்பட்ட உங்களுக்கு உதவி செய்யும்படிக்கு அவர் உங்களுக்கு முன்பாகச் சென்று உங்கள் கண்ணீரைத் துடைத்து வருகின்ற பரீட்சையில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்படி செய்வார். நிச்சயம் வெற்றி தருவார்.

குறிப்பிட்ட ஒரு மருத்துவரை அறிவேன். உயர்படிப்பில் அவர் மிகவும் கஷ்டப்பட்டு படித்தார். அவர் நோயாளிகளின் மீது அதிகப்பாசமும், அன்பும் கொண்டவர். ஆனால் ஒவ்வொரு முறையும் பரீட்சை நேரம் வரும்போது சோர்ந்து விடுவார். மிகவும் கலங்கி விடுவார். அவரை மனம்

கலங்கச் செய்யும் வகையில் பரீட்சைகளும், மற்றவைகளும் அமையும். பல முறையும் முயன்று தோல்வியடைந்தார். ஆனால் ஒரு சமயம் அவர் என்னிடத்தில் பிரார்த்தனை செய்ய வந்தார். அப்பொழுது அவர் 'சகோதரனே என்னால் இயன்ற மட்டும் முயற்சி செய்து விட்டேன். எப்படியாவது உலகில் நோயாளிகள் இருக்கக்கூடாது என்பதே என் ஆவல். ஆனால் நான் பரீட்சை எழுதும் நேரத்தில் எவ்வளவு நன்றாக எழுதினாலும் என் உயர் அதிகாரிகளின் கண்களில் எனக்கு இரக்கம் கிடைப்பதில்லை. நான் அங்கு போவேன்' என்று மனம் பதறி சொல்லி அழுதார். அவ்வேளையில் தான் இயேசு நோயாளியின் மீது அவர் கொண்ட மனதுருக்கத்தைக் கண்டு அம்முறை அவருடைய தேர்வில் அவர் அதிக மார்க்குகள் வாங்கி மகத்தான வெற்றி பெறச் செய்து, அயல் நாடுகளில் பணிபுரியும்படிச் செய்தார். என்னே ஆனந்தம்! சிறுமைப்பட்டவர்களுக்கு நீங்கள் உதவி செய்வதினால் உங்கள் எல்லாரின் கண்ணீரையும் தேவன் துடைத்து, வெற்றியைக் கட்டளையிடுவார், வேறொரு காரியம் மருத்துவத் துறையில் உண்டு. பல சமயங்களில் உலக மாயைகள் மற்றுமான உலக அன்பு மருத்துவக் கல்லூரியிலே தவிர்க்க முடியாத ஒரு காரியமாக இருந்தாலும் அவற்றின் மத்தியிலும் தேவன் உங்களை ஞானமாய் நடத்துவார். சட்டென்று யாரையும் நம்பி விடாதீர்கள். நீங்கள் செய்கின்ற எல்லாக் காரியத்திலும் அது தேவனுக்கு முன்பாக சரியானதா என்று யோசித்துப் பாருங்கள். தேவன் தாமே உங்களுக்கு அதற்கேற்ற பலனைக் கொடுப்பார். கட்டாயம் அந்த வழிகளில் உங்களை வெற்றியாக நடத்துவார். சில மாணவ, மாணவிகள் தவறான, வழிகளில் தங்கள் தகப்பனுக்கும், தாய்க்கும் தெரியாமல் பல வகையான சோதனைகளில் பலவீனங்களில்

விழுந்து விடுகிறார்கள். ஒரு வேளை சூழ்நிலைகள் அவர்களுக்கு சாதகமாக இருந்தாலும் கூட கிறிஸ்துவின் பார்வையில் அவைகள் பாவமாகக் காணப்படுகிறது. ஆகவே இதை வாசிக்கும் ஒவ்வொருவரையும் தேவன் ஞானமாய் நடத்தி உங்கள் ஒவ்வொருவருக்கும் வெற்றியைக் கட்டளையிடுவார். எவ்வளவு தான் நீங்கள் அறிவுள்ளவராக இருந்தாலும் நசரேயனாகிய இயேசுவை நம்புங்கள்.

நான் மருத்துவத்துறையைச் சேர்ந்த ஒரு பெண்மணியை அறிவேன். ஆண்டவருக்கு முன்பாக ஞானம் பெற்றவள். எந்தவிதமான சிபாரிசும் இன்றி, அவளுக்கு இடம் கிடைத்தது. ஆனால் அங்கு நடந்த சூழ்நிலைகள் அவளை மிகவும் பாதித்தது. திடீரென்று எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. 'பிரதர் நான் தற்கொலை செய்து மடியட்டும்' 'இனிமேலும் என்னால் இவற்றைத் தாங்கமுடியாது' என்று எழுதியிருந்தாள். அவளுக்காகப் பிரார்த்தித்து கடிதம் எழுதியிருந்தோம். அவளை ஏமாற்றி, தவறான முறையில் நடக்கத் துணிந்த வாலிபர்களின் கண்களில் இயேசுகிறிஸ்து அவளுக்கு இரக்கம் கிடைக்கச் செய்து அவளைத் தப்புவித்து தங்கமெடல் வாங்கும்படி அனுக்ரகம் செய்தார். இயேசு உங்களுக்கும் அப்படியே அருள் செய்வார். தவறான வழியில் நடப்பவர்களைப் பார்த்து, நீங்கள் எரிச்சலடையாமல் அவர்களிலும் அன்பு கூர்ந்து, பரிசுத்த ஆவியை நீங்கள் பெற்றிருப்பதினால் அவர்களையும் தூய வழியில் நடத்துங்கள்.

ஒரு சிறந்த மருத்துவக் கல்லூரியில் மாணவர்களில் சிலர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டனர். பின் அவர்களுடைய நண்பர்களும், நிரப்பப்பட்டனர். படிப்படியாக

கல்லூரியில் எல்லோரும் மாறி, இத்தகைய தீமைகளிலிருந்து காக்கப்பட்டார்கள். அவர்கள் மிகுந்த ஞானத்துடன் பரீட்சை எழுதி அத்தேசத்திலேயே முதலிடம் வகித்தனர். அதுபோல இயேசுகிறிஸ்து உங்களுக்கும் அனுக்ரகம் செய்து, உங்களுடைய ஒவ்வொரு பரீட்சையிலும் உங்களுக்குத் துணை நின்று, உங்கள் கரங்களை பிறருக்கு குணமளிக்கும் அன்பு கரங்களாக மாற்றுவாராக!

ஒரு இடத்தில் 2 மருத்துவர்கள் இருந்தனர். அதில் ஒருவர் வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று படித்து விட்டு வந்து, சொந்தமாக ஒரு ஆஸ்பத்திரியும் வைத்திருந்தார். அவர் தன் சுயஞானத்தையும், தொழிலில் தனக்கிருந்த திறமையையுமே சார்ந்திருந்தார். ஆனால் அடுத்த மருத்துவரோ வெளிநாடுகளுக்குச் சென்று உயர்படிப்ப படிக்க முடியவில்லை. இவர் தன் சுயஞானத்தை சாராமல் இயேசுவையே சார்ந்து, நோயாளிகளிடம் கிறிஸ்துவின் அன்பையும், மன துருக்கத்தையும் காட்டி வந்தார். எனவே இயேசுகிறிஸ்து இவரை ஆசீர்வதித்து, இந்த மருத்துவரிடம் வந்த எல்லா வியாதியஸ்தர்களும் சுகம் பெறச் செய்தார். தேவகிருபையால் இவர் நாளுக்கு நாள் விருத்தியடைந்து அந்த பட்டணத்தையே அசைத்தார். ஆம் பிரியமானவர்களே! நீங்களும்கூட இயேசுகிறிஸ்துவையே சார்ந்து, அவருடைய அன்பை நோயாளிகளிடம் காட்டும் போது அவர் நீங்கள் நாளுக்கு நாள் விருத்தியடையக் கிருபை செய்வார். திடன் கொள்ளுங்கள். நீங்கள் மற்றவர்களைக் காட்டிலும் ஆசீர்வாதமாயிருப்பீர்கள்.

நான் ஒரு குழந்தைகள் சிறப்பு மருத்துவ நிபுணரை

(Child specialist) அறிவேன். அவர் தேவனுக்குப் பயந்து குழந்தைகளிடம் உண்மையான அன்பு காட்டுபவர். மேலும் அவர் தன் சுயஞானத்தை நம்பாமல் மிகவும் ஆபத்தான நிலையிலிருக்கும் குழந்தைகளுக்காக தெய்வீக குணமளிக்கும் வரம் பெற்ற ஊழியரையும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்வது வழக்கம். அவ்வாறு ஜெபித்தபின் அருள்நாதர் இயேசுகிறிஸ்துவும் அந்த மருத்துவருடைய விசுவாசத்தைக் கனம் பண்ணி, பிறந்தது முதலே பேச முடியாமலும் மேலும் பல வியாதிகளினால் பாதிக்கப்பட்டும் சாகும் தருவாயில் இருந்த ஒரு குழந்தைக்கு உயிர் கொடுத்து குணமாக்கினார். அந்த குழந்தை தற்போது நன்றாக பேசி சுகமுடன் இருக்கிறது இயேசுகிறிஸ்து அந்த மருத்துவரை பட்டணத்திலேயே மிகச்சிறந்த மருத்துவராய் வைத்திருக்கிறார். நீங்களும் இயேசுகிறிஸ்துவின் மேல், அவருடைய குணமாக்கும் வரத்தின் மேல் நம்பிக்கை வைக்கும்போது அவர் உங்களையும் உயர்த்தி, கனம் பண்ணுவார்.

பிரார்த்தனை

அன்புள்ள இயேசுவே! நான் உம்மைப்போல் மாற வேண்டும் என்பதற்காகவே இத்துறையில் படிக்க வந்துள்ளேன். நீர் தாமே உம்முடைய மட்டற்ற அன்பினால் இந்த உயர்கல்வியை எனக்குத் தந்தீர். தேவா, மனம் இரங்கி உம்முடைய முகம் என் மீது தினந்தோறும் ஒளி வீச அனுக்ரகஞ் செய்யும். நாடோறும் மிகுந்த வேலைப்பழுவினாலும், பிற குடும்ப பாரங்களினாலும் நான் சோர்வடையாமல் மேலும், மேலும் நன்கு படிக்க அருள்புரியும். படிக்கும் நேரத்தில் கவனத்துடனும்,

ஞானத்துடனும் படிக்க அருள்தாரும். என்னை உம்முடைய கரத்தில் ஒப்படைக்கிறேன். இந்த ஏழை ஆட்டுக்குட்டியை துன்மார்க்கரின் கைக்கும், பிசாசின் கைக்கும் நீங்கலாக்கும் நீர் ஒரே நாளில் படைத்த மனிதனைக் குறித்து நான் ஏராளமாய் படிக்க வேண்டியிருப்பதினால் எனக்கு உம்முடைய விசேஷித்த ஞானவரங்களைத் தாரும். எனக்கு நீடிய சாந்தத்தையும், நீடிய பொறுமையையும், தாழ்மையையும் அதன் மூலம் ஞானவரங்களையும் அருளிச் செய்யும். நான் உம்மையே நம்பியிருக்கிறேன். உலக மாயைகளில் விழுந்து விடாதபடி என்னைக் காத்தருளும்.

உம்முடைய ஞானம் என்னில் பெருகுவதாக. எல்லா வைத்திய ஞானத்திற்கும் மேலாக, உம்முடைய சீஷர்களுக்கு நீர் அருளிச் செய்த குணமளிக்கும் வரத்தை எனக்குத் தாரும். நான் சந்திக்கும் ஒவ்வொரு நோயாளியும் என் மூலம் உம்மைக் காண அனுக்ரகம் செய்யும். எனக்கு அன்போடு சொல்லிக் கொடுத்து, என்னை நோயாளிகளுக்கு குணமளிக்கும் வழியில் பயிற்றுவித்த ஒவ்வொரு பேராசிரியர்களையும், மருத்துவ நிபுணர்களையும் நீர் ஆசீர்வதியும். நான் அவர்களைப் புரிந்து கொண்டு அவர்களுடன் அன்பாக நடந்து கொள்ளவும் அனுக்ரகஞ் செய்யும். நான் படிக்கின்ற கல்லூரியையும் வேலை செய்கின்ற ஆஸ்பத்திரியையும் ஆசீர்வதியும். நான் படித்து முடித்தவுடன் இந்த தூய தொழிலை பண ஆசையுடன் நடத்தாமல் நீர் என்னோடு இருக்கிறீர் என்பதை கருதி சுயநலத்தைக் கருதாமல் நடத்தக் கிருபை செய்யும். உம்மையே சார்ந்து உண்மையுடனும், தியாக மனப்பான்மையுடனும் ஒவ்வொரு நோயாளிகளையும்

சந்திக்க எனக்கு அனுக்ரகம் செய்யும். அதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் உம்முடைய தொடுதலை அறிந்து கொண்டு அவர்கள் வாழ்க்கை நீடிக்கப்பட்டு இவ்விதமாக உம்மை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள சந்தர்ப்பத்தைக் கொடுத்தருளும். தேவா! என்னுடைய சரீரம் பெலவீனமடையாமல் என்னை காத்துக் கொள்ளும். கஷ்டப்பட்டு என் படிப்பிற்காக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழிக்கும் என் பெற்றோருக்கும் அல்லது என் ஸ்தாபனத்திற்கும் வளர்ப்பு பெற்றோர்களுக்கும், உம் அருளைத் தாரும். நான் அவர்களுக்கு என்றும் நன்றியுள்ளவனாய் இருக்க எனக்கு கிருபை செய்யும். நீரே உம் அருளால் என்னை நிறைத்து, கடினமான, வரப்போகிறத் தேர்வுகளில் எனக்கு வெற்றியைத் தந்து, எனக்கு எட்டாத, அதிசயமான வழியில் என்னை நடத்தும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

இளஞ்சிங்கங்கள்

பொறியியல், வேளாண்மை கல்வி
மற்றும் தொழிற்கல்வி

கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது; அவைகளையெல்லாம் ஞானமாய் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது.
சங்கீதம் 104:24.

கடக்கக் கூடாததும், நிலையாததுமான ஆறு எழும்பினாலும் உழைப்பாளியானவன் அதை மனுஷரால் வற்றிப் போகப் பண்ணிச் செல்லுகிறான். அவன் தன் கைகளை கற்பாறையின் மேல் நீட்டி, மலைகளை வேரோடே புரட்டுகிறான். கன்மலைகளுக்குள்ளும் நீர்க்கால்களை வெட்டுகிறான். அவன் கண் விலையுயர்ந்த எல்லாவற்றையும் காணும். ஒரு துளியும் கசியாதபடி ஆறுகளை அடைக்கிறான். மறைவிடத்தில் இருக்கிறதை வெளிச்சத்திலே கொண்டு வருகிறான். (யோபு 28:4,9,10,11).

உசியா ராஜாவுக்கு பள்ளத்தாக்கிலும், சம பூமியிலும் அநேக ஆடு மாடுகளும், மலைகளிலேயும், வயல்வெளியிலேயும் பயிர்க்குடிகளும், திராட்சத் தோட்டக்காரரும் உண்டாயிருந்த படியினால், அவன் வனாந்தரத்திலே கோபுரங்களைக் கட்டி அநேக துரவுகளை வெட்டினான். அவன் வெள்ளாண்மைப் பிரியனாயிருந்தான். (2நாளாகமம் 26:10) கர்த்தர், ஊரீமின் குமாரன் பெசலெயேலைப் பேர் சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்வதற்கும், பொன்னிலும், வெள்ளியிலம், வெண்கலத்திலும் வேலை

செய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திர வேலைகளைச் செய்கிறதற்கும் மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும், புத்தியும், அறிவும் அவனுக்கு உண்டாக அவனை தேவ ஆவியினால் நிரப்பினார் (யாத்திராகமம் 31:2-5). ஈராம் என்னும் தீருநகரத்தான் சகலவித வெண்கல வேலையையும் செய்யத்தக்க யுக்தியும், புத்தியும் அறிவும் உள்ளவனாயிருந்தான். (1இராஜாக்கள் 7:13,14). அபியென்னும் புத்திமானாகிய நிபுணன் பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும், இரும்பிலும், கற்களிலும், மரங்களிலும், இரத்தாம்பர நூலிலும், இளநீல நூலிலும், மெல்லிய நூலிலும், சிவப்பு நூலிலும் வேலை செய்யவும், சகலவித கொத்து வேலை செய்யவும்,என்னென்ன செய்ய வேண்டுமென்று அவனுக்குச் சொல்லப்படுமோ அவைகளையெல்லாம் யூகித்துச் செய்யவும் அறிந்தவன் (2 நாளாகமம் 2:13,14)

இருதயத்தில் ஞானமுள்ளவன் விவேகியென்னப்படுவான்; உதடுகளின் மதுரம் கல்வியைப் பெருகப் பண்ணும்; ஞானியின் இருதயம் அவன் வாய்க்கு அறிவையூட்டும் அவன் உதடுகளுக்கு அது மேன்மேலும் கல்வியைக் கொடுக்கும் (நீதிமொழிகள் 16:21,23).

வானத்தின் கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம் பண்ணினேன் (பிரசங்கி 1:13).

தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து அதைப்

பண்படுத்தவும், காக்கவும் வைத்தார் (ஆதியாகமம் 2:15).

எனக்கன்பானவர்களே, இவ்வுலகில் நாம் வாழும் நாட்களில் ஏதாவது ஒரு வேலையைச் செய்து உணவருந்த வேண்டுமென்பது நம்மை உண்டாக்கிய தேவனுடைய நியமனமாயிருக்கிறது (2தெசலோனிக் கேயர் 3:10-12) பொதுவாக இப்படிப்பட்ட தொழில் கல்வியை நாம் கற்கும்போதும், அடிக்கடி மிகவும் சோர்வடைந்து விடுகிறோம். ஆகிலும் நம்மைப் போலவே நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவும் பாடுள்ள தச்சு வேலையைச் செய்தாரென்று நாம் வேதத்தில் காண்கிறோம். ஆகிலும் அவர் ஒவ்வொரு நாளும் ஞானத்தில் அதிகமாய் விருத்தியடைந்தபடியினால் (லூக்கா 2:52) அவ்வேலையை திறமையாகச் செய்திருக்க வேண்டும் அல்லவா? தேவன் நமக்கு நியமித்த வேலைகளை எவ்வளவு திறமையுடனும், ஞானத்துடனும் கற்றுத் தேர்ந்து செவ்வையாய் செய்கிறோமோ அவ்வளவு அதிகமாய் வெகு சீக்கிரம் நாம் உன்னத நிலையை அடைகிறோம். நம் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய திறமைகளுக் கேற்றபடி தொழிற் கல்விகள் புகட்டப்படுவதையே, தேவன் விரும்புகின்றனர் (மத்தேயு 25:15 1கொரிந்தியர் 12:7). ஆகிலும் நாம் வாழ்கின்ற இவ்வுலகில் பொதுவாக நம் திறமைக்கேற்ற தொழிற்கல்வி கற்க முடிவதில்லை. எந்தத் தொழில் துறையில் நமக்கு இடம் கிடைக்கிறதோ நாம் அதில் சேர்ந்து படிக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகின்றது. ஆதலால் அநேகருக்கு இத்தகைய தொழிற்துறை கல்வி கடினமானதாக அமைந்து விடுகிறது. ஆகிலும் மனம் கலங்காதீர்கள். நம்மை உண்டாக்கிய தேவனுடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்து நம்மைப் போல சகல நெருக்கங்களையும்,

பாடுகளையும் பட்டபடியினால் அவர் நம்முடைய பாடுகளிலும், தொழில் கல்வியிலும் நமக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (ஏசாயா 63:9 எபிரெயர் 2:18).

ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் இயேசு கிறிஸ்துவே உங்களுக்கு ஞானத்தின் ஊற்றாய் அமைந்து உங்கள் வேலைத் திறனையும் (Practical experiments and practical exams) புத்தியையும் (Written exams), விவேகத்தையும் (Viva, Oral exams) பெருகச் செய்கிறவராய் இருக்கிறார். நீங்கள் மாத்திரம் ஒவ்வொரு நாளும் காலையில் எழுப்பி திருமறையைப் படித்து விட்டு பின்வரும் பிரார்த்தனையைச் செய்து விட்டு கல்லூரிக்குச் செல்லுங்கள். உங்களால் இயன்ற அளவு உங்கள் படிப்பின் ஒவ்வொரு படிகளிலும் இயேசுவையே சார்ந்து கொள்ளுங்கள். தீமையான காரியங்களில் உங்கள் சுக நண்பர்களையும், தோழர்களையும் பின்பற்றாமல் நேர்வழியில் நடந்து, நீங்கள் படிக்கின்ற ஸ்தாபனங்களிலும் ஆசிரியர்களிடத்திலும் பணிவுடனும், கீழ்படிதலுடனும் நடந்து அந்த ஸ்தாபனங்களுக்கு பேரும், புகழும் கொண்டு வருவதினால் உங்களை உண்டாக்கிய கர்த்தருக்கு மகிமையைக் கொண்டு வாருங்கள்.

ஜெபம்

பூமியையும், அவற்றிலுள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்து அவற்றின் மேல் மனுஷனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்படுத்தின சர்வ ஞானமுள்ள பிதாவே, (சங்கீதம் 8:6) உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன் புகழுகின்றேன். தேவ தூதனிலும்

சற்று சிறியவனாகிய என்னை இத்தகைய உயர்கல்வியினாலும் அதனைக் கற்கின்ற ஞானமகிமையினாலும், களத்தினாலும் முடிசூட்டியதற்காய் நன்றி கூறுகின்றேன். ஆம் பிதாவே, உமது விரல்களின் கிரியையாகிய உமது வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நட்சத்திரங்களையும், நான் பார்க்கின்ற போதும், நீர் எனக்குக் கொடுத்த சொற்ப ஞானத்தின் மூலம் பெரும் பெரும் கட்டடங்களை நான் கட்டும்போதும், மகாபெரிய இயந்திரங்களை இயக்குகின்ற போதும், கம்ப்யூட்டர் அறிவில் நான் வளரும்போதும் என்னை உமக்கு முன்பாக தாழ்த்துகிறேன் (சங்கீதம் 8:3,4,5)

நட்சத்திரங்களையும், வானத்தின் நியமனங்களையும் உமது மகா வல்லமையினால் படைத்து, உமது மகா பெலத்தினாலும், ஞானத்தினாலும் அவைகளைப் புறப்படச் செய்து நடத்துபவரே, உம்மைப் போற்றுகின்றேன். உண்மையாகவே நீர் மகாபெரிய பெலமுள்ள ஆண்டவராய் இருக்கின்றீர். உம்முடைய அறிவு அளவில்லாதது. உம்முடைய புத்தியும் ஆராய்ந்து முடியாதது (ஏசாயா 40:14, 26, 28; சங்கீதம் 147:4,5; யோபு 28:20-27) நீர் சிறியவனும், எளியவனுமாகிய என்மீது இரக்கம் கொண்டு உம்முடைய மகா ஞானத்தில் எனக்கும் கொஞ்சம் தாரும். நான் உண்டாக்குகின்ற அல்லது இயக்குகின்ற ஒவ்வொரு இயந்திரமும், கட்டுகின்ற ஒவ்வொரு கட்டடமும் உம்முடைய மகா வல்லமையை மக்களுக்கு வெளிப்படுத்த, ஆக்கப்பூர்வமாய் பயன்பட அருள் செய்யும் என் புத்தியைக் கூர்மையாக்கி நான் புதிது புதிதான கருத்துக்களை அறியவும், பரீட்சைகளில் சிறந்த மதிப்பெண்கள் பெறவும் அருள்செய்யும் (ஏசாயா 41:15). எப்பொழுதும் நான் தாழ்மையை அணிகலனாகக் கொள்ள அருள் செய்யும்.

அடக்கம், ஒழுக்கம், உண்மை, நீதி, கற்பு, அன்பு, நற்கீர்த்தி, புகழ் எதுவோ அவற்றையே சிந்திக்க அனுக்ரகம் செய்தருளும் (பிலிப்பியர் 4:8) எவ்வித வியாதிகளும், ஆபத்துக்களும் என் கவனக்குறைவின் நிமித்தம் வராதபடி காத்தருளும். நான் படித்து முடித்தவுடன் எனக்கொரு நல்ல வேலையை அல்லது வேலை உயர்வை கட்டளையிட்டருளும். உலகம் முழுவதும் உம் ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறபடியால் என்னைக் குறித்து உம்முடைய திருவுளச்சித்தம் எப்படியிருக்கிறதோ அங்கே மாத்திரம் நான் உமக்கு மகிமையைக் கொண்டுவரும்படி என்னை எடுத்துச் செல்லும். வெவ்வேறு கணக்குகளையும், கணக்கு நுட்பங்களையும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய ஞானத்தை எனக்குத் தாரும். நீர் எனக்கு புதிது, புதிதான காரியங்களைச் சொல்லிக் கொடுத்து நான் புதிய படைப்புகளை புத்தியுடன் கண்டுபிடித்து, உம் அருளுடன் சமர்ப்பிக்க தயை செய்யும்.

என் மேல் அதிகாரிகளுடனும், நிபுணர்களுடனும், கல்விமான்களுடனும், சகமாணவர்களுடனும், சக தொழிலாளர்களுடனும் நட்புறவையும், சமாதானத்தையும் பெருகச் செய்யும் (ரோமர் 12:18) நான் படித்தவற்றை மறந்து விடாதபடி எனக்கு ஞாபகசக்தியைத் தாரும். புத்தக அறிவுடன் அனுபவ அறிவையும் பெருக்கியருளும். எப்பொழுதும் நான் உமக்கும், என் பெற்றோருக்கும், எனக்குக் கற்றுக் கொடுத்தவர்களுக்கும் நன்றியுடன் இருக்க தாழ்மையுள்ள இருதயத்தை எனக்குத் தாரும். நான் உம்மையே நம்பியிருக்கிறபடியால் உம் நாமத்தினிமித்தம் பெரிய வெற்றியை எனக்குக் கட்டளையிட்டருளும். போதிய நிதி வசதியையும் எனக்குக் கொடுத்தருளும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

நான் ஒரு ஏழை மனிதரை அறிவேன். அவர் ஒரு வட்டிக்கடையில் வேலை செய்தார். அவருடைய குடும்பத்தை வறுமையும், நோய்களும் எப்பொழுதும் வாட்டிக் கொண்டேயிருந்து. ஆனால் அவருடைய இரு பிள்ளைகளும் தங்கள் குடும்ப கஷ்டத்தை நன்கு உணர்ந்து விடாமுயற்சியுடன் கஷ்டப்பட்டு படித்தார்கள். அவர்களுடைய கஷ்டத்தைக் கண்டு இயேசுகிறிஸ்து மனதுருகி அவர்கள் +2ல் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெறவும், எந்தவித சிபாரிசுமின்றி அவர்களுக்கு அரசு பொறியியல் கல்லூரியில் (Govt. Engineering College) இடம் கிடைக்கவும் கிருபை செய்தார். அவர்கள் அங்கும் சென்று மிகத் தாழ்மையுடன் தங்கள் குடும்ப நிலையை மறவாமல் அதிக பிரயாசப்பட்டு படித்தார்கள். அவர்கள் ஒவ்வொரு முறையும் விடுமுறைக்கு வீட்டிற்கு வரும்போதும் தவறாமல் என்னைப் பார்த்து ஜெபித்துச் செல்வார்கள். ஆண்டவர் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு இரங்கி அவர்கள் பொறியியல் கல்லூரியிலும் பரிசு பெற்று நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெறவும். உடனே உயர்ந்த வேலை கிடைக்கவும் அனுக்ரகம் செய்தார். இயேசுகிறிஸ்து கட்டாயம் உங்களையும் அப்படியே ஆசீர்வதிப்பாராக.

நான் ஒரு இன்ஜீனியரை அறிவேன். அவர் மிகவும் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர். அவர் தன் இளவயதிலிருந்தே இயேசுவைச் சார்ந்து ஜீவித்த படியால் அற்புதமாக அவருக்கு பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்தது. அவர் கல்லூரியில் படிக்கக்கூட பணம் இல்லாத காரணத்தால் தவித்தபோது, இயேசுகிறிஸ்து ஒவ்வொரு நாளும் அவரை அதிசயமாய் நடத்தி வந்தார். அந்த கல்லூரியில் அவர் தேவ கிருபையால் அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்றார். அவர் இயேசுவை நம்பி

ஜீவித்தபடியினால் அவரை விட அதிகம் படித்தவர்களைக் காட்டிலும், இவர் செய்யும் வேலையில் ஓர் ஆசீர்வாதம் இருந்தது. அரசாங்கம் ஒரு மாபெரும் கட்டடத்தைக் கட்டும் பொறுப்பையும், எல்லோரும் அதிசயிக்கத் தக்க விதத்தில் இவரிடம் கொடுத்தது. இவர் அதை எப்படி கட்டுவது என்று கலங்கினபோது, இயேசுகிறிஸ்து, கனவின் மூலம் அவருக்கு, அக்கட்டடத்தை எப்படிக்கட்டவது என்று சொல்லிக் கொடுத்தாராம். இவரும் அதேபோலவே கட்டிமுடித்து மிகவும் புகழ்பெற்றவராய் திகழ்கிறார். நீங்களும் இயேசுகிறிஸ்துவை, ஒவ்வொரு காரியத்திலும் சார்ந்து வாழும் போது உங்களையும் அவர் அபரிமிதமாய் ஆசீர்வதித்து உயர்த்துவார்.

அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ? என்றான். பின்பு பார்வோன் யோசேப்பை நோக்கி தேவன் இவை எல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிற படியால், உன்னைப்போல, விவேகமும், ஞானமும் உள்ளவன் வேறொருவனும் இல்லை. ஆதியாகமம் 41:38,39.

தானியேலை பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாக நியமித்தான் (தானியேல் 2:48) தானியேலுக்கு விசேஷித்த ஞானத்தின் ஆவி இருந்ததினால், அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த இராஜா நினைத்தான். (தானியேல் 6:3) அவன் பேசின ஞானத்தையும், ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற் போயிற்று. (அப்போஸ்தலர் 6:10). தாவீது சவுலுடைய ஊழியக்காரர்கள் எல்லாரைப் பார்க்கிலும் புத்திமானாய் நடந்து கொண்டான். அவன் மிகவும் பெயர் பெற்றவனாக இருந்தான். தாவீது தன் செய்கைகளில் எல்லாம் புத்திமானாய் நடந்தான். கர்த்தர் அவனோடு கூட இருந்தார். அவன் மகா புத்திமானாய் நடக்கிறதை சவுல் கண்டு அவனுக்கு பயந்திருந்தான். (1சாமுவேல் 18:14,15,30). ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான் (நீதிமொழிகள் 13:20) ஞானிகளின் உதடுகள் அறிவை இறைக்கும். (நீதிமொழி 15:7) விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மை

பெறுவான். கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான். (நீதிமொழிகள் 16:20) ஞானமுள்ள இராஜா துன்மார்க்கரைச் சிதறடிப்பான் (நீதிமொழிகள் 20:26) வானத்தின் கீழ் நடப்பதை எல்லாம் ஞானமாய் விசாரித்து, ஆராய்ச்சி செய்கிறதற்காக என் மனதைப் பிரயோகம் பண்ணினேன். சாலமோனாகிய நான் பெரியவனாயிருந்து, எனக்கு முன் எருசலேமிருந்த எல்லாரைப் பார்க்கிலும் ஞானமடைந்து தேறினேன் (பிரசங்கி 1:13,16). ஞானமும், வல்லமையும் அவருக்கே உரியது. (தானியேல் 2:20) பிதாக்களின் தேவனே, நீர் எனக்கு ஞானமும், வல்லமையும் கொடுத்து நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக் கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து ராஜாவின் காரியத்தை எங்களுக்கு தெரிவித்தபடியினால் உம்மைத் துதித்துப் புகழுவேன் (தானியேல் 2:23)

நியாயத்திலே முகதாட்சணியம் பாராமல், பெரியவனுக்கு செவி கொடுக்கிறது போல சிறியவனுக்கும் செவி கொடுங்கள். மனிதன் முகத்துக்குப் பயப்படாதிருப்பீர்களாக. நியாயத்தீர்ப்பு தேவனுடையது (உபாகமம் 1:17). நாட்டின் முக்கிய அஸ்திபார கற்களாகிய கலெக்டர், ஆடிட்டர், நீதிபதி, வங்கி அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் மகா மேன்மையுள்ள தேவனாலேயே இக்கல்வியின் ஞானம் பெற்று, உயர் அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பின்னும் பிரார்த்தனையை தினமும் செய்து, அதனை வாழ்க்கை முறையில் கடைப்பிடிப்பீர்களென்றால், உங்கள் நிமித்தம் நாடு முன்னேறும். மக்கள் மகிழ்வர். இறைவன் உலகப் பொருள்களில் உண்மையுள்ள உங்களை நம்பி, மாபெரும் மெய்ப் பொருளை உங்களுக்கு ஒப்புவிப்பார். முதலில்

கொஞ்சத்தில் உண்மையுள்ள நீங்கள் அநேகத்தின் மீது அதிகாரிகளாக மாறுவீர்கள் (மத்தேயு 25:21, லூக்கா 19:17)

மிகவும் உயர்ந்த இரண்டு காவல்துறை அதிகாரிகளை அறிவேன். ஒருநாள் அவர்கள் என்னைத் தங்கள் வீட்டிற்கு அழைத்திருந்தார்கள். அப்பொழுது அவர்களிடம் சிறிது நேரம் பேச எனக்கு அவகாசம் கிடைத்தது. அவர்கள் இத்தனை மிகப்பெரிய பதவியை, போட்டா போட்டியுள்ள இக்காலத்திலும் எப்படி அடைந்திருக்கக்கூடும்? என் எண்ணிக் கொண்டு இருந்தேன். அப்போது அவர்கள் இருவரும் தாங்களாகவே, தங்கள் மகத்தான சாட்சியை என்னிடம் கூறினார்கள். அவர்கள் சொன்னார்கள். தம்பி, எங்களுடைய ஆரம்பமும் உங்களுடைய ஆரம்பத்தைப் போல் தான் மிகவும் எளியவைகளாக இருந்தன. நாங்கள் இந்நிலைக்கு உயர்த்தப்படுவோம் என கனவிலும் கூட நினைக்கவில்லை. ஆனால் சிறுவயதிலிருந்தே எங்கள் தாய் தகப்பன்மார் எங்களுக்குச் சொல்லிக்கொடுத்தது போலவே ஓய்வு நாள்தோறும் ஒழுங்காக ஆலயத்திற்கு செல்வோம். எங்கள் ஆரம்ப சிறுமையான கல்வியிலும், நாட்டிற்கு செய்யும் சேவையிலும், எங்களால் முடிந்தவரை, எங்களுக்குத் தெரிந்தவரை உண்மையுள்ளவர் களாகவே இருப்போம். எங்களுடைய சக ஊழியர்களைப்போல கல்வி மேதைகளைப் போல, அதிக ஞானம் எங்களுக்கு இல்லாவிட்டாலும், ஒவ்வொரு சின்ன காரியத்திற்கும் எல்லாம் எல்லா இறைவனாகிய இயேசு கிறிஸ்துவை நம்பியிருந்தோம். எங்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு புகழ்ச்சியிலும் சின்ன உயர்வுகளிலும், எங்கள் தாழ்வில் எங்களை நினைத்தவரை மறவாது அவருக்கு நன்றி

கூறுவோம். (சங்கீதம் 136:23) உண்மை நிமித்தம் வரும் துன்பங்களைப் பொறுமையோடு சகித்து தீமை செய்ய அநேகரை பின்பற்றாமல் இருந்தோம். இதன் மூலம் எல்லாம் வல்ல கர்த்தர் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு படியிலும் எங்களை உயர்த்தி முடிவில் இந்த உன்னதநிலைக்கு எங்களைக் கொண்டு வந்தார். இது இந்நாளிலும் எங்கள் கூட வேலை செய்கின்ற படித்தவர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொண்டு வருகிறது. தேசத்தின் நலனைக் கருதி எங்களால் என்ன செய்ய முடியுமோ, அத்தனையும் செய்து வந்தோம். நியாயத்திலே ஜாதி, இன, மத, 'வேறுபாடு இன்றி நடந்து கொண்டோம்' என்றார்கள். எனக்கன்பானவர்களே! நீங்களும் இப்படி இருப்பீர்கள் என்றால் ஆண்டவர் உங்களுக்கு அதிக ஞானத்தையும், உயர் பதவியையும் கொடுப்பார் என்பதில் சந்தேகமில்லை. அவருக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக.

பிரார்த்தனை

வானத்திற்கும் பூமிக்கும் மகத்தான இராஜாதி இராஜாவே (வெளிப்படுத்தல் 17:14, 19:16; சங்கீதம் 93:1, 96:10, 97:1) நீர் ஒருவரே நீர் உண்டாக்கிய மனுஷனுடைய இருதயத்திற்குள்ளும், மனதிற்குள்ளும் இருப்பதை அறிபவர் (எரேமியா 11:20, 17:10; சங்கீதம் 7:9). ஏராளமாயிருக்கின்ற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை, தீமை, இன்னதென்று வரையறுக்கவும் திரளாயிருக்கின்ற புத்தகங்களைக் கற்கிறதற்கும் ஞான வரத்தையும், ஞானமுள்ள இருதயத்தையும் எங்களுக்குத் தாரும் (1இராஜாக்கள் 3:8,9) கடற்கரை மணலத்தனையான மனோ விருத்தியையும், மிகுதியான ஞானத்தையும்,

புத்தியையும் எனக்குத் தாரும். நான் எங்கு சென்றாலும் நான் நடக்க வேண்டிய வழியை எனக்குப் போதித்து உம்முடைய கண்களை என்மீது வைத்தருளும் (சங்கீதம் 32:8). நான் வலது புறமாய்ச் சாயும் போதும், இடது புறமாய்ச் சாயும் போதும் வழி இதுவே இதிலே நடவுங்கள் என்று எனக்குப் பின்னாகச் சொல்லும் உம்முடைய வார்த்தையை என் காதுகள் கேட்க அருள் செய்யும் (ஏசாயா 30:21) பொது மக்களும் நாட்டில் அரசாங்கமும் என்னிடத்தில் ஒப்புவித்த, இந்த மகத்தான ஊழியத்தை அன்புடன் கூடிய விவேகத்துடன் செய்ய அருள்தாரும். மேட்டிமை கொள்ளாமல், சிறுமைப்பட்ட கண்களை உடையவனாகி சிறுமையானவர்களை அவர்களிலும் பெலவானுடைய கரங்களிலிருந்து தப்புவிக்க (சங்கீதம் 18:27) எனக்கு போதுமான ஞானத்தையும், வல்லமையையும் தாரும். உம்முடைய பரிசுத்த ஸ்தலத்திலிருந்து எனக்கு ஒத்தாசையனுப்பி என்னை ஆதரித்தருளும். எனது மனவிருப்பத்தின்படி எனக்குத் தந்தருளி (சங்கீதம் 20:2) உமது ஆலோசனை யெல்லாம் என்னில் நிறைவேற்ற உமது இரட்படிப்பான வல்லமைகளை எனக்குக் காண்பித்தருளும். அரணான நகரத்தில் எனக்கு உமது கிருபையை அதிசயமாய் விளங்கச் செய்யும் (சங்கீதம் 31:21). என்னுடைய நாவு நியாத்தைப்பேச அருள் செய்யும். நீர் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர் அல்லவா! உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லையே (எரேமியா 32:27). ஆகவே இயேசு என்னும் நாமத்தினிமித்தம் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். எனக்கு உத்தரவு கொடுத்து நான் அறியாததும், எனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை அறிவித்தருளும் (எரேமியா 33:3). மாபெரும் வெற்றியை

இயேசுவின் மூலம் எனக்குத் தாரும் (யோவான் 14:14). நான் வேண்டிக் கொள்கிறதற்கும் அதிகமாய் எனக்கு செய்தருளும் (எபேசியர் 3:20). என் போக்கையும், வரத்தையும் இது முதற்கொண்டு என்றென்றைக்கும் காத்து, எனக்கு ஒத்தாசை செய்யும் (சங்கீதம் 121:8) ஜனங்களின் சண்டைக்கு நீர் என்னைக் காத்து, அல்லது தப்புவித்து, ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக்கியருளும். நீர் ஏற்படுத்தின உயர் அதிகாரியாகிய எனக்கு, மகத்தான இரட்சிப்பை அளித்து, நீர் அபிஷேகம் செய்த எனக்கு சதாகாலமும் கிருபை செய்தருளும் (சங்கீதம் 18 43,50). காரணமின்றி என்னை விரோதிக்கின்ற பகைவருக்கு முன்பாக நான் வெட்கமடையாதபடி செய்து, ஞானத்தை தரும் உமது வேதத்தை நான் தியானிக்கிறபடியினால், அவர்களும் என்னுடன் ஒத்து வந்து, ஒரே மனதாய் பணிபுரிய அருள்செய்யும். உம்முடைய முகத்தை எப்பொழுதும் என்மீது பிரகாசிக்கச் செய்து என் கண்களை அறிவாகிய ஒளியைக் காணக்கூடிய பிரகாசமுள்ள ஞானக்கண்களாய் மாற்றியருளும் (எபேசியர் 1:17,19) உமக்கே என் நன்றி! இயேசுவின் நாமத்தில் ஆமென்!

விளையாட்டுப் போட்டிகள்

குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைக் காட்டிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன். (நீதிமொழிகள் 21:31, 16:32)

பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலும் இச்சையடக்கமாய் இருப்பார்கள். (1கொரிந்தியர் 9:25) சாதோக்கின் குமாரனாகிய அகிமாஸ் ஓட்டத்தில் வல்லுனனாய் இருந்தான். (2சாமுவேல் 18:19-23)

ஆசகேல் வெளியிலிருக்கிற கலை மான்களில் ஒன்றைப்போல, வேகமாய் ஓடுகிறவனாக இருந்தான். (1சாமுவேல் 2:18).

எனக்கன்பானவர்களே தேவன் நமக்குப் படைத்த சரீரத்தையும், மனதையும் சீராகக் காப்பாற்ற விளையாட்டு நமக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். மனதை எப்பொழுதும் இழுபடுகிற நிலையில் வைக்காது இடையிடையே அமைதிப்படுத்துவது உடலுக்கு மிக அத்தியாவசியமான ஒன்றாக காணப்படுகிறது. நானும் கூட என் இளம் பிராயத்தில் ஓட்டப்பந்தயம், செஸ், கால் பந்தாட்டம் முதலியவற்றில் அதிக திறமையுடன் விளையாடி பல சமயங்களில் முதல் பரிசுகள் பெற்றதுண்டு. ஆனால் அவற்றில் அநேக விளையாட்டுகளில் நாம் அதிக ஞானத்தை உபயோகிக்க வேண்டிய அவசியமில்லாதிருப்பினும் சில முக்கியமான பாடங்களை கற்றுக் கொள்ளலாம்.

விளையாட்டு ஸ்தலங்களுக்கு போவதற்கு முன்னால் பெலமுள்ளவனுக்கும், பெலவீனனுக்கும் உதவி செய்து, அநேகம் பேரைக் கொண்டாகிலும் கொஞ்சம் பேரைக் கொண்டாகிலும் இரட்சிக்கத் திராணியுள்ள கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்ய வேண்டும் (2 நாளாகமம் 14:11; 1 சாமுவேல் 14:6) விளையாட்டு ஒரு ஓய்வு நேர பொழுது போக்கு. அதுவே வாழ்க்கையென்று இருக்கக்கூடாது. அதனிமித்தம் ஈனத்தனமான செயல்களில் ஈடுபடக்கூடாது. வெற்றியும், தோல்வியும் அடைவதற்கும் ஆயத்தமாய் இருக்க வேண்டும் எக்காரணம் கொண்ம் அவற்றை நம் மனதின் ஆழத்திற்கு கொண்டு செல்லக்கூடாது. அன்பே பிரதானம். அன்பு சகலத்தையும் தாங்கும். சகலத்தையும் சகிக்கும். (1 கொரிந்தியர் 13:4,5) விளையாட்டின் மூலம் நாம் சாந்தமுள்ள ஆவியையும் இச்சையடக்கத்தையும் அடைகிறோம். நம்மோடு எதிர்த்து விளையாட வருபவர்கள் யாராயிருந்தாலும் அவர்களும் நண்பர்களேயாவார்கள். விளையாட்டு ஒரு வெறியாக மாறக் கூடாது. துவக்கத்தில் அன்புடன் நாம் கை குலுக்கின நமது எதிர் தரப்பு மக்கள் முடிவுவரை நம் நண்பர்களாகவே இருக்க வேண்டும். சில விளையாட்டுகளில் அதிக பலத்தைக் காட்ட வேண்டியிருக்கும். (உதாரணம் - நீந்துதல், ஓட்டப்பந்தயம், உயரந் தாண்டுதல்) வேறு சில விளையாட்டுகளில் அதிக திறமையை பயன்படுத்த வேண்டியிருக்கும் (செஸ்). அதிக திறமை தற்பெருமையையும், பகையையும் உண்டாக்கக் கூடாது. அதிக பெலன் முற்கோபங்களையும், பொறாமையையும் கொண்டு வரக்கூடாது. நாம் எப்போதும் மிதவாதிகளாயிருப்பதே நல்லது. எவ்வொரு வெற்றிக்குப் பின்னும் தேவன் நமக்கு கொடுத்த வெற்றி, ஞானம், சுகபெலன், ஜீவன் ஆகியவற்றிற்காகவும் அவரைத் துதிக்க

வேண்டும். விளையாட்டினிமித்தம் படிப்பில் கவனம் குறையக் கூடாது. படிப்பு நேரத்தில் விளையாட்டைப் பற்றி நினைக்கக்கூடாது. நீங்களும் மேற்கொண்ட அறிவுரைகளின்படி நடந்து, அதிகமாக பைபிள் படித்து, கீழேயுள்ள பிரார்த்தனையை ஏறெடுங்கள். இயேசு கிறிஸ்து கட்டாயம் உங்கள் மனவிருப்பத்தின்படி உங்களுக்கு அருளிச் செய்வார் (சங்கீதம் 21:2)

நான் ஒரு பக்தியுள்ள தாயை அறிவேன். அவர்களுடைய மகளுக்கு சிறுவயதிலிருந்தே விளையாட்டின் மீது அதிக பற்று இருந்தது. எனவே அந்த தாய் தன் மகளுக்காக அதிகம் ஜெபித்து வந்ததோடு மட்டுமன்றி விளையாட்டுப்போட்டிகளின் போது தாழ்மையுடனும், நம்பிக்கையுடனும், அன்புடனும் நடந்துகொள்ள வேண்டும் என்றும் 'நீ தேவராஜ்யத்துக்கடுத்த காரியங்களுக்கு முதலிடம் கொடுக்கும்போது விளையாட்டிலும் வெற்றியின்மேல் வெற்றி பெறுவாய்' என்று போதித்து வந்தார்கள். மகளும் அதன்படியே நடந்தாள். ஒருமுறை அவள் ஒரே சமயத்தில் நடைபெற்ற பல போட்டிகளில் பங்கு பெற வேண்டியிருந்தது. அதற்காக ஜெபிக்கும்படி அந்த தாய் என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். நானும் அவளுக்காக ஊக்கமாக ஜெபித்தேன். என்ன ஆச்சரியம். அருள்நாதர் அவளுக்கு இரங்கினார். அவள் தான் கலந்துகொண்ட போட்டிகளிலெல்லாம் வெற்றி பெற்றதுடன் அவள் தன் மாவட்டத்திலேயே சிறந்த விளையாட்டு வீராங்கனையாகத் திகழவும் உதவினார். இந்த சாட்சியை இப்புத்தகத்தில் சாட்சிகளின் வரிசையிலும் நீங்கள் காணலாம். நீங்களும் கூட இப்படியாய் தாழ்மையுடன் ஜெபிக்கும் இயேசுகிறிஸ்து கட்டாயம்

உங்களையும் இப்படியே ஆசீர்வதிப்பார்.

ஜெபம்

அன்புள்ள இயேசு சுவாமி, நானும் தாவீதைப்போல எளியவனும் சிறுமைப்பட்டவனுமாக இருக்கிறேன். நான் விளையாடப்த போகிற விளையாட்டில் எனக்கு உம் அன்பையும், பொறுமையையும், சாந்தத்தையும், திறமையையும் தாரும். எனக்கு எதிரே விளையாட்டுபவர்களின் அடுத்தக் கட்ட குறிப்புகளை முன் கூட்டியே அறிகின்ற ஞானசக்தியை எனக்குத் தாரும். என் மூலம் மற்றவர்களெல்லாரும் உம்முடைய அன்பை தெரிந்துகொள்ளச் செய்யும். எனக்கு நல்ல சுகத்தையும், பெலத்தையும், விளையாட்டில் அறிவையும் கட்டளையிட்டருளும். விளையாட்டு நேரத்தில் விளையாடவும், படிப்பு நேரத்தில் படிக்கவும் அருள் செய்யும். என்னுடன் விளையாட்டு ஸ்தலத்திற்கு வந்து எனக்கு வெற்றியைத் தாரும். நான் இந்த விளையாட்டுகளில் அதிக பழக்கம் பெற்றிராததால் ஆரம்பக் கட்டத்தில் ஏற்படும் தோல்விகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய தாழ்மையுள்ள மனதைத் தாரும். நான் எப்பொழுதும் பெற்றோருக்கு கீழ்படிய அனுக்ரகம் செய்யும். நீர் உமது நாமத்தினிமித்தம் எனக்கு வெற்றியைத் தருவதற்காக நன்றி ஸ்தோத்திரம். இயேசு நாமத்தில் ஆமென்.

(சங்கீதம் 40:17; 1நாளாகமம் 29:1; 2கொரிந்தியர் 2:14; எபேசியர் 6:1; சங்கீதம் 124:8)

சாட்சிகள்

1. சகோதரன் பாளையங்கோட்டைக்கு வந்தபோது எனக்காக ஜெபித்து நீ M.Sc,B.Ed, இரண்டிலும் First Class வெற்றி பெறுவாய் என்று கூறினார். தீர்க்கதரிசனத்தின்படியே வெற்றி பெற்றேன். கர்த்தருக்கே மகிமை.

சகோதரி. புஸ்பா எப்சிபாய், திருநெல்வேலி.

2. சகோதரனுடைய பாரப்பட்ட ஜெபத்தின் மூலமாகவும், கர்த்தருடைய கிருபையினாலும் நான் எதிர்பார்த்ததற்கும் மேலாய் 450/500 மார்க் எடுத்து பள்ளியிலும், மாவட்ட அளவிலும் Rank- எடுத்து வெற்றி பெற்றேன்.

சகோதரி. ஆலிஸ், நீலகிரி.

3. அன்பின் ஊழியம் பத்திரிகையில் சகோதரன் தேர்வு எழுதும் மாணவர்களுக்காக எழுதி இருந்த விசேஷ ஜெபத்தின் மூலம் எனது மகன் M.B.B.S., நுழைவுத் தேர்வில் 97.7% எடுத்து வெற்றி பெறும்படி இயேசு அற்புதம் செய்தார். மேலும் M.B.B.S., B.E., ஆகிய இரு படிப்புகளுக்கும் இடம் கிடைக்கும்படி செய்தார்.

சகோதரி. சித்ரா, கோவை.

4. போட்டோபைல் ஜெபத்திட்டத்தில் சேர்ந்து ஜெபித்ததின் பலனாய் எனது கணவர் M.Phil தேர்வில் பல்கலை கழகம் அளவில் தங்க மெடல் வாங்கி வெற்றி பெறும்படி இயேசு அற்புதம் செய்தார்.

சகோதரி. ஆசாபின்ஸி, நெல்லை.

5. சகோதரன் அவர்கள் Lab Technism தேர்வுக்காக ஜெபித்ததின் மூலம் 834/1000 மதிப்பெண் பெற்று முதல் வகுப்பில் வெற்றி பெற்றேன்.

முருகேஷ், கே.ஜீ.எப்.

6. மேற்படிப்பில் மேன்மையான வெற்றி

சகோதரருக்கு என் ரிசல்ட்டுக்காகவும் மேற் படிப்பிற்காகவும் ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். அதேபோல, நான் நல்ல மதிப்பெண்களுடன் B.Sc., யில் வெற்றி பெற்றேன். அதிக போட்டியாக இருந்தாலும் தேவ கிருபையால், எனக்கு M.B.A.Seat கிடைத்தது . M.B.A-யிலும் முதல் மாணவனாய் திகழ கர்த்தர் உதவி செய்தார்.

அகஸ்டின், மதுரை.

7. வெற்றியின் மேல் வெற்றி

என் மகளுக்கு விளையாட்டில் மிகவும் விருப்பம். நான் ஆண்டவருடைய உதவி இருந்தால் மட்டுமே என் மகள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற முடியும் என்று விசுவாசித்து, என் மகளுக்காக சகோதரனிடமும், சகோதரியிடமும் ஜெபிக்கச் சொன்னேன். ஆண்டவர் இயேசு கிறிஸ்து அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு, என் மகள் 100மீ, 200மீ, ஓட்டப் பந்தயத்திலும், 80மீ, உயரந்தாண்டுதல் பந்தயத்திலும், குறித்த நேரத்திற்கு முன்னதாகவே, சென்று வெற்றிபெறச் செய்தார். மேலும் நீலகிரி, கொடைக்கானலில் உள்ள ஆங்கிலப் பள்ளிகள் யாவற்றிலும் முதலிடம் பெற்றாள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

திருமதி. விமலா ஸ்டீபன், குன்னூர்

8. எல்லாப் பாடங்களிலும் 100% மதிப்பெண்கள்.

என் மகன் ஆனந்தை L.K.G.-யில் சேர்ப்பதற்கு முன் சகோதரரிடம் வந்து ஜெபித்துச் சென்றோம். இயேசு கிறிஸ்து சகோதரர் ஜெபித்தபடி எங்கள் மகனுக்கு விசேஷித்த

ஞானத்தைக் கொடுத்து அவன் எல்லாப் பாடங்களிலும் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெறக் கிருபை செய்தார். இயேசுவுக்கு மகிமை.

Master. **ஆனந்த்**, **திருச்சி.**

9. ஆங்கிலத்தில் மாநிலத்திலேயே முதல்வனாகத் திகழ்ந்தேன்.

நான் 10-ம் வகுப்பு தேர்வு எழுதும் முன்னர் சகோதரனிடம் என்னுடைய தேர்வுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அவரும் எனக்காக ஜெபித்து எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அது என்னை மிகவும் ஊக்கப்படுத்தியது. நான் இயேசுவின் ஒத்தாசையை நம்பி தேர்வு எழுதினேன். சகோதரன் எழுதியிருந்தது போலவே இயேசு என்னை மேன்மைப்படுத்தினார். நான் ஆங்கிலத்தில் 99% மதிப்பெண்கள் எடுத்து மாநிலத்திலேயே முதல் மாணவனாகத் திகழ இயேசு அனுக்கிரகம் செய்தார். இயேசுவுக்கு கோடா கோடி நன்றிகள்.

சகோதரன். ஜி. ஆனந்தராஜ், நெய்யூர்.

10. பொறியியல் படிப்பில் டிஸ்டங்ஷன்

நான் பொறியியல் படிக்கும் ஒரு மாணவி. எனக்குத் தேர்வு சமயத்தில் ஏற்பட்ட சுகவீனத்தின் காரணமாக ஒரு மாத காலமாக சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தேன். இதனால் என்னால் படிக்கவும் முடியவில்லை. அதனால் எப்படி தேர்வு எழுதி வெற்றி பெறுவது என்ற பயம் என்னை ஆட்கொண்டது. மிகவும் மனம் கலங்கிய நிலையில் சகோதரருக்கு கடிதம் எழுதினேன். அவர் ஜெபித்து எழுதிய ஆலோசனைப்படியே இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து

பயமின்றித் தேர்வு எழுதினேன். என்ன ஆச்சரியம்! அந்த தேர்வில் (B.E. 7th Semester) வகுப்பிலேயே முதல் மாணவியாய் distinction Marks வாங்கி வெற்றி பெற்றேன். இயேசுவுக்குப் புகழ்.

சகோதரி. ஜே. ஜெயசீலி, திருச்சி.

1200க்கு 1187 மதிப்பெண்களைப் பெற்றுத் தந்த தேவனுக்கு நன்றி!

+2 படித்துக் கொண்டிருந்த என் மகள் நன்றாக தேர்வு எழுத வேண்டும் என்று நான் சகோதரர் **Dr.ஆனந்தஸ்திரா** அவர்களிடம் ஜெபிக்க சொல்லி கடிதம் எழுதியிருந்தேன். சகோதரர் மகளுக்காக ஜெபித்து, கர்த்தர் மகளுக்கு மகத்தான வெற்றியைத் தருவார் என்று எழுதியிருந்தார்கள். அந்தபடியே என் மகள் 1200க்கு 1187 மதிப்பெண்கள் பெற்று பிரெஞ்ச் பாடத்தில் மாநிலத்திலேயே முதலாவது மதிப்பெண்ணைப் பெற்றுத் தேர்ச்சி பெற்றாள்.

சோபியா சாம்ராஜ், சென்னை.

மகத்தான வெற்றியைத் தந்த தேவனுக்கு நன்றி!

நான் 10ம் வகுப்பு தேர்வை எழுதுவதற்கு முன்பாக சகோதரர் **Dr. ஆனந்தஸ்திரா** அவர்களிடம் ஜெபித்துவிட்டு தேர்வை எழுதினேன். கர்த்தர் சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு எனக்கு தேர்வை எழுத விசேஷித்த ஞானத்தைத் தந்தார். நான் தேர்வில் 500க்கு 481 மதிப்பெண்களைப் பெற்று வெற்றி பெற்றேன். ஜெயம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

யோகப்பிரியா, பட்டுக்கோட்டை.

வெற்றியைத் தந்து மெடிக்கல் ஷீட் கிடைக்க செய்த தேவன்!

என் மகள் +2 படிக்கும் போது அவள் பாடத்தை படிக்க ஆரம்பித்தால் தூக்கம் வந்துவிடும். இதனால் மகளால் படிக்க முடியாது. இதை நினைத்து மகளும், நானும் அதிக கவலைப்பட்டோம். இந்நிலையில் சகோதரர் Dr.ஆனந்தஸ்திரா அவர்களிடம் மகளுக்காக ஜெபித்தேன். சகோதரர் ஜெபித்துவிட்டு கர்த்தர் உங்கள் மகளுக்கு அதிக மதிப்பெண்களை கொடுத்து எந்த செலவுமின்றி இலவசமாக மெடிக்கல் சீட் கிடைக்கும்படி செய்வார் என்று தீர்க்கதரிசனமாக கூறினார். அந்தபடியே மகள் நல்ல மதிப்பெண்களைப் பெறவும், மருத்துவ கல்லூரியில் சேரவும் கர்த்தர் கிருபை செய்தார் **Dr. புவனேஷ்வரி, துறையூர்,**

மாநிலத்திலேயே முதல் இடத்தில் தேர்ச்சி பெற கிருபை செய்த இயேசுவுக்கு ஸ்தோத்திரம்!

எனது தம்பியின் மனைவி M.Phil (Micro Biology) படிப்பில் நல்ல தேர்ச்சி பெற வேண்டுமென்று சகோ. Dr.ஆனந்தஸ்திரா அவர்களிடம் ஜெபித்துவிட்டு சென்றேன். அதே போன்று எனது தம்பியின் மனைவி மாநிலத்தில் முதல் இடம் பெற்று தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அல்லேலூயா!

சரஸ்வதி, திருச்சி.

ஞானத்தின் ஆவியானவர் ஞானத்தினால் நிரப்பினார்!

நான் படிப்பில் மிகவும் பின்தங்கியிருந்தேன். என்னால் மனப்பாடம் செய்ய முடியாது. இந்நிலையில்

அன்பின் நற்செய்தி பெருவிழாவில் கலந்து கொண்டேன். ஜெபவேளையில் சகோதரர் Dr. **ஆனந்தஸ்திரா** அவர்கள் ஞானத்தின் ஆவியானவர் உங்கள் மீது இறங்கி வருகிறார் என்று கூறியவுடன், ஆவியானவர் என்னை அளவில்லாமல் நிறைத்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

ஜெஸ்லின் ஜிஜா, நாகர்கோவில்.

பின் தங்கிய நிலை மாறி முதன்மையான நிலை கிடைத்தது!

எனது மகன் படிப்பில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தான். பலமுறை வகுப்பில் எழுதும் தேர்வுகளில் தேர்ச்சி பெறமாட்டான். சகோதரரிடம் மகனுக்காக ஜெபித்தேன். சகோதரரிடம் ஜெபித்துக் கொண்ட பிறகு என் மகன் நன்றாக படித்து எல்லாப் பாடங்களிலும் முதல் மதிப்பெண் பெற்று வெற்றி பெறுகிறான். ஞானத்தினால் நிரப்பிய தேவனுக்கு ஸ்தோத்திரம்.

செல்வராணி, திருச்சி.

எதிர்பாராத வெற்றி!

நான் +1 வகுப்பில் எனது வகுப்பிலேயே மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தேன். இறுதி தேர்வு எழுதுவதற்கு முன்பாக திருச்சியில் நடைபெற்ற அன்பரின் ஊழிய கூட்டத்தில் கலந்து கொண்டு Rev. Dr. A. **ஜாஷ்வா** அவர்களிடம் ஜெபித்து சென்றேன். தோல்வி அடைவேன் என்று கணிக்கப்பட்ட எனக்கு கர்த்தர் வெற்றியைக் கொடுத்தார். பேதையை ஞானியாக மாற்றிய ஞான கன்மலையாகிய தேவனுக்கு நன்றி.

ரோஸ்லின், திருச்சி.

பயத்தை மாற்றி வெற்றியைத் தந்த கர்த்தரை துதிக்கிறேன்!

எனக்கு வரைபடம் வரைய தெரியாததால் ஐ.டி.ஐ. தேர்வை எப்படி எழுதப் போகிறேனோ என்று பயந்து கொண்டிருந்த சூழ்நிலையில் **Rev.Dr.A. ஜாஷ்வா** அவர்களிடம் ஜெபித்தேன். அவர்கள் எனக்காக ஜெபித்து பயப்படாதே நீ நன்றாக தேர்வு எழுதி வெற்றி பெறுவாய் என்று கூறினார்கள். அதே போன்று நான் நன்றாக தேர்வு எழுதி வெற்றி பெற்றுவிட்டேன். எல்லோரும் நான் வெற்றிப் பெற்றதை குறித்து ஆச்சரியப்பட்டார்கள். அற்புதம் செய்த தேவனுக்கு நன்றி.

ஜெரால்ட்டு, நாகர்கோவில்.

தோல்வியை வெற்றியாக மாற்றிய தேவனுக்கு ஸ்தோத்திரம்!

B.E. படிப்பு இறுதி ஆண்டில் எனக்கு 12 பாடங்கள் அரியர் இருந்தது. **சகோ.Dr. ஆனந்தஸ்திரா** அவர்களிடம் ஜெபித்தேன். கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து தேர்வை எழுது கர்த்தர் வெற்றி தருவார் என்று கூறினார்கள். அந்தபடியே நான் தேர்வை எழுதி வெற்றி பெற்றேன்.

பேட்ரிக், திண்டுக்கல்

கர்த்தரால் கிடைத்த ஜெயம்!

நான் B.Sc., நர்சிங் இறுதி ஆண்டு படிக்கிறேன். கடைசி செமஸ்டர் தேர்வு எழுதுவதற்கு முன்பாக அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் எழுதி ஜெபிக்க கேட்டிருந்தேன். சகோதரர் எனக்காக ஊக்கமாய் ஜெபித்து பதில் எழுதியிருந்தார்கள். அதில் எழுதியிருந்தபடியே கர்த்தர்

எனக்கு தேர்வில் வெற்றியைத் தந்தார். இஸ்ரவேலின் ஜெய பெலனான தேவனுக்கு நன்றி! **ப்வீலன்லிமா**

தேவன் தந்த சம்பூரண ஞானம்!

களக்காட்டில் நடைப்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட நான் கர்த்தரிடத்தில் ஞானத்திற்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது சகோதரர். **Dr.ஆனந்தஸ்திரா** அவர்கள் பரிசுத்த ஆவியில் நிரம்பியவராய், "டேனியல் கர்த்தர் உங்களுக்கு ஞானத்தைத் தருகிறார். அவருடைய ஊழியத்திற்கு அழைக்கிறார்". என்று தீர்க்கதரிசனமாகக் கூறினார். என் மனதில் உள்ளதை சகோதரர் மூலமாக வெளிப்படுத்தி ஆசீர்வதித்த தேவனுக்கு நன்றி.

டேனியல்தங்கம், குட்டுவான்குளம்.

தேர்வில் வெற்றியைத் தந்த ஜெய பெலனான தேவன்!

என்னுடைய 2 மகள்களின் படிப்பிற்காக ஜெபிக்க சொல்லி அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் எழுதியிருந்தேன். சகோதரர் **Dr. ஆனந்தஸ்திரா** அவர்கள் மகள்களுக்காக ஜெபித்து நல்ல மதிப்பெண்களைப் பெற்றுத் தேர்ச்சி பெறுவார்கள் என்று எழுதியிருந்தார்கள். அவர் கடிதத்தில் எழுதியிருந்தபடியே கர்த்தர் என் இருப்பிள்ளைகளுக்கும் நல்ல மதிப்பெண்களைப் பெற்றுத்தந்து வெற்றியைக் கட்டளையிட்டார்.

லதா, வேலூர்.

பெயர் சொல்லி அழைத்து ஆறுதல்படுத்தி ஆசீர்வதித்த ஆண்டவர்!

நான் எவ்வளவு நேரம் படித்தாலும் படித்த பாடங்கள்

எல்லாம் எனக்கு மறந்துவிடுவதால் அதிகம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தேன். 10ஆம் வகுப்பு படிக்கின்ற எனக்கு ஞானத்தைத் தாரும். ஞாபக மறதியை நீக்கிப்போடும் என்று கர்த்தரை நோக்கி ஜெபித்துக் கொண்டிருந்த போது நான் சற்றும் எதிர்ப்பார்த்திராத நேரத்தில் **திருமதி. ஜேன் ஜாஷ்வா** அவர்கள், **இவாஞ்சலின், நான் எவ்வளவு நேரம் கஷ்டப்பட்டு படித்தாலும் படிக்கின்ற பாடங்கள் அனைத்தும் எனக்கு மறந்துபோகிறதே என்று நீ சொல்கிறாய், எனக்கு இருக்கிற மறதியை நீக்கிவிடும் என்று ஜெபிக்கிறாய், கர்த்தர் உனக்கு ஞானத்தைக் கொடுக்கிறார்** என்று எனது பெயரையும் எனது நிலையையும் குறித்து தீர்க்கதரிசனமாக சொல்லி என்னை மேடைக்கு அழைத்து எனக்காக ஜெபித்தார்கள். அப்பொழுது தேவன் தம்முடைய வல்லமையை என் மீது அனுப்பி என்னை ஆறுதல்படுத்தி ஆசீர்வதித்தார். இனி நான் கர்த்தர் தந்த ஞானத்தால் ஜெயம் பெறுவேன். அல்லேலூயா!

இவாஞ்சலின், நாகர்கோவில்.

ஞானத்தினால் நிரப்பிய தேவனுக்கு நன்றி!

என்னுடைய மகன் ஜெமிபால்ராஜ் L.K.G. படிக்கிறான். அவன் நன்றாக படிக்க மாட்டான் நன்றாக எழுதவும் மாட்டான். கடந்த சில மாதங்களுக்கு முன்பாக நடைபெற்ற அன்பரின் ஊழியக் கூட்டத்தில் கலந்துக் கொண்டு **சகோதரி. ஜேன் ஜாஷ்வா** அவர்களிடம் மகனுக்கு கர்த்தர் விசேஷித்த ஞானத்தைக் கொடுக்கும்படியாக ஜெபிக்கச் சென்னேன். சகோதரி மகனுக்காக மிகவும் மனவுருக்கத்தோடு ஜெபித்தார்கள். ஜெபித்ததில் இருந்து மகன் நன்றாக படிக்கிறான். எழுதுகிறான். மகனை ஞானத்தினால் நிரப்பிய தேவனுக்கு நன்றி!

பிரேம குமாரி, இருளகோபுரம்.

ஆசிரியரைப்பற்றி....

சகோ.Dr.ஆனந்தஸ்திரா அவர்கள் சின்னஞ்சிறு வயதிலேயே தன்னுடைய தாயையும், தந்தையையும் இழந்து உண்மை அன்பு எங்கே கிடைக்கும்? தாயின் அன்பையும் கடவுளின் அன்பையும் எங்கே பெறலாம்? என்று ஏங்கி தவித்துக்கொண்டிருந்தார். ஆனால் உண்மையான அன்பை உலகில் எங்கும் பெற முடியாமல் மிகவும் மனம் சோர்ந்து அநேக முறைகள் தற்கொலை செய்து தன் வாழ்வை முடித்துக்கொள்ள முயற்சித்தார். கொடிய ஆஸ்துமாவும், சிறுநீரகக் கோளாறும் **(Renal failure)** பல ஆண்டுகளாக அவரை வாட்டியது. இறுதியில் தன்னுடைய 29-ம் வயதில் அவர் ஒருவருக்கும் தெரியாமல் பொட்டாசியம் சயனைடு அருந்தி தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த போது இயேசுகிறிஸ்து அவருக்கு தரிசனமாகி "என் மகனே!" என்று அன்புடன் அழைத்து, அரவணைத்து, அவருக்கிருந்த எல்லா வியாதிகளையும் குணமாக்கினார். இயேசுவின் அரவணைப்பில் சகோதரனுடைய துயரங்களெல்லாம் மறைந்தது. அந்த நாள் முதல் இயேசுவே அவருக்குத் தாயும் தகப்பனுமாயிருந்து வழி நடத்தி, கண்ணீரைத் துடைத்து அவரை குடும்பமாக ஆசீர்வதித்து நடத்தி வருகிறார்.

மேலும் இயேசுகிறிஸ்து சகோதரனுடைய கரத்தில் "அன்பரின் ஊழியம்" என்கிற ஊழியத்தைத் தந்து பல்வேறு காரணங்களினால் துயருறும் மக்களை ஆறுதல்படுத்தி, மெய் சமாதான, சந்தோஷத்திற்குள் வழிநடத்தும்படியாக சகோதரனை வல்லமையாக பயன்படுத்தி வருகிறார். இயேசுவின் அன்பின் வல்லமையினால் துயர்துடைக்கும் கருவிகளாக அன்பின் ஊழியம் மாதாந்திர பத்திரிக்கை, புத்தகங்கள், கடித ஊழியம், ஒலி, ஒளி நாடாக்கள், நற்செய்திக்கூட்டங்கள், போட்டோபைல் ஜெபத்திட்டம், தொலைக்காட்சி ஊழியம், தொலைபேசி ஊழியம், தனி ஜெப ஊழியம் ஆகியவை பயன்பட்டு வருகின்றன. நீங்களும் இவ்வூழியத்தின் மூலம் பயன்பெற விரும்பினால் சகோதரனுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

சகோதரன் அநேக நாட்கள் உபவாசத்திற்குப் பின்னும், கண்ணீரின் ஜெபத்திற்குப் பின்னும் எழுதிய புத்தகம் தான் **"ஞானமும் வெற்றியும்"** இப்புத்தகத்தை வாசிக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் இயேசு தமது ஞானத்தினால் நிரப்பி வாழ்வில் வெற்றி மேல் வெற்றியை தந்தருளுவாராக!

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Bro. Dr. Ananda Stira,

Anbarin Oozhiyam

40, S.P.K.Street, Woriur, **Trichy - 620003** Tamil Nadu, South India.
Phone: 00-91-431- 2765386,2765952,2760603,2760604,2760605
Fax: 00-91-431- 2761891
Email: dranandastira@mojindia.org, info@mojindia.org
Website: www.mojindia.org